

எட்ட
நின்று
சுட்ட
நிலா
பாலகுமாரன்

# எட்ட நின்று சுட்ட நிலா

ஒரு வீட்டிற்கு மூத்த மகனாகவும், மூன்றாவது பிள்ளையாகவும் இரண்டு தம்பிகளுக்கு அண்ணனாகவும் இருப்பது எவ்வளவு கொடுமையானது என்பது வாழ்ந்து பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். காலில் விலங்கும், தலையில் பாறாங்கல்லுமாய் சுடுமணலில் கோட்டை கட்ட வேலை செய்யும் சுமை கூலிபோல வாழ்ந்தாக வேண்டும். அடிமையாய் இருக்க வேண்டும். அடிமையாய் இருப்பவனுக்கு ஆசைகளே இருக்கக்கூடாது. இருந்தாலும் வெளியே சொல்லக்கூடாது.

பாபு தன் ஆசையாய் ஒரு வேண்டுகோளை வீட்டில் வைத்தபோது அத்தனை பேரும் சீறினார்கள்.

''ஆரம்பிச்சிட்டியா. நீயும் உன் கைவரிசையை காட்ட ஆரம்பிச்சுட்டியா. நீ ஒருத்தன்தான் துணையா இருப்பேன்னு நினைச்சேன். உனக்கும் தனியா போக ஆசை வந்துடுச்சா'' அப்பா சீறினார்.

''நீ இருக்கிற எடத்துல என்ன முள்ளா குத்துது. சுத்தியிருக்கிறவங்கள்லாம் பேய் பிசாசாவா தெரியறாங்க. அது என்னா தனிமை. படிக்கிற வரைக்கும் அப்பன் ஆத்தா வேண்டியிருந்தது. இப்போ வேலைக்கு போன பிறகு தனிமை தேவைப்படுதா'' அம்மா கத்தினாள்.

''அப்படீன்னா நானும் தனி, பாபுக்கு என்னா கொடுக்கறீங்களோ அது எனக்கும் கொடுக்கணும்'' எது பற்றியும் தெளிவு இல்லாமல் தம்பி பேசினான்.

''அந்தமாதிரி இடமெல்லாம் கொடுக்காதம்மா. இது கெட்டுப் போறதுக்கு உண்டான வழி. தண்ணி அடிக்கற துக்கு கஞ்சா பிடிக்கறதுக்கு வசதி பாக்கறானுங்க.'' புருஷனோடு வீட்டிற்கு வந்திருந்த இரண்டாவது அக்கா உரத்த குரலில் கண்டித்தாள்.

பாபு வீட்டை விட்டு தனியாக போக வேண்டுமென்று கேட்கவில்லை. வீட்டிற்குள்ளேயே தனியாக ஒரு ரூம் வேண்டும் என்று கேட்டான். மாடியில் குடிசை போட்டு கொள்ளவா என்று கேட்டான் காற்றிற்காக வராண்டா வில் படுப்பது என்பது ப்ளஸ் டு படிக்கும் போது வந்தது. நீள ஒயரும் பல்புமாய், படிக்க ஒளி வசதி செய்து தரப்பட்டது. பழைய மெத்தையில் இரண்டு தலையணை களும் படுக்கையாக தரப்பட்டன. அந்த மெத்தையும், தலையணையும் அவன் அக்கா தூங்கியது கல்யாணம் ஆன மூன்றாம் நாளே அவள் புகுந்த வீட்டில் இருந்து அது திரும்பி வந்துவிட்டது.

''ஃபோம் மெத்தைதான் வேணும். இதுல படுத்தா உடம்பு நோவுதான். அவங்களுக்கு படுக்கவே முடியலை யாம்.'' வந்து அழுதாள்.

உடனே வீட்டார் பரபரத்து இரண்டு ஃபோம் மெத்தை வாங்கி அவள் வீட்டில் இறக்கினார்கள்.

''ஒரு பஞ்சு மெத்தைதானே கொடுத்தே, இப்போ ஒரு பஞ்சு மெத்தை எடுத்துட்டு போயிடவா.'' அப்பா மகளின் காதோரம் கேட்டார்.

''வேணாம். அதை மச்சினி எடுத்துட்டா. கேட்கா தீங்க'' அக்காவும் காதோரமாய் பதில் சொன்னாள்.



ஒற்றை மெத்தையாய் இருந்ததால் அது பாபுவுக்கு கொடுக்கப்பட்டது. அதில் சாய்ந்து கொண்டுதான் பாபு ப்ளஸ் டு படித்தான் பி. காம் தேறினான். அதை விரித்துக்கொள்ள வசதியான இடம் என்று மாடிவராண் டவிற்கு எடுத்து போனான்.

அந்த மேல்மாடி கதவு திறந்ததும் நான்கு மரத்தூண் களோடு ஆறடி அகலம் பனிரண்டு அடிநீளம் உள்ள வராண்டா மட்டும் இருக்கும். பிறகு வானம் பார்த்த தரைதான் இருக்கும். ஆனால் வெய்யில் விழாதபடிக்கு மேல்மாடியைச் சுற்றி மரங்கள் இருந்தன. தெற்கிலிருந்து காற்று தூங்குமூஞ்சி மரத்தின் ஊடே புகுந்து, தூக்கத்தை சுகமாக்கும். வீடு வடக்குப் பார்த்து இருந்ததனால் குளிர் நேரடியாக தாக்காது. சுற்றிக்கொண்டு வரும். இரண்டு போர்வை போர்த்திக் கொண்டால் சுகம். மழைக்காலம் மட்டுமே கடினம். அப்போது மாடிப்படி வராண்டாவிற்கு மாற்றிக்கொள்ள முடியும். அது மிகக் குறுகலான இடம். ஆனாலும் ஒரு ஆள் தூங்க முடியும்.

''மாடியில் பேய் வராது'' அவனைவிட மூன்று வயது கம்மியான தம்பி கேட்டபோது,

''வரும். கண்ணை இருக்கி மூடிக்சிட்டா, முகர்ந்து பார்த்துட்டு போயிடும்'' என்று பாபு பதில் சொன் னான்.

''ஏன் அப்படி?'' என்று தம்பி பயந்து நகம் கடித்த போது வேறு கற்பனைக்கு போனான்.

''நம்ம கண்ண மூடிக்கிட்டா நாம செத்து போயிட் டோம்னு பேய் நினைச்சுக்கும். செத்துப்போய்ட்டவங் களை பேய் ஒண்ணும் பண்ணாது. உயிரோடு இருக்கற வங்களை பேய்க்கு பிடிக்காது.''

தம்பி அதை நம்பினான். அம்மாவோடு படுத்துக் கொண்டான். அடுத்த தம்பி வம்பிற்கு வராதவன். பாதி சாப்பிடும்போதே அவனுக்கு தூக்கம் வந்துவிடும். எங்கு சாப்பிட்டானோ அங்கே தூங்கிவிடுவதே அவன் வழக்கம். அவனைத் தூக்கிபோய் கிணற்றில் போட்டாலும் தூங்கிக் கொண்டுதான் இருப்பான். கண் விழிக்கும்போது மறுபடியும் எதாவது சாப்பிட கொடுத்துவிட வேண்டும்.

வீட்டில் ஹால் தவிர இரண்டு படுக்கையறைகள் இருந்தன. ஒன்றில் அப்பாவும் அம்மாவும் கடைசி தம்பியும் படுத்துக்கொள்வார்கள். அடுத்ததில் இரண்டு அக்காக்களும் திருமணம் ஆகும்வரை உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். திருமணம் ஆனபிறகும் புருஷனோடு வந்தால் தங்குவதற்கு அந்த அறை வேண்டுமென்றார்கள். அடிக்கடி ஏதாவது காரணம் சொல்லி இரண்டு மூன்று நாட்கள் வந்து தங்கினார்கள். இந்த இரண்டு அறையையும் தவிர்த்து மாடியில் கொட்டகை போல போட்டுக்கொள்கிறேன் என்று அவன் சொன்ன போதுதான் வீடு எகிறி குதித்தது. பாபுவுக்கு இருபத்தைந்து வயது ஆனாலும் அதை பொருட்படுத்தாது, எகிறிக் குதித்தது.

வீட்டின் மீது குற்றம் இல்லை. பாபுவை வீடு அப்படி நினைத்தே பழகிவிட்டது.

பாபு சரியாக இல்லை. படிப்பைத்தவிர விளையாட்டிலோ, பாட்டிலோ, பேச்சிலோ கெட்டிக்காரனாக இல்லை. ஏழாவதும், ஐந்தாவதும் படிக்கிற தமக்கைகள் காலில் சலங்கைக் கட்டி நடனமாடிய பொழுது பரதநாட்டியம் கற்றுக்கொள்கிறபோது, முதல் வகுப்பில் படிக்கும் பையனாய், அரை நிக்கரும் வாயில் விரலும் போட்டு எச்சில் வழியும் பையனாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். தமக்கைகள்



பரதநாட்டியம் ஆடியபோது கைதட்டிப் பாராட்டியவர்கள். அவர்களை அள்ளியெடுத்து முத்தம் கொடுத்தவர்கள் அரை நிக்கரோடு இவன் தா, தையன்று நடனமாட வாய்விட்டு சிரித்தார்கள். நீ ஆம்பளையா, பொம்பளையாடா என்று கேலி செய்தார்கள்.

ஆண் நாட்டியம் ஆடினால் சிரிப்பார்கள் என்று அவன் ஐந்து வயதாய் இருந்தபோது தெரிந்து போயிற்று. கேலி செய்வார்கள் என்பதால் பாடவும் பயமாக இருந்தது.

ஆனால் பாபுவுக்கு அடுத்த தம்பி பாஸ்கருக்கு ஐந்து வயதில் கிருஷ்ணர் வேஷம் போட்டு கையில் புல்லாங்குழல் கொடுத்து மேடையில் நிற்க வைத்து அவனைச் சுற்றி சுற்றி நடனமாடினார்கள். அப்போது நடனமாடிய பெண்களைவிட குண்டாய், மேடை நடுவே சிரித்துக் கொண்டிருந்த பாஸ்கர்தான் பாராட்டப்பட்டான். பாபுவை கொண்டை ஊசியை எடுத்து வரவும், காலுக்கு கீழே உட்கார்ந்து புடவை மடிப்பை பிடிப்பதற்கும் உபயோகப்படுத்திக் கொண்டார்கள். இதுவும் கொஞ்சநாள்தான். பாபுவுக்கு பத்து வயதானபோது பெண்கள் புடவை கட்டிக்கொள்ளும் இடத்திற்கு வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். பாஸ்கர் மட்டும் குழந்தை என்று அனுமதித்தார்கள். பாபு இந்த சின்னச் சின்ன அவமானங்களால் மனமுடைந்து போனான். தனிமையானான்.

பாஸ்கருக்கு அப்புறம் பிறந்தவன் வினோத்.

''ஒரே ஒரு புள்ளை கொடுன்னு பகவான்கிட்டே கேட்டேன். ஒன்னுக்கு மூணா கொடுத்தான். எனக்கு என்ன குறை'' அம்மா வினோத்தை அள்ளிக்கொண்டு பேசினாள்.

அங்கேயும் பாபு வேலை செய்ய வேண்டி இருந்தது. பவுடர் பால் கரைப்பதற்கும், உலர்ந்த துணிகளை கொண்டு வருவதற்கும், வினோத் அழாமல் இருக்க கிலுகிலுப்பை ஆட்டவும் பாபு தேவையாக இருந்தான். இதற்காக அவன் விளையாட்டு நேரங்களை தியாகம் செய்ய வேண்டி இருந்தது.

பசிக்கிறது என்று பாபு கத்தினால் வினோத்திற்கு உணவு ஊட்டிய பிறகே அவனுக்குக் கிடைத்தது.

பாபு தமக்கைகளுக்கு வேலைக்காரன். வினோத்துக்கும் பாஸ்கருக்கும் காவல்காரன். ஆனால் அவன் மீது அக்கறைபடுபவர்கள் இல்லை. அவன் உணர்வுகளை மதிப்பவர்கள் ஆரம்பத்திலேயே இல்லை.

அவனுக்கு பதினைந்து வயது ஆனபோது முதல் அக்கா கீதாவுக்கு வரன் தேடத் துவங்கினார்கள். வரன் தேட ஆரம்பித்த உடன் இரண்டு தமக்கைகளுமே நாட்டியத்தை நிறுத்திக் கொண்டார்கள்.

நாட்டியத்தை நிறுத்தியதுமே இரண்டு பேரும் குண்டாகி விட்டார்கள். அம்மாவோடு சிறிய விஷயத்திற்கும் சண்டையிட்டார்கள்.

''உனக்கு ட்ரஸ்ஸ பத்தி என்ன தெரியும்?'' என்று இறுக்கமான சுடிதார் போட்டு அம்மாவிடம் கத்தினார்கள்.

அம்மா அவர்களை எதிர்க்க முடியாமல் தவித்தாள். இதுகளுக்கு கல்யாணம் பண்ணவேண்டுமே என்று அப்பாவை நச்சரித்தாள். பாபுவின் அப்பா சாமிதுரைக்கு வேலை என்று ஏதுமில்லை. கார் புரோக்கராய் சிறிது நாளும் ரியல் எஸ்டேட் ஆளாய் சிறிது நாளும், வெள்ளைக் காகிதம் வாங்கி வைத்து விற்கும் ஆளாய் சிறிது நாளும் பாட்டிலில் அடைக்கப்பட்ட காபி பொடிக்கு ஏஜென்டாய் சிறிது நாளும் இருந்தார்.



அந்த மாதம் வாங்கும் காசு அந்த மாதமே செலவானது. ஆடம்பரம் கொடி கட்டி பறந்தது. அவன் அப்பா நிரந்தரமாக இருந்தது ஒரு கோவிலில் டிரஸ்டியாக மட்டுமே.

நூறு வருடத்திற்கு முன்பு பாம்பு புற்று இருந்த இடத்தில் யாரோ கல் நட்டு சாமி கும்பிட அன்றைய அப்பாவை வசதியுள்ளவர் என்று நினைத்து யாரோ டிரஸ்டியாக போட்டார்கள். காலப்போக்கில் ஓலைக் கூரைக்கோயில் கருங்கல் தளமாய் கோபுரமாய் மாற அப்பா அதிக உரிமையை எடுத்துக் கொண்டார். தனக்கு சம்பளம் போட்டுக் கொண்டார்.

''சம்பளம் சொற்பமாக இருந்தாலும் பல விஷயங்கள் அவருக்கு உதவியாக இருந்தன. கோவிலுக்கு காசு வாங்கி பெயின்ட் அடித்தவர்கள் வீட்டிற்கு இலவசமாய் பெயின்ட் அடித்து கொடுத்தார்கள். கோயிலுக்கு கிணறு தோண்ட டென்டர் எடுத்தவர்கள் வீட்டிற்கு குழாய் போட்டு கொடுத்தார்கள். கோயில் நகைகள் வீட்டிலிருந்தன. கோவில் பொங்கலே வீட்டிலும் டிபனிடப்பட்டது கோவிலில் உற்சவம் நடந்தால் வீட்டினில் காசு புழங்கியது.

கோவில் படம் போட்ட லெட்டர் ஃபேடும், விசிட்டிங் கார்டும் அப்பாவுக்கு பெரிய மரியாதையை கொடுத்தன.

''புறம்போக்கு நிலத்தை வளைக்க சம்பந்தப்பட்ட அதிகாரியை கோவிலுக்கு வரவழைத்து குளிர குளிர உபசரித்து விழா நடத்தி திண்டு மாலைபோட்டு ,அதிகாரியின் குடும்பத்துடன் ஃபோட்டோ எடுத்து ஆல்பம் செய்து அதை கொடுத்து விடுவார். காரியம் சாதித்துக் கொள்வார்.

அப்பா ஒரு நாளும் கோவிலில் கண்மூடி நின்றதில்லை அமைதியாய் இருந்ததில்லை. அப்பா ஆத்திரமும் கோப

மும் கொள்ளுமிடம் கோயில்தான். அவர் ஆணவத்தின் உச்சக்கட்டம் அங்கேதான்.

மீசை முறுக்கி நெற்றியில் பெரிய குங்குமமிட்டு தோளில் துண்டு தொங்க பழங்காலத்து ஜமீன்தார் மாதிரி அப்பா அலைவது அங்கேதான்,

பத்தாவது பரிட்சைக்கு படிக்கும் போது பாபு கோவிலில் போய் உட்கார்ந்து கொள்வான்.

''மார்க் வேணும்னா பாடம் படிடா. கோவில்ல என்ன இருக்கு'' அப்பா குங்குமப் பொட்டோடு நாத்திகம் பேசினார்.

''இந்த அம்பாள் வரபிரசாதி. மனுஷாள் முயற்சியில தான் கடுமையான உழைப்பிலதான் வெற்றி கிடைக்கும் என்பது உண்மை ஆனால், அந்த முயற்சியை கடும் உழைப்பை யார் கொடுப்பது, முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை யார் தருவது யாரால தர முடியும். கடவுளால்தான் தரமுடியும். எனவே, தினமும் வந்து மனம் உருக நில் வெற்றி தானே வரும். பிரார்த்தனை செய். நீ ஜெயிப்பாய்.'' கோவில் குருக்கள் அவனுக்கு அறிவுறுத்தினார். குருக்கள் பேச்சு பிடித்துப் போனது.

கோவில் என்பது அப்பாவுக்கு வேறாகவும் அவனுக்கு வேறாகவும் மாறியது.

அதே போல் திருமணமென்பது கீதா அக்காவுக்கு வேறாகவும், அப்பாவுக்கு வேறாகவும் போயிற்று. அப்பாவை அக்கா மதிக்கவேயில்லை.

அக்காவும் அடிக்கடி கோவிலுக்கு வந்தாள். சாமி கும்பிட, கோலம் போட திருமண வேண்டுதலாய் வலம் வர என்று எல்லோரும் நினைத்தார்கள். இல்லையென்பது பாபுவுக்கு ஒரு வாரத்தில் தெரிந்து போயிற்று.



கோவில் பின்பக்கம், கிணற்றங்கரை அருகே பெண்கள் குளிக்கும் அறையில் இருந்து ஒரு ஆள் வெளியில் வருவதை பாபு பார்த்தான்.

யார் அது என்று குரல் கொடுக்கும்முன்னே அக்கா வெளியில் வந்தாள். பாபு வாயடைத்துப்போய் நின்றான். அக்காவும் அந்த ஆளும் டாட்டா காட்டிக் கொண்டார்கள்.

அந்த ஆள் டாக்டர், அவனுக்கு வேலை தெரியாது என்று அந்தப் பேட்டையில் அவனுக்கு கெட்ட பெயர் உண்டு. ரொம்ப அழுக்கான டிஸ்பன்ஸரி என்று யாரோ ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். அவனைப் பார்த்தால் திருமணம் ஆனவரைப் போல் இருக்கும். ஆனால், இன்னும் திருமணமாகவில்லையென்றும் கேள்விப் பட்டிருக்கிறான்.

மறுநாள் அக்கா கோவிலுக்கு போகும் போது அவனும் பின்னால் போனான். செருப்புப் பார்த்துக் கொள்வதை காண்ட்ராக்ட் எடுத்த தங்கராஜுவோடு பேசும்போது அந்த டாக்டர் உள்ளே போனான். பாபு எதுவும் அறியாதவன் போல் பின்னே போனான். நேரடியாய் சன்னதிக்குப் போகாமல் கோவிலின் வலதுபுறம் சுற்றிப் போனான். ஆண்கள் குளிக்கும் இடத்தின் உள்ளே நுழைந்து பெண்கள் குளிக்கும் சுவர் பக்கம் காது வைத்துக் கேட்டான்.

''நான் எங்க அப்பாகிட்ட நம்ம லவ் பத்தி சொல்லிட போறேன்'' கீதாவின் குரல் கேட்டது.

''ஐயோ இப்ப வேணாம்'' டாக்டர் குரல் கெஞ்சியது.

''இதெல்லாம் வேணும் கல்யாணம் மட்டும் வாணாமா'' கீதாவின் குரலில் கொஞ்சல் இருந்தது.

முத்தம் கொடுத்துக் கொள்ளும் சத்தம் கேட்டது.

''கொஞ்சம் டைம் கொடும். நான் எங்க வீட்டுல பேசி உங்க வீட்டுக்கு வரச் சொல்றேன்.''

''எவ்வளவு நாள்?''

''ஒரு வருஷம்.''

''அதெல்லாம் முடியாது. நான் இப்பவே போய் எங்க அப்பாகிட்ட சொல்லப் போறேன்.''

''அவசரப்படாத பொறு ஒரு மாசம் டைம் கொடு.'' டாக்டர் 'தடா'லென்று இறங்கி வந்தான்.

ஒரு மாசத்துல முடிவு சொல்லிடணும் அக்கா வற்புறுத்தினாள்.

''சொல்லிடலாம். உன் தம்பியேன் உன் பின்னாடியே வரான் நீதான் காவலுக்கு கூட்டின்னு வரியா.''

''நான் கூப்படறதில்லே அவன் தினமும் வருவான்.''

''நீ டிஸ்பன்ஸரிக்கு வந்துடேன்.''

''ஏன்?''

''கோயில்ல உன் தம்பி நம்பள பார்த்துட்டா.''

''அது பைத்தியம். கண்ணை மூடிக்கின்னு எங்கை யாவது உட்கார்ந்திருக்கும், பார்க்காது.''

பாபுவுக்கு கோபம் வந்தது. பெண்கள் குளிக்கும் அறையை தடேரென்று திறக்கும் ஆவேசம் வந்தது. அடக்கிக் கொண்டான். அதற்கு பிறகு ஆபாசமான சிரிப்புகளும் முனகல்களும் கேட்டன. அவன் நின்றிருந்த கதவை ஓசைப்படாமல் திறந்து சன்னதிக்கு முன்னால் வந்து அமர்ந்து கொண்டான். கண்களை மூடிக் கொண் டான். குளியலறை ஓசைகள் தொடர்ந்து காதுகளில் கேட் டன. அந்த ஓசைகளால் அக்காவும், டாக்டரும் கட்டித் தழுவிக் கொண்டிருப்பதாகக் காட்சிகள் தோன்றின.''



''யார் அது'' யாரையோ உரக்கக்கேட்பது காதுகளில் கேட்டது.

அந்த கேள்வியை பாபு பிடித்துக் கொண்டான். யார் அது? யார் அது அக்கா? யார் அது கீதா? யார் அது டாக்டர்? யார் அவன்?

''அவர்களை கண்டு ஆவேசப்படும் பாபுவான நான் யார்? எதற்கு நான் ஆவேசப்படுகிறேன். எனக்கும் அவர் களுக்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் இல்லையெனில் ஏன் ஆவேசப்பட்டேன் சம்பந்தம் உண்டு எனில், ஆவேசத்தால் என்ன பயன்.''

''உண்மையில் ஆவேசப்படுவது எது? என் மனசா. எதனால எனக்கு இப்படியொரு அனுபவம் இல்லையென பதாலா அல்லது அவர்களது செய்கை தவறு என்று எனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டதாலா.''

''என் மனசு இதை ஏன் தவறு என்று சொல்கிறது. எனக்கு ஏன் இவ்விதம் சொல்லிக் கொடுக்கப்பட்டது?''

''யார் சொல்லிக் கொடுத்தார்கள். ஊர் சொல்லிக் கொடுத்தது. மனசு ஏற்றுக் கொண்டது.

''அப்போது 'மனசு என்பது நானா? எது மனசு? மனசு எங்கே இருக்கிறது? மனம் என்பது புத்தியா, இருதயமா? எது மனசு?''

''நினைவுகளின் தேக்கம்தான் மனசு. நினைவுகளின் தேக்கம் எங்கே இருக்கிறது? மூளையில் இருக்கிறது.''

''அப்போது மூளை என்பது நானா? மடிப்பு மடிப் பான வெள்ளைக் கோளம்தான் நானா? அங்கு மறதியும் உண்டே. நான் படித்தது மறந்து போய் விடுகிறதே. போட்டுப் பார்த்த கணக்குகள் ஞாபகமில்லையே.''

நான் என்கிறபோது என் மூளையையா நினைக்கிறேன். நெஞ்சில் அல்லவா கை வைக்கிறேன். பசிக்கிறது என்றால் வயிற்றை காண்பிக்கிறேன். கெட்டிக்காரன் என்றால் மூளையை காண்பிக்கிறேன். உரம் மிகுந்தவன் என்றால் புஜம் காண்பிக்கிறேன். நான் என்றால் நெஞ்சைக் காட்டுகிறேன்.

அப்போது நான் என்பது புத்தியல்ல. புஜமல்ல வயிறுமல்ல.

நான் என்பது உடல் வலுவல்ல கெட்டிக்காரத்தனமல்ல. நான் வேளா வேளைக்கு சோற்றுக்கு அலைபவனுமல்ல.

''அப்போது நான் யார்?'' எங்கே இருதயம் இருக்கிறது. மார்பா? இருதயமா நான்? இருதயத்தில் என்ன இருக்கிறது என்ன இருக்கிறது என்று யார் தேடுகிறார்கள்? இப்போது இருதயத்தை யார் உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கண்களா அதுமூடி இருக்கின்றதே. காதுகள் வழியாக பார்க்கிறேனா வெளிச்சத்தம் கேட்டுக்கொண்டிருக்கிறதே மூளையால் பார்த்துக் கொண்டிருக்கிறேனே அது, எதன் வசமும் இல்லாமல் ஒரு கணிப்பொறி போல் தானாக இயங்கிக் கொண்டிருக்கிறதே.

அக்கா கீதாவை வேவு பார்த்தது யார்? யார் அது? யார் அந்த நான்? யார் பாபு? அந்த பாபு என்று என்னை யார் நினைக்கிறார்கள். நெஞ்சுக் கூட்டுக்குள் இருதயத்தின் அருகே மனசு இருந்தது. ஏதோ குகை மாதிரி போயிற்று.

வெளியே எல்லா சத்தங்களும் கேட்டன. அவைகளோடு ஒட்டுதல் போயிற்று. உட்கார்ந்திருப்பது தெரிந்தது. ஆனால் அது வேறு யாரோ என்பதை போல அறியமுடிந்தது. உள்ளே யாரோ அசையாமல் இருந்தார்கள். பாபு என்கிற எண்ணம் நெஞ்சடியில் இருந்துதான்



கிளம்பியது பாபுவாகிய நான் என்பதை அங்கேதான் உணர முடிந்தது.

'அந்த நானில் நிற்க, உறக்கம் போலும் ஒரு அமைதி வந்தது. அந்த அமைதி எதனோடும் எவரோடும் சம்பந்தமில்லாமல் இருந்தது காதுகளில் ரீங்காரம் ஏற்பட்டது அந்த ரீங்காரமே தன்னுள்ளும் இருப்பது புரிந்தது. பாபு உள், வெளி இரண்டையும் புரிந்துகொண்டான். வினோதமாய் உணர்ந்தான். உடம்பு வேறு, நான் வேறு என்பது ஆனான். அதே சமயம் உள்ளிருப்பதை வெளியிருப்பதாய் உணர்ந்தான். உடம்பில் ஒரு கிளர்ச்சி படர்ந்தது. உடம்புக்கு வெளியே இருக்கின்ற சக்தியும் உள்ளிருப்பதும் ஒன்றே என்று தோன்றியது.

எங்கும் சக்தியாய் எல்லாமும் சக்தியாய் தென்பட்டன: மனிதனாய், எறும்பாய், மிருகமாய், பறவையாய், செடி கொடியாய் இடையறாத ஒரு சக்தி பரவிக் கிடந்தது.

''இந்த பாபுவான மனிதன் இடையே வந்தவன் அந்த சக்தி அநாதியானது. எங்கும் இருப்பது. எப்போதும் இருப்பது. துகள் துகளாய் எங்கும் பரவிய சக்தி அது. அதுவே ஒலி. அதுவே ஒளி. அதுவே எல்லாம். மிகுந்த சந்தோஷத்துடன் அதை நெருங்கி உணர பாபுஇனம் புரியாத பரவசத்தில் 'ஓ' வென்று அலறினான். உடம்பு உதறி போட்டது. உடம்பாகவும், உடம்பு இல்லாமலும் தன்னை உணர்ந்தான்.''

யாரோ அவனைத் தொட்டார்கள். சக்தி கலைந்தது.

யாரோ அவனை உலுக்கினார்கள். பாபு கஷ்டப்பட்டு கண்ணைத் திறந்தான். தரையில் இருந்தான், அப்படியானால் தான் இதுவரை இருந்தது எங்கே? அந்த தான் எது? அதுவா, எது அது சொல்ல முடியவில்லையே. உணர முடிந்ததை சொல்ல வார்த்தையே இல்லையே

எதை சொல்லவும் சொல்லிருக்கிறதே இதற்கு மட்டும் ஏன் இல்லாமல் போயிற்று. என்ன விசித்திரமிது.

''என்ன பாபு என்ன ஆச்சு'' கோவில் மடப்பள்ளி ஆள் உலுக்கிக் கொண்டிருந்தார்.

குருக்கள் இடுப்பில் கையை வைத்து அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அம்மா நெத்தியில கைவச்சுட்டா. அதான் கத்தியிருக்கான். என்ன அம்மா வந்தாளா?'' என்று கேட்டார்.

அம்மா, அப்பா, அது எல்லாம் ஒன்றே என்று அவனுக்குத் தோன்றியது. பாபு வினோதமாக சிரித்தான், தெரியவில்லையென்றான்.

''ஓய்...மடப்பள்ளி, நான் ஒண்ணு சொல்றேன் கேளும். அந்த குடும்பத்துலேயே இந்த ஒரு புள்ளைதான் ஓஹோன்னு வரப்போறான்...முகத்துல பித்து தாண்டவமாடறத பாரும். கண்ணுல சுடர் தெரிகிறது பாரும் இது சாதாரண புள்ளை இல்லை ஓய்'' குருக்கள் மறுபடியும் கூறினார். மணியடித்து கற்பூரம் காட்டினார்.

பாபு கற்பூரம், அம்மன் சிலை, குருக்கள், அவர் கையில் ஆடும் மணி, கதவு, திரைச்சீலை எல்லாவற்றையும் கும்பிட்டான். சிரித்தான்.

வீட்டிற்கு திரும்பும்போது ஒவ்வொரு அடியும் சந்தோஷமாக இருந்தது. எல்லாமும் நானே என்று தோன்றியது. அவனை கண்டு எப்போதும் பயப்படும் நாய்கள், அவனை உரசிக்கொண்டு சுற்றி வந்தன. பாபு...பாபு என்று நாய்களை கூப்பிட்டான். தானும் வாலாட்டுவதாய் உணர்ந்தான்.

எல்லாவற்றின் மீதும் ஒரு நேசம், ஆழ்ந்த துக்கமாய் வெளிப்பட்டது. அவன் வீட்டிற்கு வந்தது யாருக்கும் தெரியவில்லை. உறங்காமல் படுத்து கிடந்தது பற்றி



யாரும் கேட்கவில்லை. தூங்கியதுபோல் கிடந்து விட்டு எழுந்தபோது நேற்றைய வேகம் குறைந்தும் இருந்தது. நாளாக நாளாக மெல்ல மறைந்தது. மறுபடி பலமுறை கண்மூடி உட்கார்ந்து இருந்தும் அன்றைய அனுபவம் கிடைக்கவில்லை. ஆனால் அந்த அனுபவம் உள்ளுக்குள் தங்கி அவனை மென்மையாக்கியது. அதிகம் பேசாத மௌனியாக்கியது.

ஒருமாதம் கழித்து அப்பா அவனை கூப்பிட்டார்.

''உனக்கு ஏதோ சாமி வந்துதாமேபா. என்கிட்ட சொல்லவேயில்லையே.''

''வரலைப்பா''

''ஓ'ன்னு கத்தினியாமே''

''தெரியலைப்பா''

''அந்த குருக்கள் உன்னை ஆஹா, ஓஹோ என்றாரு.''

பாபு எந்த சலனமும் இல்லாமல் அதை கேட்டுக் கொண்டிருந்தான்.

''எலி காலில் ஏறி ஓடியிருக்கும் பயந்து 'ஆ'ன்னு கத்தியிருப்பான். அது சாமி வந்ததா ஐயரு சொல்றாரு'' கீதா கேலி செய்தாள். அப்படித்தானே என்று வற்புறுத்தினாள்.

மெல்லிய குரலில் பாபு 'ஆமாம்' என்றான்.

அவன் எப்படி உதறி இருப்பான் என்று கீதா நடித்துக் காட்டினாள். கீதா அதை வேறுவிதமாய் செய்து காட்டினாள். பாஸ்கர் எகிறி எகிறி அதீதமாய் நடித்தான். வீடு கைகொட்டி சிரித்தது, பாபுவும் சிரித்தான்.

''இதோ பார் உனக்கு ரெண்டு அக்கா, ரெண்டு தம்பி நீ பாட்டுக்கு எங்கியாவது சாமியாரா போயி டாதே புரியுதா'' அப்பா சட்டென்று கோபமாய் கத்தினார்.

எங்கு போக முடியும்? எல்லாமும் சக்தி ரூபமெனில் யாரை விடமுடியும் போய் என்ன செய்ய? உயிரோடு இருக்கும்வரை எவரோடு விதித்திருக்கிறதோ அவரோடு இருந்துவிட்டு போக வேண்டியதுதான். பாபுவுக்கு நெஞ்சில் எண்ணங்கள் ஓடின. அவன் எல்லோரையும் நேசித்தான். அந்த நேசிப்பில் ஒரு விலகல் இருந்தது. விலகியிருந்து நேசிப்பதே விரும்பத்தக்கதாய் இருந்தது.

எதுவெனினும் கோபமற்று இருப்பதே இயல்பாக இருத்தல் என்று தோன்றியது.

கோபம் என்பது எதிர்காலம் குறித்த கவலையோ அல்லது கடந்த காலத்தின் துக்கமோ என்பதாகத்தான் இருக்கிறது என்பது புலப்பட்டது. கடந்ததையும் மறந்து இனி வரப்போவதை அலட்சியம் செய்து எப்போதும் புதிதாய் இருக்க, கோபம் வரும் வாய்ப்பே இல்லையென்று தோன்றியது.

ஆனால் நிரந்தரமாய் இனம் புரியாத ஒரு ஆழ்ந்த துக்கம் இருந்தது.பதினைந்து வயது முடிந்து பதினாறாவது வயதில் பாபுவுக்குள் மலர்ந்தது என்ன என்று பாபுவுக்கே தெரியாது,

# 2

உலக வாழ்க்கை மிக வேகமான விஷயம். அங்கு வெற்றி என்பது மிகப்பெரிய போதையான விஷயம். பணம் என்பது சந்தோஷம், சுகம் என்று மனம் எண்ணு



கிறது. எல்லா சௌகரியங்களும் பணத்தால் வாங்கலாம் என்று எண்ணம் வருகிறது. புகழ் என்பது குதூகலம் என்று தோன்றுகிறது.

அடுத்தவர் புகழைப் பார்த்து தனக்கும் அது வேண்டுமே என்று தோன்றுகிறது. அடுத்தவர் வெற்றியைப் பார்த்து நானும் வெற்றிபெற வேண்டுமே என்று தோன்றுகிறது. இன்னொருவரின் செல்வச் செழிப்பைப் பார்த்து எனக்கெங்கே செல்வச் செழிப்பு என்று ஏங்கத் தோன்றுகிறது.

வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றியே துக்கமாக இருக்கலாம். பணம் உள்ளவனுக்கு அந்த பணத்தை பாதுகாப்பது மிகப்பெரிய வேதனை ஆகலாம். புகழ் உள்ளவனுக்கு அந்த புகழே வளரமுடியாத விலங்காகலாம் என்பது இவை இல்லாதவனுக்கு தெரியவில்லை.

தன்னை பிறர் வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே மனிதனின் இயல்பாகப் போகிறது. இந்த இயல்பே பொறாமையை அளிக்கிறது. இந்த பொறாமை ஆவேசத்தைக் கொடுகிறது. இந்த ஆவேசத்தில் வெற்றி பெறும் வாய்ப்பினை தேடத் துவங்குகிறது. இந்த தேடலில் தடைகளும், அவமானங்களும் வர சோர்ந்து போய் முகத்தில் அடித்துக்கொண்டு அழ ஆரம்பிக்கிறது. இந்த அழுகையில் வெற்றி பெற்றவர்மீது இழித்தலும் பழித்தலும் பேசப்படுகின்றன. இதனால் துக்கம் பெரிதாகி துக்கம் தந்த தொய்வினால் வெற்றியை நோக்கி ஒரு அடி கூட எடுத்து வைக்க முடிவதில்லை.

ஒப்பிடுவதை விட்டு விட்டு இன்னொருவரின் வெற்றிக்கு காரணம் என்ன என்பதை ஆராய்வதைவிட்டு விட்டு, தனக்கு என்ன வேண்டும் என்று தன்னைத்தானே கேள்விக் கேட்டுக் கொண்டிருந்தால் போதும். தனக்கு

இது வேண்டும் என்று மனம்சொல்ல ஏன் என்ற கேள்வியும் உடன்வரும். அந்த கேள்விக்கு இதனால் இது வேண்டும் என்றே பதிலும் வரும். இந்த பதிலுக்குப்பிறகு தான் பெற அது தகுதியோ என்ற கேள்வியும் வரும். உண்மையாய்க் கேட்டுக்கொண்டால் என்னென்ன தகுதிகள் இல்லை என்பது தெரியவரும். என்ன தகுதி இல்லை என்று தெரிந்துவிட்டால் அதை உருவாக்கிக் கொள்ளும் எண்ணம் வரும். அந்த எண்ணம் திடப்பட்டால் தன்னை தகுதி யாக்கிக் கொள்ளும் உழைப்பு வரும். உழைப்பு கடுமை யானால் ஒரு நாள் வெற்றி வந்தே ஆகவேண்டும். அது வரும்வரை நெல்முனை அளவுக்கூட சோர்வு இல்லாமல் உழைக்கும் எண்ணம் வரும்.

உழைக்க, உழைக்க உழைப்பின் சந்தோஷம் பிடி பட்டுவிடும். அந்த நேரம் அவ்வப்போது வந்துகொண் டிருக்கிற வெற்றியைவிட தொடர்ந்து உழைப்பிலேயே மனம் லயிக்க வெற்றி, புகழ், பணம் முக்கியமாய் தோன் றாது. அவை இயல்பாய் சாதாரணமாய் போகும்.

அப்போது உழைக்காதவர்கள் கொண்டாடுவார்கள். பொறாமைப் படுவார்கள். உழைப்பவனுக்கு கொண் டாட்டமும், தொடர்ந்து உழைப்பிலேயே மனம் லயிக்கும். அப்படி லயிக்க எது வெற்றி எது புகழ், எது பணம் என்ற கேள்விகள் வரும். இவை எதுவும் வெற்றி யில்லை என்பது தெளிவாகும். இவை எதிலும் நிறை வில்லை என்பது தெரியவரும். அந்த இடமே ஞானம் அதுவே தெளிவு.

யாரையோ வெல்ல வேண்டும் என்ற போர் ஒழிந்து உயிரோடு இருக்கும்வரை உழைக்க வேண்டும் என்பதே உண்மையாகும்.

தன் காரியங்களில் மட்டும் எந்த எதிர்பார்ப்புமின்றி முழுமையாய் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்.



பாபு பத்தாவது பாஸ் செய்யும்போது தன் காரியங் களில் முழுமையாய் ஈடுபட தெரிந்துகொண்டு விட்டான். படிப்பதே இப்போது முக்கியமான வேலை என்பதை புரிந்து கொண்டு விட்டான். படிப்பில் வெற்றி பெறுவதே தவிர வேறு எதுவும் முக்கியமில்லை என்று தெரிந்து கொண்டு விட்டான். அதற்கு எத்தனை இடையூறுகள் வந்தாலும் கோபப்படாமல் இருக்கக் கற்றுக் கொண் டான். இடையூறுகளுக்கு கோபப்பட செயலில் பட படப்பு வந்து விடுகிறது. கோபம் ஞாபகசக்தியை குறைக் கிறது என்பதை புரிந்து கொண்டான். யார் என்ன வேலை ஏவினாலும் அதை எதிர்ப்பின்றி செய்துவிட்டு படிப்பிற்கும் அமர்ந்து கொண்டான்.

அக்காவின் காதல் அவள் விஷயம் அவள் முடிவு. அவள் தலையெழுத்து. அதன் நல்லதோ, கெட்டதோ தன்னை தாக்கப்போவதில்லை. அவளுக்கு உதவி வேண்டு மானால் செய்யலாம். உபத்திரவமாய் இருக்க வேண்டாம் என்று ஒதுங்கிக் கொண்டான்.

''டேய், உங்க அக்கா டாக்டர லவ் பண்ணுதா?'' பள்ளிக்கூடத்து பையன் கேட்டான்.

''ஆமாம்'' என்று பாபு பதில் சொன்னான்.

''உனக்கு இன்னொரு அக்கா இருக்குல்ல...அதை நான் லவ் பண்ணட்டுமா'' மீசை முளைத்த பையன் கண் சிமிட்ட ''யோக்கியதை இருப்பின் செய்'' என்றான். 'கனவு காண்பவனுக்கு எந்த யோக்யதையும் வராது' என்று சொன்னான்.

'நீ எங்க அக்காவ லவ் பண்றதா எங்க அப்பாகிட்ட சொல்லட்டுமா' என்று தொடர்ந்து கேட்டபோது பெரிய மீசைப் பையன் காணாமல் போனான்.

உண்மையை அமைதியாகச் சொல்ல அதை எதிர் கொள்ளும் தைரியம் எவர்க்கும் இல்லையேன்று தெரிந்து போயிற்று. செயலில் தைரியமுள்ளவன் வெறும் பேச்சு பேசமாட்டான் என்பதும் அறிந்து கொள்ள முடிந்தது.

ஆனால், திருட்டுத்தனத்தை எத்தனை நாள் ஒளித்து வைக்க முடியும்: இங்கே நிறைய பேர் திருடர்கள். திருடன் திருடுபவனை சுலபமாக இனம் கண்டு விடுகிறான்.

சீதாவின் மதர்த்த உடம்பை பார்த்து யாரோ அவள் போகும் வழியெல்லாம் பின்தொடர, தொடர்ந்தவனுக்கு தெரிந்து விட்டது: தொடர்ந்தவன் தனக்கு போட்டியாய் இருக்கும் டாக்டரை பார்த்து பொறாமைப்பட்டான் தீது பரப்பினான்.

அப்பாவுக்கு மொட்டைக் கடிதம் வந்தது. அப்பா திருடனுக்கெல்லம் பெரிய திருடன்: அவர் மகளை பின் தொடர்ந்தார்:

''என் கூட வா'' என்று பாபுவையும் அழைத்துக் கொண்டு ஐம்பது கெஜ இடைவெளிவிட்டு அக்காவை தொடர்ந்தார். வினாடி நேரத்தில் பாபுவுக்கு எல்லாம் புரிந்தது. யாருக்கும் எவருக்கும் எந்த இடையூறும் வர வேண்டாம் என்று உள்ளுக்குள் சிலவினாடிகள் மூச்சடக்கி கரம் குவித்தான்.

அப்பா அவர்களை கையும் களவுமாக பிடித்தார். அக்கா டாக்டர் மடியில் அமர்ந்திருந்ததை பார்த்தார். அக்காவை பாபுவோடு வீட்டிற்கு அனுப்பினார்.

''பாபுதான் காட்டி கொடுத்துவிட்டான்' என்று அக்கா சீறினாள். வீட்டிற்குவந்ததும் பாபுவை மாறிமாறி அறைந்தாள். கத்தியெடுத்து குத்த வந்தாள். என்னை குத்தினால் உனக்கு திருமணமாகும்மெனில் என்னை தாராளமாக குத்தலாம்'' என்று பாபு சொல்ல, கத்தியை தரையில் போட்டுவிட்டு அழுதாள். அங்கே டாக்டருக்கும் அறை விழுந்தது என்று பிற்பாடு தெரிந்தது.

''என் மகளை திருமணம் செய்யாவிட்டால் கொலையே நடக்கும்'' என்று மிரட்டப்பட்டது அங்கேயே



ஊரைக் கூட்டி ஒரு மாதத்தில் திருமணம் என்று முடிவு செய்யப்பட்டது.

திருமணத்திற்கு ஒப்புதல் தருவது தவிர வேறு வழி யில்லை என்று புரிந்துபோன டாக்டர் தழையத் தழைய கீழிறங்கி பேச,

''அவருதான் கல்யாணத்துக்கு சரின்றாரே'' என ஊர் அவனுக்கு உதவியாய் பேசியது:

''என்னடி முடிச்சுடலாமா'' அப்பா, ஊர் சமாதானப் படுத்திய பிறகு வீடு வந்து அம்மாவைக் கேட்டார்.

''முடிச்சுடுங்க. செலவு கம்மி, எதுனா இதை கொடு. அதைக் கொடுன்னு பேசினா வாய் மேலயே போடுங்க. விருந்துக்கு வான்னு கூப்பிட்டபோதுதான் விமரிசையா செய்வாங்க. வீட்டுக்குள்ள எட்டி பார்த்தவனுக்கு பிச்சை தான்னு சொல்லிடுங்க.''

பாபுவுக்கு சகலருடைய பேச்சும் விநோதமாய் இருந்தது.

''அவன் வீடு எப்படி? என்ன மாதிரி? ஒன்னும் தெரியலையே?''

''இன்னும் நல்லது, இட்டாந்து இங்கியே வச்சிட லாம்.''

''அது நல்லாருக்காது. தனிக் குடித்தனம் போயிடட்டும்.''

''அதுக்கும் நாமதானே தாங்கியாவணும்.''

''ஆமா எதுனா செய்யனுமில்லையா, கல்யாணத்தை கோயில்லை வச்சு சிம்பிளா முடிச்சுடறேன். கேட்டா வேண்டுதல்ன்னு சொல்லிடலாம்.''

அந்த டாக்டருக்கு விதவைத் தாயாரும், திருமண வயதில் ஒரு தங்கையும், புத்தி வளராத ஒரு தம்பியும்

இருந்தார்கள். அவனைத் தவிர சம்பாதிக்க எவரும் இல்லாத வீடு அது.

தனிக்குடித்தனமெனில் மாமியாரோடு தான் போக முடியும். பெரிய வீடு பார்க்கப்பட்டது. அக்காவுக்கு சௌகர்யமாய் மேல்மாடி வசதியோடும், கீழே மற்றவர் களுக்கு இடமுமாய் இருந்தது. வேறு கோயிலுக்கு சொந்த மான வீட்டை இருந்தவர்களை காலி செய்யவைத்து ஐநூறு ரூபாய்க்கு அப்பா பிடித்தார்.

திருமணம் சிறப்பாய் கோவிலில் நடந்தது. வீட்டிற்கு சாமான்கள் வாங்கிப் போடப்பட்டன. ஃபோர்ம் மெத் தையும் போடப்பட்டது.

''இதோ பாரி படுக்கற விஷயம்ன்றதால உடனே செஞ்சுட்டம், சும்மா சும்மா எதுனா கேட்ட நான் ரொம்ப பொல்லாதவனாயிடுவேன்.''

''உங்களுக்கு குறை வைக்கக் கூடாதுன்றதாம்மா நானும் கேட்டேன். கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில வேலை வாங்கி அப்பாவ தரச்சொல்லு ஆறாயிரம் சம்பளமாம் டாக்டருக்கு. நான் துரத்தியடிச்சு வேலைக்கு அனுப்ப றேன். நீ கவலைப்படாதே.''

''ரொம்ப மிரட்டாதடி. மாமியார்காரி எதுனா சொல்லப் போறா.''

''செருப்பு பிஞ்சுடும். போய் இரண்டா நாளே எல்லாரையும் மிரட்டி வச்சுட்டேன்.''

''அவன் திட்டலையா?''

''அது நாய். எப்பவும் நான் வேணும் அவனுக்கு.''

''ஐயோ அலையற ஆம்பளையா, கவனமா இருக்கணும்டி.''



''அவனையும் மிரட்டி வச்சிருக்கேன். எதுனா தப்பு தண்டா பண்ணினா எங்கப்பன் வெட்டி போட்டுறு வான்னு சொல்லியிருக்கேன்''

''உங்கப்பனுக்கு வாய்தான் கிழியும். கத்தி கபடான்னா பயம். உங்கப்பன் யோக்கியதை எனக்குத் தான் தெரியும்.''

''நீ சும்மா இரு. அப்பாவ அப்பப்ப வந்துட்டுப் போகச் சொல்லு. மிச்சத்தை நான் பார்த்துக்கறேன் ''

''ஆசையா இருக்கானா?''

''என்ன ஆசை, பொம்பளை ஆசைதான்.''

''அது குறைஞ்சுதுன்னா.''

''குறையவிடமாட்டேன்.''

''உனக்கும் உடம்பு குறையுமே.''

''இப்போதைக்கு பெத்துக்கமாட்டேன்.''

''அவனை சம்பாதிக்க சொல்லுடி.''

''வேற வேலை காலைல கவர்மெண்ட் ஆஸ்பத்திரி சாயந்திரம் டிஸ்பென்ஸரி. ஒரு இரண்டாயிரம் கொடு. பெயிண்ட் அடிக்கணும் டிஸ்பென்ஸரிக்கு''

வாங்கிக் கொண்டு போனாள். அந்த டாக்டரை ஆறே மாதத்தில் நிமிர்த்திக் காட்டினாள்.

வீடு அவளை மெச்சியது.

''ஏண்டி புதுப்படுக்கைய மச்சினிக்கிட்ட கொடுத் துட்டே. இங்க கொண்டாந்து போட்டா நாங்க கட்டில்ல போட்டுக்க மாட்டோமா.''

''ஏன் இந்த வயசுல உனக்கு இருக்கற படுக்கை போறாதா. ஒரு காரணத்துக்குத்தான் கொடுத்தேன் மெத்து மெத்துன்னு படுத்துப் புரண்டா அதுக்கும் சுகம்

கண்டு போவும். சுகம் கண்டா ஆம்பளை தேடும், தேடின வினாடியே போடின்னு துரத்திடலாம். அப்புறம் ஆத்தா காரி பைத்தியக்கார தம்பி. எனக்கு கவலையே இல்லை.''

''யாரு சமைக்கறது''

''ஆத்தாக்காரிதான்.''

''அந்தப் பையன் எதுனா கஷ்டப்படுத்தறனா உன்னை''

''என்ன கஷ்டம் துணி அலசி போட கத்து கொடுத்துட்டேன். என் துணி அவன்தான் தோய்க்கிறான்''

''லட்டுடி உனக்கு'' அம்மா கொஞ்சினாள்.

''நானே தேடிக்கிட்ட லட்டு'' பெண் பதில் சொன்னாள்.

பாபு உலகைப் பார்த்து திகைத்தான்.

## 3

ஒரு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வேளை தமிழ் நாடு முழுவதும் பஞ்சாபியை தாய்மொழியாய் கொண்ட ஒரு தமிழ் நடிகையின் சுயசரிதம் டி.வியில் பார்த்துக் கொண்டிருக்க, இரண்டு நிமிடத்திற்கு மேல் அந்த பேச்சை சகிக்க முடியாத பாபு கோவிலுக்கு போனான். மண்டபத்தில் அமர்ந்து கொண்டான். கோவிலின் திறந்த வெளியில் காற்றடிக்க சில வேப்பிலைச் சருகுகள் அங்கப் பிரதட்சணம் போல் உருண்டு கொண்டிருந்தன. சிலசமயம் ஒன்றன்பின் ஒன்றாகவும், சிலசமயம் ஒன்றை யொன்று முந்தியும் உருண்டு கொண்டிருந்தன. வீசிய காற்று நின்றுவிட ஒரு இடத்திலேயே நின்றன.



பாபு எழுந்து போய் அந்த ஏழு சருகுகளையும் பொறுக்கினான். உடையாமல் உள்ளங்கையில் ஏந்திக் கொண்டான். கோவிலை வலம் வர வேண்டுமா நான் கூட்டி போகிறேன் என்று மனசுக்குள் சொன்னான். ஏழு சருகுகளையும் ஏழு குழந்தையாய் எண்ணிக் கொண்டான்.

'ஓம் சக்தி...ஓம் சக்தி' என்றபடி உள்ளங்கையில் அவைகளை ஏந்தி மண்டபம் ஏறினான். சன்னதிக்கு போனான்.

''என்ன பாபு அது'' குடுமியை முடிந்து கொண்டபடி குருக்கள் கேட்டார்.

''வேப்பிலை சருகு'' பாபு பதில் சொன்னான்.

''எதுக்கு இது?''

''கோவில்ல சுத்தி வரதுக்கு ட்ரை பண்ணிட்டு இருந்தது. ஒரு ஸ்டேஜ்ல இதுங்களுக்கு முடியலே காத்து அடிக்கல்லே. நான் தூக்கிட்டு சுத்தி வந்தேன்.''

குருக்கள் சிரித்தார். ''ஜெய் பவானி'' என்று கத்தினார்.

''இப்ப என்ன பண்ணனும் அதை?'' கேட்டார்.

''அம்மா காலடியில போட்டுடணும்.''

''போ. போய் போடு.''

''நான் எப்படி... நீங்கதானே போடணும்.''

''பரவாயில்லே போடு.''

''நான் உள்ளே போகலாங்களா?''

''உன்னை மாதிரி இருக்கிறவா தாராளமா போகலாம். உள்ளே போடு. உன் கையாலே அவள் கால்ல வேப்பிலை போடு.''

பாபு வேப்பிலைகளை உள்ளே கொண்டு போனான். கருங்கல் சிலையின் பாதத்தில் வேப்பிலைச்சருகுகளை வைத்தான். மிக ஆவலோடு சிலையை பார்த்தான். இப்போது சிலை முன்னே ஏற்படும் பணிவு ஏன் மற்ற நேரத்தில், மற்ற இடத்தில் வருவது இல்லை என எண்ணிக் கொண்டான். பிரியத்துடன் கைகூப்பிக் கொண்டான். வெளியே வந்தான்.

''உட்காரு பாபு.''

மண்டபத்து தூணில் சாய்ந்து கொண்டு எதிர் தூணை குருக்கள் காட்டினார்.

''அன்னிக்கு ஏன் 'ஓ'ன்னு கத்தினே'' உட்கார்ந்த பாபுவிடம் கேட்டார்.

''நீங்கதான் சொன்னீங்க அம்மா தொட்டான்னு.''

''எதோ தெரிஞ்சா மாதிரி காட்டிக்கனும்னு சொன்னேன். உண்மையிலேயே அதை பத்தி சரியா தெரியாது. ஆனா, அன்னிக்கு உன் முகம் ரொம்ப பிரகாசமா இருந்தது. உள்ளுக்குள்ள என்னம்மோ நடந்ததுன்னு தோணித்து. என்ன நடந்தது சொல்லலாம்னா சொல்லு.''

குருக்களின் குரலில் ஒரு பணிவு இருந்தது.

'உம்' முன்னு காதுவழியா உடம்பு முழுக்க ஒருசத்தம். எங்கோ நான் யறந்து போறேன். நான்னா உடம்பு இல்லை, வேற என்னமோ. அறுகோண முக்கோணம் சுத்தி கருப்பு வெளுப்பு புகை என்னைச்சுற்றி எல்லா இடத்திலுமே பொடி...பொடி...பொடியா சக்தி. உலகம் முழுக்க பிரபஞ்சம் முழுக்க மணலைவிட சின்னத் துகளா சக்தி கிடக்கு. நீங்க, நான் எல்லாமே சக்தி குவியலா தெரிஞ்சுது. சக்தி பிரிஞ்சிருக்கு. இடம் மாறிட்டே இருக்கு எப்பவும் என்னமோ செய்துகிட்டே இருக்கு.



''அம்மா'' குருக்கள் சன்னதியை பார்த்து தலைமேல் கைகூப்பி கூவினார்.

''ரொம்ப சந்தோஷமா இருந்தது ஐயா. சந்தோஷம்னா சொல்ல முடியாத சந்தோஷம். சந்தோஷத்தை தாங்க முடியாத ஒரு அழுகை, ஒரு துக்கம். சந்தோஷம் துக்கம் ரெண்டும் ஒன்னாவே இருந்தது.''

''ஜெய் பவானி'' குருக்கள் மறுபடி கூவினார்.

''இது பூர்வபுண்ணியம் பாபு. கோடியில ஒருத்தனுக்குத் தான் இது கிடைக்கும்.''

''அது என்னய்யா?''

''இதுதான் விசித்திரம். பார்த்தவன் பார்க்காதவனை பார்த்து இது என்னன்னு கேட்கிற விசித்திரம். எனக்கு என்ன தெரியும்? நான் மாசக்கூலிக்கு பூஜை பண்றவன். எனக்கு என்ன தெரியும். அம்மாவுக்கு கற்பூரம் காட்டும் போதே தட்டுல எத்தனை காசு விழும்னு யோசிக்கிறவன். இதுபத்தி என்ன சொல்ல முடியும்? ஆனா...'' குருக்கள் தயங்கி நிறுத்தினார்.

''ஆனா...என்ன?''

''இது அனாஹதம். நெஞ்சுல இருக்கற சக்கரம். முதுகுதண்டு அடியிலே இருந்து மூளை வரைக்கும் ஆறு சக்கரங்கள் உண்டு இந்த அறுகோண முக்கோணம். மூணாவது சக்கரம் அதன் நிறம் புகை நிறம், அதன் சப்தம் 'ரிம்' தொண்டையில இருக்கிற சக்கரம் விசுக்தி. அதுக்கு மேலே நெற்றியில் இருக்கற சக்கரம். ஆக்ஞை அதுக்கு மேலே உச்சித்தலையில் சகஸ்ரம். நான் இதெல்லாம் தெரிஞ்சு சொல்லலை. படிச்சு சொல்றேன்.''

''இது ஏங்க எனக்கு வந்தது?''

''தெரியலே. அவளைத்தான் கேட்கணும்'' சன்னதியை காட்டினார்.

''ஆனால், மறுபடியும் பலதடவையும் உட்கார்ந்து அது வரலிங்க. எத்தனையோ முயற்சி பண்ணேன். வரலை''

''முயற்சி இருந்தா வராது. முயற்சியை சுத்தமா கைவிட்டபோதுதான் வரும். உள்ளுக்குள்ள அடங்கினா வரும்.''

''உள்ளுக்குள்ள அடங்கறதுன்னா என்ன?''

''எண்ணமில்லாமல் இருத்தல்''

''எண்ணம் எப்படி இல்லாமப் போகும்''

''யாருக்கு இந்த எண்ணம் வருது எங்கிருந்து வருதுன்னு விசாரிச்சா எண்ணம் அடங்கும்''

''ஏங்க எண்ணத்தை அடக்கணும்?''

''அதுதான் நீ. எண்ணமில்லாத இடம்தான் நீ உன்னை நீ பார்த்த சந்தோஷத்துலதான் நீ கத்தினே. அதுதான் உண்மையான பாபு. அதுக்கு பாபுன்னு கூட பேர் இல்லே. பேர் இல்லாத ஊர் இல்லாத பிறப்பில்லாத இறப்பில்லாத நீ. தூள் தூளா சக்தின்னு சொன்னியே அந்த சக்தியோடு ஒரு குவிப்பு நீ. நான் இன்னொரு சக்தி குவிப்பு''

''இப்ப மேற்கொண்டு நான் என்ன செய்யணும்?''

''உனக்குள்ளேயே இரு.''

''புரியலையே''

''நீ உடம்பாக பாபு இல்லை. யாருடையது இந்த உடம்பு என்று கேள். நீ எண்ணமில்லை யார் இப்படி எண்ணுகிறார்கள் என்று பார். யார் இப்படி பார்க்கிறார்கள் என்று கேள். அப்படி உற்று பார்க்க...பார்க்க எண்ணம் தோன்றும்போதே எண்ணத்தை உற்று பார்க்க எண்ணம் அடங்கும். எண்ணமே இல்லாத இடம்தான் நீ. அதையும் உற்றுப் பார். எது நீ என்று பார். அப்போது எல்லாம் உனக்கு புரியும். இதை நான் தெரிந்து சொல்லவில்லை பாபு. எங்கேயோ படித்துவிட்டு சொல்கிறேன். என் படிப்பு படிப்பாகவே நிற்கிறது எனக்கு பயன்படவில்லை. உனக்காவது பயன்படட்டும். ஒருவேளை நான் படித்ததே உனக்கு பயன்படத்தானோ என்னவோ. இதை உனக்கு சொல்ல வேண்டும் என்பதுதானோ என்னவோ''



''அதாவது என்னை தியானம் செய்ய சொல்கிறீர்களா?''

''இதற்கு பெயர் விசாரம். விசாரித்து அறிவது. யார் என்று தன்னை விசாரிப்பதும் தியானமும் ஒன்றே.''

''இதற்கு மூச்சு பயிற்சி எதுவும் செய்ய வேண்டாமா?'' தியானத்திற்கு முன் சுவாசத்தை சீராக்க வேண்டும் என்று சொல்கிறார்களே.'' பாபு பணிவாய் அவரிடம் கேட்டான்.

'மனசு அடங்கினால் முச்சு தானே சீராகும். மூச்சு அடக்கினால் மனசு சீராகும் என்பது தவறு.''

''மூச்சுக்கும் மனசுக்கும் என்ன சம்பந்தம் ஐயா?''

''நமது உணர்வுகளுக்கேற்ப மூச்சுவிடுதல் மாறுகிறது. கோபத்தில் ஒரு வகையாகவும், சந்தோஷத்தில் வேறு வகையாகவும், அமைதியில் நிதானமாகவும் இருக்கிறது. மூச்சுவிடுதல் துரிதமாக சாவை துரிதமாய் நெருங்குகிறோம். சக்தியை இழக்கிறோம், சக்தி இழக்காதிருக்கவே தியானம். மனசு அமைதியாய் இருக்க உன்னை உன்னால் கண்டுபிடிப்பது சுலபம். உன்னை தெரியும். மரணபயம் போகும்; மரணபயம் போக வாழ்வு இங்கே சுகம்.

அவமானம், துக்கம், பயம் எல்லாம் மரணத்தோடு சம்பந்தப்பட்டவை.''

பாபு அவர் பேச்சை கேட்டதும் கண்மூடிக் கொண்டான். யார் அக்கறையுடன் குருக்கள் பேச்சு கேட்டது என்று யோசித்தான். கண் திறந்து குருக்களை பார்த்தான். யார் குருக்களை பார்ப்பது என்று தேடினான். கண் குருக்களை பார்க்கிறது. கண்ணை எது பார்க்கிறது?

இங்கு பார்ப்பவன் யார்? இவரை குருக்கள் என்று உணர்பவன் யார்?

இவர்மீது பொங்கும் அன்பு எவருடையது? பார்ப்பவன் யார்? பார்ப்பானை அறி என்பது இதுதானா?

பார்ப்பான் என்றால் பிராமணன் இல்லை பூணூல் போட்டவன் இல்லை சாதியில்லை. பார்ப்பவன். எந்த சலனமும் அற்று பார்ப்பவன். விருப்பு வெறுப்பின்றி பார்ப்பவன். என்னுள் யார் பார்க்கிறார்கள் யார் அந்த பார்ப்பான்?

கண்மடல் தானே மூடிற்று. உள்ளே தேடிற்று. கண்ணுக்கு சக்தி எங்கிருந்து வந்தது என்று ஆராய்வது யார் என்று தேடியது. வெய்யில் கூடுதலில் ஏதேதோ சித்திரங்கள் வந்தன. உற்றுப்பார்க்க விலகிப் போயின. கோவில் தூண்களும் வௌவால்களும் தோன்றின. ஒரு சிலை சிரித்தபடி உட்கார்ந்திருந்தது. யார் அந்த மரச் சித்திரத்தை உற்று பார்க்கிறார்கள் என்று ஆராய அதுவும் விலகிற்று.

அக்கா அந்த பைத்தியகாரப் பையனை முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். அவனை கட்டித்தழுவி சுவரோடு அழுத்திக்கொண்டு இருந்தாள்.

'ச்சீ' என்ன காட்சி இது என்று பாபு மனசை கலைத்தான். ஆனால் முன்னிலும் வேகமாக அந்த காட்சி தோன்றியது.



''என்ன செய்கிறோம் என்று தெரியாத ஆணும், எல்லாம் தெரிந்த பெண்ணுமாய் பாபு அவர்களை உணர்ந்தான். அந்த பெண்ணின் செய்கையில் கோபம், வஞ்சனை, ஏமாற்று, கேலி இளக்காரம், கர்வம் எல்லாம் இருந்தன. இந்த குணங்களின் வெளிப்பாடே காமமாய் அவள் கண்களில் இருந்து வெளிவந்தன. சிவப்பும், நீலமும் பீறிட்டு அடித்தன. அந்த ஆணிடமிருந்து வெள்ளையும், பச்சையும் தோன்றின. எத்தனை உற்று பார்த்தும் இந்த மனக்காட்சி நகரவே இல்லை. வெப்பமும், மூச்சு சப்தமும் அவளிடமிருந்து அதிகமாய் வருவதை பாபு உணர்ந்தான். மனசு அடக்க முடியாதவள் என்று புரிந்து கொண்டான். மனசுக்கும் மூச்சுக்கும் எவ்வளவு நெருக்கம் இருக்கிறது என்பது தெரிந்து போயிற்று. இந்த மனக்காட்சி அவன் மூச்சை துரிதப்படுத்தியது. உஷ்ணபடுத்திற்று. அயர்ச்சி வந்தது.''

யார்... யார் பார்க்கிறார்கள். எனக்குள்ளும் ஆவேசம் வந்து விட்டதே ஏன்? எதனால்? யார் ஆவேசப்பட்டது? காட்சி ஓடிக்கொண்டிருக்கும்போதே யோசிக்க, காட்சி அதுபாட்டுக்கு இயங்கி கொண்டிருந்தது யோசிப்பவன் அந்த காட்சியை பார்ப்பவன் இதோ என்று ஒரு இடம் புறப்பட்டது.

இது காட்சியல்ல நிஜம். அங்கே நடந்து கொண்டிருக்கிற நிஜம். திடமாய் ஒரு எண்ணம் சம்பந்தமின்றி வந்தது.

''நடக்கட்டும் எனக்கென்ன''

''தடு''

''ஏன்?''

''தடு''

''ஏன்?''

''அவன் பைத்தியம் மேலும் பைத்தியமாகாமல் தடு. அவன் பாதிக்கப்பட்டவன். தொடர்ந்து பாதிக்கப் படாமல் தடு.''

''ஏன்?''

''கருணை, உதவி'' உள்குரல் சொல்லிற்று.

பாபு கண் திறந்தான். எழுந்தான்.

''என்ன பாபு?'' குருக்கள் கேட்டார்.

''எங்க அக்கா வீட்டுக்கு போறேன்''

''எதுக்கு?''

''அங்க என்னமோ சரியில்லை''

பாபு வேகமாக நடந்தான்.

குருக்கள் அவனையே பார்த்துக்கொண்டு இருந்தார்.

''இவனுக்கு முழிப்பு வந்துடுத்து. இனிமே இப்படித் தான் அலைவான்.''

கீதாவின் மாமியார் ஆரஞ்சு ரசத்தோடு படியேறி னாள். மருமகளுக்கு ஒரு தம்ளர் கொடுத்து விட்டால் மீதி ஒரு தம்ளர் பழரசத்தை தானும், தன் மகனும் குடிக்கலாம் என்று நினைத்தாள். மூடிய அறைக்குள் இருந்து பையன் முனகும் ஓசை கேட்டது.

''என்ன உனக்கு புடிக்குதில்ல'' கீதாவின் குரல் கேட்டது.

தம்ளரை ஓசைப்படாமல் கீழே வைத்தாள். ஸ்டூல் போட்டு ஏறி கதவுக்கு மேல் உள்ள வென்டிலேட்டர் வழி யாக எட்டிப் பார்த்தாள். உறைந்து போனாள். உள்ளே வெஞ்சினம் தோன்றியது, 'என்ன சமையல்காரியாவா வச்சிருக்கே, உன்னை சாவடிக்கிறேன் பார்'' என்று ஆத்திரம் வந்தது. வாசல் கதவை திறந்து தெருவிலே



தெரிந்த தென்பட்டவர்களை உள்ளே அழைத்தாள். வயிற்றில் அடித்துக்கொண்டு அவர்கள் காது கிழிய கத்தி னாள். மாடியைச் சுட்டிக் காட்டினாள்.

இரண்டு வயசான ஆண்களும், மூன்று முதிர்ந்த பெண் களும், கல்யாணத்திற்கு காத்திருக்கும் ஒரு பெண்ணுமாய் படியேறினார்கள். பாபு அவர்கள் வீட்டு வாசலை நெருங்கினான்.

பாபுவை பார்த்துவிட்ட மாமியார் ''யாரும் உள்ளே போவாதிங்கோ'' என்று கீழிருந்தபடியே கத்தினாள். படியேறியவர்கள் தயங்கி நின்றார்கள்.

கீதா அந்த சத்தம் கேட்டு விலுக்கென்று எழுந்து நின்றாள். பத்தே வினாடியில் உடலை சீராக்கிக் கொண் டாள்.

''யாரும் கதவை தட்னா திறந்துடு...என்ன'' அந்த பைத்தியக்கார மச்சினனிடம் சொல்லிவிட்டு, போர்வையை போர்த்தி ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள். கண் களை கூர்மையாக்கி காலடிச் சத்தங்களை கேட்டாள்

''உங்க அக்கா பண்ற அநியாயத்த பாரு?' கீழே மாமியாரின் குரல் கேட்டது.

எச்சலைக்கூட்டி உதடு ஓரம் வழிய விட்டாள். அயர்ந்து தூங்குவதைப்போல் நடித்தாள்.

யாரோ கதவை தட்டினார்கள். அந்த பைத்தியக்கார மச்சினன் சட்டையை மட்டுமே அணிந்திருந்தது அரை நிக்கரை கையில் வைத்துக் கொண்டு கதவை திறந்தான்.

ஐயோ என்று பெண்கள் முகத்தைப் பொத்திக் கொண்டார்கள். பாபு உள்ளே நுழைந்தான். மாமியார்

எட்டிப் பார்த்தாள். எல்லோருக்கும் கீதா அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதுபோல் தெரிந்தது.

''கீதா எழுந்திரு'' பாபு குரல் கொடுத்தான்.

''ஆங்'' கீதா திடுக்கிட்டுப்போய் பொய் தூக்கத்தில் இருந்து விடுபட்டாள். கண்ணை கசக்கி முகத்தை துடைத்துக் கொண்டாள்.

''ஏண்டா தூக்கத்தில் இருந்து எழுப்பறே'' சீறினாள். கொட்டாவி விட்டாள்.

''ஐயோ இவன் என்ன நிக்கர் இல்லாம நிக்கிறான்'' மச்சினனை பார்த்துக் கூவினாள். தலையில் அடித்துக் கொண்டாள்.

''ஏண்டி நாயே இவன்கூட கட்டிபிடிச்சு சரசமாடிட்டு இப்ப தூங்கறமாதிரி டிராமா போட்றியா. நீ பண்ண அசிங்கத்தை என் கண்ணால பார்த்தேன்டி.''

''என்ன அசிங்கம் யார், பார்த்தது'' கீதா திகைத்தாள்.

''நீ மச்சினனை கட்டிபுடிச்சி படுத்திருந்தியாம். உன் மாமியார் சொல்லுது'' ஒரு முதிர்ந்த பெண்மணி உரக்கப் பேசினாள்.

''நானா...இந்த பைத்தியத்தையா. எனக்கென்ன தலையெழுத்தா ராஜா மாதிரி என் புருஷன் இருக்க இவன் கூட நான் எதுக்கு படுக்கணும்.''

''இவன் துணியில்லாத நிக்கறானேடி'' இன்னொரு பெண்மணி அதிசயமாய் கேட்டாள்.

''இவன் என்னிக்கு துணியோட இருந்தான். நான் இங்க வந்த நாள்ல இருந்து இந்த கோரம்தான். காத்து வர கதவை திறந்து வச்சுன்னே தூங்குவேன் போனவாரம் கூட உள்ளபூந்து கதவை சாத்திட்டு நிக்கர அவுத்திட்டான். யாரோ இடுப்பை தொடறாங்களேன்னு முழிச்சா இவன் முண்ட கட்டையா நிக்கறான் ரெண்டு அறை வச்சு வெளியே தள்ளிட்டேன்.''



''இப்பவும் கதவு பூட்டித்தான் இருந்தது. ஒரு ஆள் பதில் சொல்ல அக்கா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.''

''ஐயோ நான் என்னா பண்ணுவேன். இந்த பன்னாடையால என் மானம் போவுதே தனிகுடுத்தனம் போலாம்னா என் புருஷன் மாட்டேன்றானே. எச்சக்கல நாயே என்ன ஏண்டா உயிரோட சாகடிக்கிற'' மச்சினன் மீது பாய்ந்தாள். அவன் முகத்திலும், தலையிலும் மாறி மாறி அடித்தாள். அவன் பேச நினைத்தபோது முட்டியால் அவன் மார்பை குத்தினாள் எட்டி உதைத்தாள். அந்த பதினெட்டு வயது பைத்தியக்கார பையன் வலித் தாங்காமல் அலறினான். அவன் குழறி குழறி பேசுவது யாருக்கும் புரியவில்லை. அவன் பேச்சைக்கேட்க யாரும் தயாராக இல்லை.

எல்லோரும் கீதாவின் நாடகத்தை நம்பினார்கள். கீதாவின் மாமியார் பிள்ளையை துடப்பத்தால் அடித்தாள் மிக வேகமாய் கீதாவின் பக்கம் சேர்ந்துக்கொண்டாள் வந்திருந்த ஆட்களும் ஆளுக்கு இரண்டு போட்டனர் அந்த பையனை தரதரவென்று கீழே அழைத்துக் கொண்டு போனார்கள். அந்த அறை முழுவதும் ஒரு கெட்ட வாசனையை பாபு உணர்ந்தான் கீதாவின் படுக்கையை தலையணையை தொட்டு பார்த்தான். அவை சிறிதுகூட சூடு இல்லாமல் குளுமையில் இருந்தன தலையணையை தொட்டபோது கீழே ஏதோ உறுத்தியது அதை புரட்டிப் போட ஒரு புத்தகம் இருப்பது தெரிந்தது. அதை புரப்டிப் பார்த்தான். சுருட்டி கையில் வைத்துக் கொண்டான். கீழிறங்கி வந்து வராண்டாவில் தொடர்ந்து அடிபட்டுக்

கொண்டிருந்த பைத்தியக்கார பையனுக்கு பாதுகாப்பாக இருந்தான்.

''நீ ஏண்டா தடுக்கற'' அக்கா சீறினாள்.

அவளுக்கு பதில் சொல்லாமல் அந்த பையனை விலக்கி வாசலுக்கு அழைத்துப் போனான்.

''நல்ல வேலையா நீ வந்தே. இல்லேன்னா என் மாமியார் எதுன்னா நினைச்சு எதுன்னா சொல்லி என் மானமில்ல போயிருக்கும் என் குடித்தனமில்லே பாழா யிருக்கும். இவனை எங்கிட்ட விடு சொல்றேன். ரெண்டு தொடையிலேயும் சூட்ட காய்ச்சி இழுத்தாத்தான் இவன் சரியா வருவான்.''

அக்கா பாய்ந்து அந்த பையன் தலைமயிரை பிடித்து இழுத்தாள். பாபு அவள் கைகளை தட்டிவிட்டான்.

'ஹூம்' என்று அதட்டினான்.

''உட்றா அவனை'' மறுபடியும் அக்கா எகிறினாள்.

அந்த பையன் பாபுவுடன் போய் விடக்கூடாது என் பதில் கருத்தாயிருந்தாள்.

''இந்த பைத்தியக்காரன பொலி போட்டுட்டுத்தான் வேற வேலை'' அக்கா கீழே கிடந்த துடப்பத்தை எடுத்து முறுக்கினாள்.

''யார் பைத்தியம்னு எனக்கு நல்லா தெரியும்போ'' அப்படி பாபு சீறினான். அந்த பையனை உடுக்க வைத்து வெளியே அழைத்துப் போனான். தெரு பம்பில் தண்ணீர் அடித்து அந்ப பையனை முகம் கழுவிக் கொள்ள சொன் னான். உதடுகள் வீங்கியிருந்தன. காதோரம் துடப்பம் பட்டு சிவந்து இருந்தது தேம்பி... தேம்பி அழுத பையனை கோவிலுக்கு கூட்டி வந்தான். மண்டபத்தில் படுக்க வைத்தான்.



படுத்தபடியே விம்மி கொண்டிருந்த பைத்தியத்தை பரிதாபமாக பார்த்தான். அவன் தலையை தடவிக் கொடுத்தான்.

''ஏன் இவன்மீது இத்தனை அன்பு பிறக்கிறது. இவனும் சக்தி, நானும் சக்தியா. நாங்கள் இருவரும் ஒன்றா. அதலால்தான் இவன் வேதனை என்னை அரிக் கிறதோ. இதனால்தான் இவன் வலி என்னை வலிக்கச் செய்கின்றதோ, தூங்கு...தூங்கு எல்லாம் மற, இது வினை கர்மவினை. இப்படி வாழ்க்கை கழிக்கவேண்டி யதே உன் நியதி.

''தப்பு பண்ணது உங்க அக்காதான் தெரியுமா'' கீதாவின் மாமியார் பின்பக்கம் நின்று சொன்னாள்.

''அந்த தேவடியா ட்ராமா போட்டு எல்லாரையும் ஏமாத்திட்டா. அவ என் புள்ளையை கெடுத்த என் ரெண்டு கண்ணால பார்த்தேன்'' அவள் பேச்சை பாபு வலது கையை உயர்த்தி அடக்கினான்.

''என்னை சமையல்காரி மாதிரி நடத்தறா. என் பொண்ணு. என் பிள்ளை எல்லாத்தையும் கேவலா பேசறா, இதுக்கு என்னா செய்யறதுன்னே தெரியலே''

''தனியா போயிருங்க.'' பாபு ஒட்டாதபடி சொன் னான்.

''போயிடலாம். சாப்பாட்டுக்கு வழியில்லையே''

''கடவுள் வழி சொல்வார்''

''என்னா வழின்னு தெரியலையே''

''போனாதானே வழி தெரியும் துணிஞ்சி போயிருங்க'

''இது கேடு கெட்டது. அநியாயத்துக்கு பொய் சொல்லுது''

''இப்படி பேசறதவிட போறது நல்லது''

கிழவி மகனை எழுப்ப முயன்ற போது பாபு தடுத்தான்:

''நீங்க இப்பவே வீட்டை விட்டு வெளியே போற வழிய பாருங்க''

''எங்க போறது?''

''எங்கன்னா போங்க''

''வேற போக்கிடம் இல்லையே''

''எல்லா இடமும் நம்மிடந்தான். திருப்பதிக்கு போங்க. எனக்கு வழிகாட்டுன்னு கடவுள வேண்டிட்டே போங்க. நல்லது நடக்கும்.''

''கூட இருந்து துக்கபடறதவிட விலகிபோய் கஞ்சியோ, கூழோ சந்தோஷமா குடிக்கறது நல்லது.

''இங்கிருந்தா துக்கம்தான். கிளம்பி போயிருங்க சந்தோஷம் வரும்''

கிழவி அவனை உற்றுப் பார்த்தாள். தோளில் புடவையை போர்த்திக் கொண்டு வீடு நோக்கி வேகமாய் நடந்தாள்.

''கடவுளே''—அவள் போவதை பார்த்து பாபு கூவினான். தனக்குள்ளே இருப்பதை அவளோடு துணையாய் போகும்படி வேண்டினான்:

மணல் துகள் போல் ஒரு சக்தி, அந்த கிழவியை பின் தொடர்ந்து போய் சுற்றிக் கொண்டது. அவளுக்கு பாதுகாப்பாய் போயிற்று.

''அவன் ஏறி மிதிக்கவேணாமா அடிச்சி ரத்தம் கக்க வச்சிருக்க வாணாம். அதை விட்டுட்டு அழைச்சுகிட்டு



போனியாமே: கீதாவூட்ல புத்தி சொன்னியாமே. பாவம் கீதா காலையிலே இருந்து ஒன்னும் சாப்பிடாம அழுது'' அம்மா கத்தினாள்:

அப்பா கவலைபட்டார்: தம்பி அரிவாளை எடுத்துக் கொண்டு அந்த பைத்தியத்தை வெட்டிவிட்டு வருகிறேன்'' என்று அங்கேயே நின்றான். இன்னொரு அக்கா கீதா சகலத்துக்கும் பயந்தவள்போல் நகம் கடித்துக் கொண்டிருந்தாள். இரவு ஒன்பது மணிக்கு டாக்டர் மாப்பிள்ளை உள்ளே வர, சகலரும் கத்தினார்கள். அழுது புலம்பினார்கள். கிளியை வளர்த்து பூனை கிட்ட கொடுத்துட்டோமே என்று வசனம் பேசினார்கள்.

அசோக வனத்து சீதை மாதிரி போஸ் கொடுத்துக் கொண்டிருந்த கீதா வேகமாய் எழுந்து அறைக்கு ஓடினாள். கதவை சாத்திக் கொண்டாள். புருஷன் பின் தொடர தாழ் போட்டுக் கொண்டாள்.

பாபு கண்மூடிக் கொண்டான். உள்ளே நடப்பது நெஞ்சில் படமாயிற்று, களைத்து கண்திறந்தான். இப்படி பார்ப்பது என் வேலையல்ல என்று சொல்லிக் கொண்டான். தலையில் தண்ணீர் விட்டுக் கொண்டான். துவட்டிக் கொண்டான். மனம் சலனம் அற்று இருந்தது.

தொடர்ந்து அங்கு பேசப்பட்டவை வெறும் தகவல்களாகவே அவனுக்கு தெரிந்தன.

வீடு அக்காவை முழுவதுமாய் நம்பிற்று. எவ்வளவு பெரிய வேதனை என்று இரக்கம் காட்டிற்று.

கிழவி மகனோடும், மகளோடும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு துணிமணிகள் உள்ள பெட்டியோடு வெளியே போய்விட்டாளாம். எங்கே போகிறேன் என்று சொல்லவில்லையாம்.

''எங்களால் எவர்க்கும் தீங்கு வேண்டாம். எவராலும் எங்களுக்குத் தீங்கு வரவேண்டாம் என்று சொன்னாளாம்,

அந்தப் பையன் பாபு கடவுள் மாதிரிவந்து காப்பாத்தினானாம். கடவுள் மாதிரி என்ன, கடவுள்தான் என்று சொல்லிவிட்டு போனாளாம். அவள் பேசியது எல்லாம் புரிந்தது. இது மட்டும்தான் புரியவில்லையென்று மாப்பிள்ளை சொன்னார்.

வீடு அவனை வினோதமாய் திரும்பி பார்த்தது.

''இவுரு கடவுளா, கடவுள் இவர்மாதிரியா ஃபேண்ட் பாக்கெட்ல கெட்ட புஸ்தகம் வச்சிருக்கான். நான் ஏதோ வாரப் பத்திரிகைன்னு எடுத்து பார்த்தேன். அசிங்க அசிங்கமா எழுதியிருக்கு. அந்த பைத்தியத்த சொல்றீங்களே. இவன பார்த்தாதான் எனக்கு பயமா இருக்கு'' இரண்டாவது அக்கா சீதா உரக்கக் கத்தினாள்.

அவன் ஃபேண்டை புத்தகத்தோடு ஹாலுக்கு கொண்டு வந்து சாட்சியாய் காட்டினாள்.

அப்பா அதைப் புரட்டிப் பார்த்துவிட்டு பாபுவின் மூஞ்சில் அடித்தார். கீதா அந்த புத்தகத்தை திகைப்போடு பார்த்தாள்.

''என்னா புஸ்தகம் அது'' அப்பாவிடம் கேட்டாள்.

பாபு மெல்லச் சிரித்தான்.

அக்கா நாடகத்தை தொடராமல் அங்கேயே நிறுத்திக் கொண்டாள். அவன் சிரிப்பு அவளுக்கு பயத்தை ஏற்படுத்தியது அவள் முகத்தில் தெரிந்தது. தம்பி அந்த புஸ்தகத்தை வீட்டு வாசலில் உள்ள குப்பைத் தொட்டியில் போட்டான். வீசியவன் கண்சிமிட்ட அடுத்த தம்பி தூக்கத்தில் நடப்பவனை போல வாசலுக்கு போய் உட்கார்ந்து கொண்டான். வினாடி நேரத்தல் எழுந்து குப்பைத் தொட்டியில் உள்ள புஸ்தகத்தை மடியில் சொருகிக் கொண்டு மறுபடியும் உட்கார்ந்து கொண்டான். வீடு மாப்பிள்ளையிடம் ஆயிரம்ரூபாய் கொடுத்து கீதாவோடு அவன் வீட்டிற்கு அனுப்பியது.



எல்லோரும் உறங்கிய பிறகு அப்பா மாடிக்கு வந்தார். அவன் உட்கார்ந்து இருப்பதை அதிசயமாய் பார்த்தார்.

''யார் மேலடா தப்பு'' திடுக்கென்று கேட்டார்.

பாபு பதில் பேசாது இருந்தான்.

''சொல்லு தப்பு பண்ணது உங்க அக்காவா?''

''அந்த பைத்தியக்கார பையனுக்கு தப்பு பண்ணத் தெரியாது.''

''புஸ்தகம் யாரது.''

''அக்கா தலையணைக்கு கீழே இருந்தது.''

அப்பா பெருமூச்சு விட்டார்.

''நீ ஏன் அங்க போனே'' அவர் கேள்வியில் கோபமில்லாமல் இருந்தது.

''ஏதோ தோணிச்சி போனேன்.''

''என்ன தோணிச்சு''

பாபு பதில் சொல்லாமல் இருந்தான்.

''இன்னிக்கு குருக்கள் என்னை தேடிட்டு வந்தாரு. தனியா கூட்டிட்டு போய் பாபுவ மரியாதையா நடத்து இல்லேன்னா அழிஞ்சி போய்டுவேன்னு சத்தம் போட்டார். எனக்கு ஒன்னும் புரியலை.''

''அவன் எனக்கு புள்ளைதானே. நான் அவனுக்கு அப்பாதானே. இதுல என்ன மரியாதைன்னு கேட்டேன். அவன் உன் அப்பனுக்கெல்லாம் அப்பன். இதை அடிபட்டுத்தான் தெரிஞ்சுக்கன்னும்னா நான் என்ன செய்ய முடியும். உன் தலையெழுத்துபோல நடக்கட்டும்னு போயிட்டாரு.''

''அவரு போனதும் எனக்கு உடம்பு சில்லுன்னு ஆயிடுச்சி. என்னமோ ஒரு பயம் நான் செத்துடுவேன்னு ஒரு பயம் வந்தது.

''பாபு எனக்கு சாவு கிட்ட வந்துடுச்சாடா. என்னமோ ஒரு பீதி எனக்குள்ளே வந்துச்சே. என்ன அது'' அப்பாவின் குரலில் அதீத பயம் இருந்தது.

பாபு மௌனமாக இருந்தான்.

''அந்த குருக்கள் பொய் சொல்ல மாட்டாரு. உன்னை பெரிய சித்தர் மாதிரி சொல்றாரு. நான் எதன்னா தப்பு பண்ணியிருந்தா மன்னிச்சுடுடா'' அப்பா விரல்கள் நடுங்க பாபுவின் கையை பிடித்துக் கொண்டார்.

''நான் புஸ்தகம் படிச்சு மூஞ்சியிலே அடிச்சது கூட ஒரு அப்பா அப்படித்தானே நடந்துக்கறனுங்கறதால அப்படி செய்தேன். அப்புறம் என்னடா மறுபடியும் தப்பு பண்ணிட்டோம்மேன்னு வருத்தப்பட்டேன். நான் தெரியாத கேட்கறேன். நீ சித்தரா மாறிட்டியா.''

ஜடாமுடியும் நீண்ட தாடியுமாய் பாபு ஒருகணம் தன்னை நினைத்துக் கொண்டான். நினைவை கலைத்தான்.

மனிதர்கள் வாழ்வின் ஏதாவதொரு கட்டத்தில் பெண் மீது உள்ள காமத்தைக்கூட ஜெயித்துவிடலாம். ஆனால், புகழ்ச்சியால் ஏற்படும் சந்தோஷத்தை ஜெயிப்பது மிகவும் கடினம். அப்பாவின் பேச்சில் புகழ்ச்சி இருக்கிறது. அவர் மன்னிப்பு கேட்பதில் எனக்கு கர்வம் வருகிறது. யார்ரது கர்வம் கொள்கிறார்கள். ஏன்? இந்த புகழ்ச்சிக்கோ கர்வத்துக்கோ நான் என்ன தகுதி. என் முயற்சியால் என்ன விளைந்தது இங்கே. நான் ஏதும் உழைத்து சம்பாதித்தேனா. தன்னிச்சையாய் உள்ளே தேடினேன். கிடைத்தது. எப்பவும் போலதான் நான் இப்பவும் இருக்கிறேன். அந்த நான் என்னவென்று அப்போது தெரியவில்லை. அப்போது நான் என்பது என் உடம்பாய் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது அந்த 'நான்' வேறு, என் உடம்பு வேறு என்று புரிந்து போயிற்று. இருந்ததை கண்டுகொண்டேன். இதில் எதற்கு புகழ்ச்சி.



ஏன் கர்வம். அப்பாவின் புகழ்ச்சி காதுமட்டும் கேட்டது. நெஞ்சு வாங்கிக்கொள்ள வில்லை.

பாபு ஊடுருவி அப்பாவை பார்த்தான். உன்னிலும் சக்தியிருக்கிறது. எல்லா இடத்திலும் உள்ள சக்தி உன்னிடத்திலும் இருக்கிறது. உடம்பால் பிரிந்திருக்கிறோம் சக்தி ஒன்றே.

அவன் அப்பாவின் கைகளை கண்ணில் ஒற்றிக் கொண்டான். வருடிக் கொடுத்தான். அப்பா ஆடிப் போனார். அழத்துவங்கினார்.

அழுது ஓயட்டும் என்று பாபு காத்திருந்தான். இது பயத்தால் வந்த அழுகை என்று புரிந்துபோயிற்று.

''எனக்கு எதுன்னா உன் சக்திய காமியேன்.''

''எங்கிட்ட ஒண்ணுமில்லையேப்பா''

''என் புள்ளை இல்லையாப்பா நீ, என்கிட்ட காமிக்கக்கூடாதா?''

''உங்ககிட்டையும்தான் இருக்கு''

''நான் முட்டாள். மடையன். கோவில் சொத்து தின்றவன். கஷ்ட ஜீவனம். வேற தொழில் தெரியாது. அஞ்சு குழந்தைங்க ,அதனால சாப்பிட்டேன். எனக்கு ஏதுன்னா உன் சக்திய காமியேன்.''

''பாஸ்கர் புக்கு படிக்கிறான்.''

''அவன் படிக்கட்டும். நீ காமியேன்''

''கெட்ட புஸ்தகம் படிக்கறான்''

''எங்கே?''

''கீழே.''

''உனக்கு தெரியுதா?''

''அவன் சீதா, வினோத் மூனு பேருமே படிக்கி றாங்க''

''உனக்கு தெரியுதா?''

''என்கைய புடிச்சுக்குங்க''

ஒரு கட்டிலில் அக்காவும், தம்பியும் அருகருகே குப்புற படுத்துக் கொண்டு கிழிந்த புத்தகத்தை படித்துக் கொண் டிருந்தார்கள் வினோத் சிறிது படித்துவிட்டு வாசல் காவலுக்கு போனான். மறுபடியும் வந்து படித்தான். மூன்று பேர் முகத்திலும் விகாரம் சொட்டியது.

அப்பா கை உதறினார்.

''அப்படியே சினிமா மாதிரி தெரியுதே, நான் போய் அவங்கள...'' எழுந்திருந்தார்.

பாபு அவரை கைப்பிடித்து உட்கார வைத்தான்.

''இதை தடுக்க முடியாது தடுத்தும் புண்ணிய மில்லை.''

''சீதாவுக்கு வரன் பாத்துடட்டுமா'' அப்பா கவலை யாய் கேட்டார். நாளையிலே இருந்து அலைய ஆரம்பிக் கட்டுமா.'' வாய் பொத்திக் கொண்டு வினவினார்.

''வேண்டாம்''

''ஏம்பா பாபு''

''வீடு தேடிவரும்''

''எப்போ?''

''நாளைக்கே வரும்''

''பொண்ணு பார்க்கவா''



''இல்லை. உன்னைத்தேடி வருவார்கள். பொண்ணை காட்டு. பின்னர் பெண்ணைக் கொடு. கூட சேர்த்துக் கொள்.''

''புரியலையே.''

''நாளை புரியும்.''

''அந்த புஸ்தகம், புடுங்கட்டுமா?''

பாபு வெறும் சுவரில் சுவிட்சுபோல் கையை வைத்து அழுத்தினான். அந்த பேட்டை முழுவதும் இருளாகியது.

''நீயா மெயின் அணைச்சே'' அப்பா குரல் இருட்டில் வியந்தது.

''நான் இல்லை, மெயினாய் உள்ளவன்தான் மெயினை அணைத்தான். போய்ப் படு. நாளை யார் தேடினாலும் அந்தப் புத்தகம் கிடைக்காது.''

அப்பா தடவிக்கொண்டே கீழே போனார்.

பாபு தனக்குள் மூழ்கினான்.

# 4

டீடும்னு இவள் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ண போறேன்னுங்கறீங்க. எங்க போறது துட்டுக்கு. நாற்பது சவரன் நகை வாணாமா. ஐம்பதாயிரமாவது காசா வாணாமா. அதே மாதிரி கோயில்லே கல்யாணம் வச்சா லும் குறைஞ்சபட்சம் துட்டு வேணுமே அம்மா அதிசய மும் அங்கலாய்ப்புமாய் கேள்வி கேட்டாள்.

''எதன்னா போட்டுப் புரட்டிக்க வேண்டியதுதான்.''

''எதை போட்டு புரட்டிக்குவிங்க''

''நூத்தி பன்னன்டு சவரன் இருக்கில்லே.''

''கோவில் நகையா?''

''நாம பார்த்து வளர்த்த கோயில்தானே''

''தப்பு வராதா, கணக்கு கேட்கமாட்டாங்களா?''

''டூப்ளிகேட் பண்ணி வச்சிருக்கேன்.''

''மொத்தத்துக்குமா?''

''போரசை பிடிச்சவளே, நாப்பது சவரன்னுக்குத் தான் பண்ணியிருக்கேன்.''

''எனக்கு ஒரு ஆறு சவரனுக்கு வளையல் வேணும்.''

''பார்க்கலாம்.''

''நான் கேட்டா பார்க்கலாமா. நல்லதோ, கெட்டதோ, எல்லாத்துக்கும் உன்கூட நிக்கலையா.''

''யார் இல்லேன்னது.''

''எப்படியும் அஞ்சு சவரன்லேயாவது நகை வேணும்'' அவர் தோளைப்பற்றி அவர் மனைவி கொஞ்சினாள்.

''முதல்ல உன் பொண்ண நல்லா குளிப்பாட்டி பளிச்சுன்னு ட்ரஸ் போட்டு வை. சாயந்திரம் பொண்ணு பார்க்க யாராவது வரலாம்.''

''யாரையாவது வர்ற சொல்லியிருக்கீங்களா?''

''இல்லை.''

''அப்புறம் எப்படி?''

''என்னமோ தோனிச்சு சொல்றேன். சொன்னதை செய்.''

அவள் புருஷனை வியப்போடு பார்த்தாள். பெண்ணை உரக்க அழைத்து அவள் தலையில் எண்ணை



வைத்தாள். அரக்கித் தேய்த்து ஷாம்பு போட்டு அலசினாள். உடம்பு முழுவதும் சோப்பு குழைத்து தேய்த்தாள். மொண்டு மொண்டு நீர் ஊற்றினாள். கொல்லையில் நிற்கவைத்து தலைக்கு முடிபோட்டு தொடையில் இருந்து நெஞ்சு வரை துண்டு சுத்தி அனுப்பினாள்.

பாத்ரூம் கதவில் ஒட்டவிட்டிருந்த பொட்டை நெற்றிக்கிட்டு சீதா துண்டு கட்டி ஹாலுக்கு வரவும், கதவை திறந்து ஏழு பேரும் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

சீதா படுக்கையறை நோக்கி ஓடினாள். படுக்கையறை உட்பக்கம் தாழ் போட்டுக் கொண்டிருந்தது.

தம்பி உள்ளே உடுத்திக் கொண்டிருப்பதாய் பதில் சொன்னான். சீதா துண்டு பறக்க சமையலறைக்கு ஓடினாள். 'யார் அது' என்று கத்தினாள். ''போலீஸ் கோவில் பாதுகாப்பு பிரிவு'' என்று பதில் வந்தது. அப்பா எங்கே என்று அதட்டியது. சீதா டெலிபோனை சுட்டிக்காட்டி கோவிலுக்கு ஃபோன் பண்ணச் சொன்னாள்.

அப்பா வருவதற்குள், அவள் உடுத்தி பவுடர் போட்டுக் கொள்வதற்குள், அவர்கள் எல்லா பீரோக்களையும் சாவி போட்டு திறந்து அம்மாவை அருகில் வைத்துக் கொண்டு சோதனை போட துவங்கினார்கள்.

அப்பா வந்ததும் அவரை வராண்டாவிலேயே உட்கார வைத்தார்கள். மற்றவர்கள் சோதனை போட அந்த படைக்கு தலைமையாய் வந்த இளைஞன் சீதாவையே உற்று உற்று பார்த்துக் கொண்டிருந்தான். 'உன் பெயர் என்ன' என்று இரண்டு தடவை கேட்டான்.

இது கோயில் நகையா, உன் நகையா என்று கழுத்து செயினில் கையை வைத்தான். அம்மா அதற்கு மறுப்பேதும் சொல்லாமல் போகவே கையை பிடித்து அவள் வளையல்களை உற்றுப் பார்த்தான்.

''மாடியிலேயே எதன்னாரும் இருக்கா வா... வந்து வழி காட்டு'' மிரட்டினான்.

அவள் படியேற அவன் பின்னே நெருக்கமாய் நடந்தான்.

மாடி வளைவில் அவள் கை பிடித்து நிறுத்தினான்.

''உங்க அப்பா உனக்கு நாற்பது சவரன் கோவில் நகை திருடி போட்டிருக்காராமே. எங்களுக்கு தகவல் வந்தது. இது உண்மையா'' கேட்டான் அவன் தொடலில் காமம் இருந்தது.

''எனக்கு தெரியாது'' சீதா வெட்கப்பட்டாள். தலை குனிந்தாள்.

''நீ ஏன் பயப்படறே நாங்களும் மனுஷாள்தானே. உங்க அப்பாவை ஒன்னும் செய்துவிட மாட்டோம்'' அவள் அவனை மலர்ந்த கண்களால் நிமிர்ந்து பார்த்து விட்டு தலை குனிந்து கொண்டாள்.

''உன் பேருன்னா'' இம்முறை நடுநெஞ்சில் அவன் விரலை வைத்தான்.

''நான் சப் இன்ஸ்பெக்டர். இரண்டு மாசத்துல இன்ஸ்பெக்டராயிடுவேன். கோயில் தர்மகர்த்தான்னா முன்ன, பின்ன, இருக்கறதுதான். எல்லாம் நான் பார்த்துக்கறேன்னு அப்பாகிட்ட சொல்லு.''

'சரி' அவள் தலையசைத்தாள்.

''உன் வயசு என்னா? பெரிய பொம்பளை மாதிரி இருக்கே.''

''இருவது''

''பாடி ஷேப் நல்லாயிருக்கே'' உற்று கவனித்தான்.

''நாங்க டான்ஸ் ஆடிக்கிட்டிருந்தோம், இப்போ நிறுத்திட்டோம்.''



''சொன்னாங்க. சொன்னாங்க. ஏன் நிறுத்திட்டிங்க?''

''கல்யாணத்துக்கு பாக்கறாங்க அதான்.''

''நீ அழகா உங்க அக்கா அழகா''

''நான்தான்''

''பார்த்தாலே தெரியுதே'' அவன் செல்லமாய் கன்னத்தைக் கிள்ளினான். அவன் முழங்கை அவள் நெஞ்சில் உரசின. அவள் விலகிக் கொண்டாள்.

''எங்க அப்பாவை ஒண்ணும் செய்திடாதீங்க'' அவன் கைகளை பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

''வா மாடிக்கு போகலாம்'' அவன் படியேறினான்.

மாடி வராண்டாவில் நுழைந்த போது பாபு இருப்பதை அவன் பார்க்கவில்லை. திறந்த வெளிக்குப் போக பாபு தலை குனிந்து உட்கார்ந்திருப்பது தென்பட்டது. அவன் பயந்தான்.

''யார் அது?'' என்று சைகையில் சீதாவிடம் பாபுவை காட்டி வினவினான்.

''எங்க தம்பி, பேர் பாபு''

''என்ன பண்றாரு இங்க''

''சும்மா உட்கார்ந்திருக்காரு.''

''அவரை எழுந்திருக்கச் சொல். படுக்கைய சோதனை போடணும்.''

பாபு நகர்ந்து கொள்ள அந்த படுக்கையை கால்களால் பல இடங்களில் மிதித்துப் பார்த்தான்.

''நான் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர். உங்க பேரு என்ன?''

''பாபு''

''உங்க அப்பா நகை திருடிட்டதா எனக்கு தகவல் வந்தது. அதுவும் கோவில் நகை. நாங்க சோதனை போட வந்தோம்.''

''உங்க வேலையை செய்துட்டு நீங்க போகலாம்.''

''போவதா, ராத்திரி சாப்பாட்டுக்கு இங்கேயே தங்குவோம்'' அவளை பாத்து கண் சிமிட்டினான்.

''நேரான பிறகு தங்கிக்கலாம்''

''எது நேரான பிறகு?''

''எல்லாம்''

''உங்க அப்பா நகை திருடல்லேங்கிறீங்களா?''

''எங்க அப்பாவுக்குத்தான் தெரியும்.''

''நான் அங்கேயே போய் கேட்டுக்கறேன்.''

''பார்த்து போங்க. இருட்டான இடம்'' பாபு சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

படி வளைவில் தவறாய் கால் வைக்க தடக்கென்று இறங்கினான். பின்னுக்கு சாய்ந்தான். சீதா அவனை தாங்கிக் கொண்டாள். உடம்பில் உடம்பு பட்டது. 'ரொம்ப தேங்க்ஸ்' விலகாமல் சொன்னான்.

''அதனாலென்ன பரவாயில்லை'' அவள் அவனை நிமிர்த்தினாள்.

மற்ற போலீஸ்காரர்களை வெளியே அனுப்பிவிட்டு தேட வந்தவன் அப்பாவோடு பேசினான்.



''நூத்திபன்னன்டு சவரன் சரியா இருக்கு. ஆனா நாற்பது சவரன் டூப்ளிக்கேட் பண்ணி வச்சிருக்கீங்களே ஏன்?''

''கோயில் குருக்கள்மேல எனக்கு நம்பிக்கை இல்லிங்க. அலங்காரம் எப்ப கழட்டலாம், கழட்டக்கூடாதுன்னு அவங்கதான் சொல்றாங்க. ரெண்டு நாள் கழட்டக் கூடாத நகையா இருந்தா நான் டூப்ளிக்கேட் போட்டுடுவேன்.''

''நான் ஒத்துக்க முடியாது, நீங்க திருடறதுக்காகத்தான் டூப்ளிகேட் போட்டுருக்கிங்கன்னு தான் கேஸ் போட முடியும்.''

''நான் திருடலிங்களே, திருடினா என்ன தப்பு. இப்ப யார் திருடல. ஆத்தோடு போற தண்ணி, அப்பா குடி, அம்மா குடி, எவனோ ஒருவன் உங்களுக்கு மொட்டை பெட்டிஷன் எழுதிப் போட்டுட்டான்''

''யார்னு விசாரிங்களேன்.''

''அந்த குடுமி வச்ச குருக்கள்னு எனக்கு சந்தேகம்.''

''எனக்கும் அவனுக்கும் ஆவாதுங்க''

''அவனை நான் பார்த்துக்கறேன். ரெண்டு நாள் போலீஸ் ஸ்டேஷன்ல உக்கார வச்சா உங்க வழிக்கே வர மாட்டான்.''

''ரொம்ப நன்றி தம்பி''

''சீதா உங்க ரெண்டாவது பொண்ணா. அது கல்யாணத்துக்கு நகை போடத்தான் டூப்ளிகேட் பண்ணி வச்சிருக்கிங்களா''

''கல்யாணம் வந்தாதானே அந்த பிரச்சனை''

பாபு படியில் இருந்து இறங்கி குருக்கள் வீடுநோக்கிப் போனான்.

''கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ண வேண்டியது

தானே. பொண்ணு நல்லா வளர்ந்திருக்கே.''

''நல்ல பையன்னா பார்த்தா சொல்லுங்க.''

''எங்க அப்பாவை விட்டு சொல்லி அனுப்பறேன்.''

''எதுக்கு உங்க அப்பா.''

''நல்ல பையனா கேட்டிங்களே.''

''யாரு பையன்?''

''நான்தான்''

திருடர்கள் இரண்டு பேரும் இடி முழக்கம் போல் சிரித்து நடந்துபோய் கொண்டிருந்த பாபுக்கு கேட்டது. கவலை ஆனான். குருக்கள் வீட்டு கதவை தட்டினான்.

''சோதனைன்னு எங்க வீட்டுக்கு வந்துட்டிங்க. வெளியே நாலு பேருக்கு தெரிஞ்சு போச்சு. வாசல்லே நின்னு நீங்க சிரிச்சு பேசினாத்தான் எனக்கு நல்லது.'' அப்பா பல் இளித்து கெஞ்சினார்.

''செய்துட்டா போது. சீதா நான் வரட்டுமா.''

''சீதா வந்து கும்பிட்டுக்கம்மா'' அப்பாவும் குரல் கொடுத்தார். சீதா அருகே வந்து கை குவித்தாள். வெட் கப்பட்டாள். அவனுக்கு புளகாங்கிதமாய் இருந்தது.

வாசலில் நின்று சிரித்து, சிரித்துப் பேசினார்கள்.

''அந்த குருக்களை இப்பவே மிரட்டி வச்சா என்னா, ஜனங்க பார்வை எம்மேல இருந்து வேற பக்கம் திரும்பி டும்'' அப்பா கேட்டுக் கொண்டார்.

''போலீஸ்காரன் யாரைவேண்ணா மிரட்டலாம். குருக்கள விரட்டறதா கஷ்டம். வாங்கோ பேசிட்டே போய் அவன் வீட்டில் விசாரிச்சுட்டு வருவோம்''



''சீதா அவங்க கௌம்பறேன்னு சொல்றாங்க.''

சீதா வாசலுக்கு வந்து டாடா காண்பித்தாள். தெரு சகலமும் பார்த்தது. அம்மா பெண் கன்னத்தை வழித்து நெட்டி முறித்தாள்.

''என்ன பாபு அப்பா கூப்பிட்டாரா?'' குருக்கள் விழித்தார்.

''இடுக்கண் வருங்கால், உங்களாலே சிரிக்க முடியும்மா?''

''சிரிப்பும் இல்லை அழுகையும் இல்லை. எல்லா பாரத்தையும் மாரியம்மா மேலே போட்டுடுவேன். எனக்கு இடுக்கண் வருதோ''

''வந்து கொண்டே இருக்கிறது''

''உங்க அப்பாவோ''

''ஒரு நாயும் கூட வரும்''

''நான் என்ன பண்ணனும்''

''உள்ளுக்குள்ளேயே இருக்கணும்.''

''வீட்டுக்குள்ளா?''

''நெஞ்சுக்குள்ளும்,''

''அவமானம் வருமா.''

''ஆமாம், ஆடாம இருக்கணும்.''

''நான் கத்திடுவேனே.''

''கத்தினா பெரிசாகும்.''

''எது?''

''அவமானம்''

''தாயே இது என்ன சோதனை''

''சக்தி காப்பாத்தும்''

''எனக்கு ஏன் இந்த சோதனை?''

''உள்ளுக்குள் அடங்குவதற்கு உமக்கு சொல்லித் தரப்படும்.''

''ரொம்ப நன்றிடி அம்மா'' குருக்கள் அவன் கைகளை பற்றிக் கொண்டார்.

''அம்மை, அப்பன், அது எல்லாம் ஒன்றே.''

''புரிஞ்சுது தாயீ''

''மௌனம் காக்க வேண்டும்.''

''நிச்சயம் செய்வேன், இது சொல்லப்படாம இருந்தா ஆவேசப்பட்டிருப்பேன், ஆத்திரப்பட்டிருப்பேன்

''ஆத்திரம் பலவீனத்தின் அறிகுறி''

''புரிஞ்சுது தாயீ'' குருக்கள் குனிந்து பாபுவின் பாதங்களை கண்களில் ஒற்றிக் கொண்டார். வெளியே வந்து திண்ணையில் அமர்ந்து கொண்டார். பாபு கோவிலுக்கு போனான். மண்டபத்தில் கண்மூடி அமர்ந்து கொண்டான்.

நாயும், குரங்கும், அந்த குருக்களை சொற்களால் கிழிப்பதை உணர முடிந்தது. உள்ளே நின்று 'கடவுளே' என்று கூவினான். குருக்கள் அவமானம் தாங்காமல் அழுதார். உள்ளே போய் குத்துவிளக்கு ஏற்றினார். ஊர் கூடி வாசலில் நிற்க, நான் என்ன பாவம் பண்ணினேன்' என்று கதறினார். குத்துவிளக்கு தண்டை இறுக்க பிடித்துக்கொண்டு சுடரை உற்றுப் பார்த்தார். உள்ளே சிறிய பொறியாய் ஒரு ஒளி நின்றது. அதையே உற்றுப் பார்க்க சடேரென்று பெருசாயிற்று உடம்பு முழுவதும் அனல் வீச்சு பறந்தது. குரல் நாளம் கிழிந்து போகும்படி



அலறினார். உடம்பு கிடுகிடுத்தது. ஆடிற்று. இனம் புரியாத சக்தி அவர் எலும்புக்குள் அனலாய் கொதித்தது.

குருக்கள் குளிருதே, குளிருதே என்று அலறினார் உட்கார்ந்த இடத்திலே தவித்தார்.

நெருப்பு சிவம். குளிர் சக்தி.

நெருப்பு சிவம். குளிர் சக்தி.

சிவசக்தி, சிவசக்தி, சிவசக்தி, என்று கத்தினார்.

யாரோ அவரை அணைத்து பிடித்துக் கொண்டார்கள். ஆவேசத்தை தடுக்க முயன்றார்கள்.

''கிட்ட வராதீங்கோ, கடவுள்கிட்ட வராதீங்க. உங்களால வரமுடியாது. உங்களால அதுல ஒரு தூசைக்கூட பார்க்க முடியாது. கடவுள் அனாதி. எங்கும் உள்ளது எப்போதும் உள்ளது. எப்போதும் இருக்கப் போவது. காலம் இல்லாதது. எல்லாம் கடந்தது.''

''சாமி...சாமி'' யாரோ கத்தினார்கள்.

''மண்டபத்துல உட்கார்ந்து இருக்கும சாமி சாமி நீலச்சட்டை போட்டு, வேட்டியோட உட்கார்ந்துருக்கிறாரு, போய்ப் பாரு.''

கூட்டம் மண்டபம் நோக்கி ஓடியது. பாபு சிரித்தான். சட்டையை கழட்டி சுருட்டி அக்குளில் வைத்துக் கொண்டான். பனியன் வேட்டியுமாய் கோவிலைச் சுற்றி நடந்தான். எதிரே வந்த கூட்டத்தை கடந்தான். யாரும் அவனை கண்டு கொள்ளவில்லை. காட்டிக் கொள்ள அவனுக்கு விருப்பமும் இல்லை.

# 5

ஆனால் இந்த உலகம் முழுவதும் நாடகம். ஒரு வினையால் இன்னொரு வினை ஏற்படுகிற நாடகம். செயலைத் தொடர்ந்து செயல் என்று இடையறாது நடக்கும் நாடகம்.

இங்கு எந்த செயலும் கேள்வியற்று போவதில்லை. எந்த விளைவும் பதில் தராது நகர்வதில்லை. செயலைத் தொடர்ந்து வேறு செயல் வர கால இடைவெளி முக்கியமாகிறது. அந்த இடைவெளி சிறியதாகவோ, பெரிதாகவோ இருக்கிறது. எனினும் விளைவுக்கு எதிர்விளைவு ஏற்பட்டே தீருகிறது.

மனம் என்பது எண்ணமே. அந்த எண்ணத்தின் விளைவு செயல். மனம் அடங்க செயல் தன்மைப்படும். செயல்களுக்கு அர்த்தம் கற்பிக்க முடியாமல் போகும். செயலில் இருந்து மனம் வேறுபடும். பலன் எதிர்பாராத தன்மை வரும். பலனை எதிர்பாராத செயலில்தான் நிம்மதி இருக்கிறது. எண்ணத்தால் செயலும், செயலால் எதிர்பார்ப்பு எண்ணமும் அந்த எதிர்பார்ப்பு எண்ணத்தால் இன்னொரு செயல் என்கிற அவஸ்தை வரும். மனம் அடங்க, செயல் செய்ததோடு நின்றுவிடும்.

நாற்பது பவுன் கோவில் நகை திருட்டை ஆதரிப்பவனுக்கு நாற்பது பவுனும் தனக்கே வேண்டும் என்ற எண்ணம் வந்தது. நாற்பது பவுனைத் திருடியவனுக்குத் தனக்கென்று பத்து பவுன் வைத்துக் கொள்ள தோன்றிற்று.

இருபது முப்பது என்று பேரம் நடந்து முப்பத்தைந்தில் பேரம் முடிந்தது. ஐந்து பவுன் மனைவிக்கும், முப்பத்தைந்து பவுன் பெண்ணுக்கும் பிரித்து அப்பா கொடுத்



தார். இந்த பேரத்திற்கு பெண்ணை அவனோடு பீச்சுக்கு சிங்காரித்து அம்மா அனுப்பினாள்.

மோகத்தில் கிறங்கியவன் ஐந்து பவுன் குறைப்புக்கு ஏற்றுக் கொண்டான். அந்தப் பெண் தான் சொன்னதுக்கெல்லாம் பணியும் ஆணைக் கண்டு கர்வப்பட்டாள்.

அந்தக் கல்யாணமும் கோவிலிலேயே நடந்தது. பொய் நகைகள் கணக்கில் கொண்டு வரப்பட்டன.

கல்யாணத்திற்கு முன்தினம் பாபுவுக்கு கடுமையான காய்ச்சல் வந்தது. அவனை மாடி வராண்டாவில் விட்டுவிட்டு எல்லோரும் கல்யாணத்திற்கு போனார்கள்.

மூத்த மைத்துனன் மௌனியாக இருப்பதால் இரண்டாவது மைத்துனனோடு அந்த போலீஸ்காரன் நெருங்கிய ஸ்நேகம் கொண்டான். போலீஸ்காரன், உறவு என்பதால் மைத்துனன் போக்கிரியாக நடந்துக் கொண்டான். ஊர் முழுவதும் சாராயக்கடை திறக்க எவனுக்கோ லைசென்ஸ் வாங்கிக்கொடுத்து எவனையோ பார்ட்னராக சேர்த்துக் கொண்டான். கடை திறந்தான்.

நிழல் நிழலோடு நன்றாய் கலக்கும் வெளிச்சத்தில் துண்டாய் நிற்கும் அயோக்கியன் அயோக்கியனுக்கு இறங்கிப் போவான். குறைவர கலப்பான்.

இருபத்து மூன்று வயது பாஸ்கருக்கு சாராயக் கடை லைசன்ஸ் கிடைத்தது மிகப்பெரிய துரதிருஷ்டம். இது புலியின் மீது சவாரி செய்யும் காரியம் புலியின் மீதே கண்ணாக இருப்பவன்தான் தப்பிக்கமுடியும். ஆனால், பாஸ்கர் புலியின்மீது அமர்ந்து கொண்டு உலகைச் சுற்றிப் பார்த்துவருகிறான். சந்தோஷம் எவ்விடம் என்று தேடினான். சந்தோஷத்தில் தள்ளாடினான்.

''குடிக்கறதுக்கு காசு இல்லையா...பொண்டாட்டிய அடகு வை; தெனத்துக்கு அரை லிட்டர் சாராயம் தரேன்.''

எவரிடமோ கேலியாக பேச, கேலி உண்மையாயிற்று. குடிப்பழக்கத்தால் வெட்கம் விட்டவன் வீட்டிற்கு கூட்டிப் போய் நீர்மோர் கொடுத்தான். நீர்மோர் குடித்த மரியா தைக்காக கொடுத்தவனுக்கு நூறு ரூபாய் பால்கரால் தரப்பட்டது. கூட்டிக் கொண்டு போனவனுக்கு அரை லிட்டர் சாராயத்துக்கு சீட்டு எழுதி தரப்பட்டது. விஷயம் புரிந்த பார்ட்னர் அதை ஒன்னரை லிட்டராக மாற்றிக் கொண்டார். குடித்தனம் நடத்த கஷ்டப்பட்ட வள் நீர்மோருக்கு நூறு ரூபாய் என்றால் மற்றதுக்கு எத்தனை என்று கணக்கு போட்டாள். இடம் கொடுத் தாள்.

கூடா ஒழுக்கம் கேடாய் முடியும். ஒழுக்கம் மீறுபவர் களைக் கண்டு ஒழுக்கம் மீறத்துடிப்பவர்களே கோபம் அடைகிறார்கள். வன்மையாய் கண்டிக்கிறார்கள். ஒழுக்கம் உள்ளவர்கள் ஒழுக்கம் மீறுபவர்களைக் கண்டு ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

ஒழுக்கம் ஒரு ஒட்டுவாரொட்டி. நல்ல ஒழுக்கமும் கெட்ட ஒழுக்கமும் மற்றவர் சங்கமத்தால் வருவது. நல்ல ஒழுக்கம் கொண்டவர்களோடு பழகுவதற்கு பெயர் சத்சங்கம்.

இந்த சத்சங்கம் நீடித்து நிலைக்க வேண்டும் அப்படி நிலைப்பின் ஆசைகள் அறும். ஒழுக்கம் அடக்கமான விஷயம். ஆசைகளை தவிர்த்துக் கொண்டே போகும் காரியம். மோகம் என்ற வடமொழிச் சொல்லுக்கு ஆசையென்றுதான் அர்த்தம். பெண் மோகம், மண் மோகம், பொன் மோகம் விலகிப் போக மனம் சலனமற்று இருக்கும். இது கொடு, அது கொடு, இவை வேண்டும், அவை வேண்டும் என்று அலறாது இருக்கும். அலறி துடிக்காத மனமே அமைதியாகும். அந்த அமைதியேதான் தன்னை உணரும் விஷயம். தான் யார்



என்று தெரிவதே முக்தி. அதுவே பரமானந்தம். இடர் தராத இதைவிடாத சந்தோஷம்.

மிகச் சுருக்கமாக ஆதிசங்கரர் இதைச் சொல்கிறார்.

சத்சங்கத்வே நித்சங்கத்துவம்

நித்சங்கத்வே நிர்மோஹத்துவம்.

நிர்மோஹத்துவே நித்சலத்தத்துவம்:

நித்சலத்தத்துவே ஜீவன் முக்திஹி

ஆனால் சத்சங்கம் அமைய, நல்ல ஒழுக்கம் உள்ளவர் களின் நட்பு அமைய கொடுப்பினை வேண்டும். இந்தக் கூட்டு எப்போதாவதுதான் கிடைக்கும். கிடைக்கும் போது பிடித்துக் கொள்ள வேண்டும். விட்டுவிட்டால் போயிற்று. மறுபடியும் குப்பையில் விழ நேரிடும். பிறகு ஆரம்பத்தில் இருந்து தேட வேண்டியிருக்கும்.

பாபு குருக்களோடு அதிக நேரம் செலவிட்டான். அவர் அவனை இறுக்கப் பிடித்துக் கொண்டார்.

''படிப்பு முடிஞ்சுடுச்சு ஐயா. வேலைக்கு போறதுக்கு மனசு ஒட்டலை. ஆனால் வேலைக்குப் போகாம இருக்க முடியாது.''

''உன் தம்பி மாசம் பனிரண்டாயிரம் சம்பாதிக் கிறான். ப்ளஸ் டு கூட முடிக்காத, காசுல புரள்றான். ஆயிரம் ரூபாய்க்கு வக்கில்லாத இருக்கேன்னு என்னை திட்டறாங்க ஐயா, நான் என்ன செய்யறது?''

''வேலைக்கு போ.''

''எனக்கு மண்டபத்துலே உட்காரணும் போல இருக்கு.''

''அது முடியாது. இங்க உட்கார்ந்தா உன்னை சீக்கிரம் உலகம் கண்டுபிடிச்சுரும். நீ பெரிய இது.

பெரிய அதுன்னு சொல்ல ஆரம்பிச்சுடும். உன் கால்ல விழுந்து உங்கிட்ட விபூதி வாங்கி உன்னை முன்னேற முடியாம தடுத்துடும். நீ ஒரு நிலைக்கு வர வரையிலும் உன்னை வெளியே காட்டாத. பேண்ட், சட்டையோடு இரு. நியாயமா சம்பாதி''

''தம்பிய பொண்ணு கேட்டு வராங்களாம். நூறு சவரன், நூத்தி பத்து சவரன்னு பேசறாங்க. அவன் கல்யாணத்துக்கு நான் இடைஞ்சலா இருக்கேனாம். அவன் வளர்ச்சிக்கு நான் தடையா இருக்கேனாம். எங்கன்னா செத்துத் தொலையேன்னு தம்பி திட்டுறான். அதனாலேயே மண்டபத்துக்கு வந்துடலாம்னு பார்க்கிறேன்.''

''யார் சொல்லி யார் சாக முடியும். நீ உலகத்த சரிபண்ண வேண்டிய நேரம் நெருங்கியிருக்கிறதா எனக்கு தோன்றது. உள்ள சுத்தமா தெளிவு வர வரைக்கும் இப்படியே இரு.''

'வீட்டையே திருத்த முடியலை. நான் நாட்டை எங்க திருத்தப் போறேன்'' பாபு அலுத்துக் கொண்டான்.

''வீடு வேற வெளி உலகம் வேறயா. எல்லாமே வீடு தான். திருந்தணும்னு துக்கப்பட்டு வருபவன் வருவான் வீட்டிலேர்ந்தோ, வெளிலேர்ந்தோ வருவான். அப்படி வர்றவனைக் கைகொடுத்து தூக்க வேணாமா.''

''எனக்கு புரியலையே ஐயா ஒரு சமயம் தெளிவாயிருக்கு ஒரு சமயம் குழம்புது''

''இது இப்படித்தான். இது கரடு முரடான பாதை. கால் இடறும். வழுக்கி விடும் ஏன் இந்த வழியில நடக்கறோம்னு கேள்வி வரும், நடந்துதான் ஆகணும் இது நம்ம வழி. தெளிவு வரவரைக்கும் முழுசா நம்மை நமக்கு தெரியற வரைக்கும் வெளியே மூச்சுக்காட்டாத



இருக்கணும். காக்கா கூட்டுல குயில் குஞ்சு உட்கார்ந்திருக்கிற மாதிரி சத்தம் காட்டாத உட்கார்ந்திருக்கணும். சத்தம் காட்டினா இந்த உலகம் உன்னைக் குத்திக் கிழிச்சிடும். இறக்கை முளைச்சதும் குயில் கூன்னு கத்திட்டு காக்காவவிட்டு ஓடிப் போயிடும். குயில் வேகத்துக்கு காக்கா வர முடியாது. கொஞ்ச தூரம் துரத்திவிட்டு 'என்னா இது ஒன்னும் புரியலையேன்னு உட்கார்ந்துடும். காக்காவால துரத்த முடியாத குயில் உச்சிமரத்துல உட்கார்ந்து ஆனந்தமா கூவிக்கிட்டிருக்கும். உடம்பு உதிர்ந்து போற வரைக்கும் குயிலுக்கு கூவறதே வாழ்க்கையா இருக்கும்.''

''ஐயா எத்தனை அற்புதமா பேசறீங்க'' பாபு அவரை நோக்கி கை கூப்பினான்.

''இது நீ கொடுத்த வரம் தாயீ'' அவர் பதிலுக்கு கைகூப்பினார்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கைகூப்பி கண்களால் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பாபு மிகப்பெரிய பலசரக்குக் கடையில் வேலைக்கு போனான். வாங்குபவர்களே வந்து பொட்டலம் பொட்டலமாய் கிடைக்கிற பொருட்களை எடுத்துக்கொள்ளும் பெரிய டிபார்ட்மென்ட்டல் ஸ்டோர் அது. அங்கே மேற்பார்வை உத்தியோகம் அவனுக்கு.

அங்கே வேலை கிடைக்க ஒரே ஒரு பதில் துணையாயிற்று.

ஏழுபேர்கள் ஒரு மேற்பார்வை வேலைக்கு போட்டியிட்டார்கள். ஏழாவது ஆளாய் பாபு இருந்தான்.

''ஒரு ஐந்தாயிரம் ரூபாய் கட்டு தெருவில் கிடக்கிறது. இருட்டு நேரம். தெருவில் எவரும் இல்லை. உன் கண்ணுக்கு மட்டும் அது பட்டுவிட்டது. நீ என்ன செய்வாய்'' கேள்வி கேட்டார்கள்.

''சாமி கொடுத்ததுன்னு எடுத்து பாக்கெட்டுல போட்டுக்குவேன்.''

''யார்து அந்தக் காசுன்னு தேடி கண்டுபிடிச்சு கொடுப்பேன்.''

கோயில் உண்டியல்லே போடுவேன்.

கோவில் உண்டியல்ல போடறதவிட ஒரு தர்மஸ் தாபனத்துக்கு என் நன்கொடையா கொடுத்துடு வேன்.

நன்கொடையா கொடுத்துட்டா செலவழிச்சா மாதிரி ஆயிடுமே. அதனால நான் அந்த அஞ்சாயிர ரூபா கட்டை போலீஸ் ஸ்டேஷன்லே கொடுத்துடுவேன்.

அந்த அஞ்சாயிரம் வச்சு பிஸினஸ் பண்ணி பெரிய ஆளா வந்து வருஷா வருஷம் அஞ்சாயிரம் தானமா தருவேன். அந்த அஞ்சாயிரம் அஞ்சு லட்சமா மாறர வரைக்கும் தானம் தருவேன்.

ஆறுபேரும் நெஞ்சை நிமிர்த்தி ஆறுவிதமாய் பதில் சொன்னார்கள்.

பாபுவிடமிருந்து ஒரே பதில் வந்தது, பாபு தயங்காமல் பதில் சொன்னான்.

நான் அதைத் தாண்டி போயிடுவேன்.

''ஏன்?'' கேள்வி கேட்டார்கள்.

''அது என்னதில்லீங்க, நான் ஏன் தொடணும்?''

''உரியவர்க்கு சேர்க்க வேண்டாமா.''

''உரியவன் தவறவிட்ட பிறகு அது அவனுக்கில்லை என்று ஆகிவிட்டது''

''அந்தப்பணம் உபயோகப்பட வேண்டாமா?''



''எனக்கு சம்பந்தமில்லாதவற்றை எப்படி உபயோகிப் பது என்று யோசிப்பதே தவறு.''

''அதை போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைப்பது என்ன தவறு?''

''ஒப்படைக்கப்பட்ட இடத்தில் அது கள்ளத்தைக் கொடுக்கலாம். உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கே வராதபோது இன்னொருவர் தலையில் அந்த பாரத்தை சுமத்துவது என்ன நியாயம்.''

''அதை வட்டிக்கு விட்டு அல்லது பெரிய வியாபாரம் செய்து ஐந்து லட்சமாய் மாற்றலாமே?''

''மாறும் என்று என்ன நிச்சயம். நஷ்டம் வந்தால் எடுத்த பாவம் மட்டுமே மிச்சம் அல்லவா?''

''நிச்சயமாக நீ தாண்டி போய் விடுவாயா?''

''நெல் முனையளவும் சந்தேகம் இன்றி தாண்டிபோய் விடுவேன்.''

''மறுபடி கேட்கிறேன். ஏன் தாண்டி போவதாய் சொல்கிறாய்?''

''என் உழைப்பில் வந்த பணம் எனக்குப் போதும். எனக்கு உரிமையில்லாதவைகளை என் மனதாலும் தொட மாட்டேன்.''

''யூ ஆர் அப்பாயிண்டட்,'' கேட்டவர் கட்டித்தழுவி அவனுக்கு வேலை கொடுத்தார்.

''இந்த டிபார்ட்மென்டல் ஸ்டோரில் ஐயாயிர ரூபாய் கிடைத்தது என்ன செய்வாய்?''

''இது உங்கள் இடம். அந்த பொருள் உங்களுக்கு உரியது.''

''நீ எடுத்துக் கொடுத்ததற்காக நான் உனக்கு இரு நூறுரூபாய் பணம் கொடுத்தால் என்ன செய்வாய்''

''நான் வாங்கமாட்டேன். என் வேலைக்கு கூலி கொடுத்தால் போதும்.''

''உன்னைப்போல் உள்ளவனைத்தான் தேடிக்கொண் டிருந்தேன். இந்தா சாவி, இப்போதே போய் வேலையை கவனி''

ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளத்திற்கு பாபு மாடாய் உழைத்தான். எல்லோரிடமும் இனிமையாய் பேசினான்.

காலை எட்டிலிருந்து மாலை எட்டுவரை வேலை. நடுவே இரண்டு மணிநேர இடைவெளி டிப்பாட் மென்ட்டல் ஸ்டோரை உள்ளுக்குள் பூட்டிக்கொண்டு கேக்கு வைத்திருந்த கண்ணாடிப்பெட்டிக்கு அருகே அட்டை பரப்பி படுத்துக் கொண்டான்.

பாதத்தில் இருந்து தலையில் உச்சிவரை படுத்த படியே உடம்பின் எல்லா பாகங்களையும் உற்று நோக்கி னான். கால் விரல்கள், பாதம், கணுக்கால், ஆடுதசை, மூட்டு, தொடை, ஆண்குறி, வயிறு, இரைப்பை, உணவுக் குழாய், இருதயம், நுரையீரல், தொண்டைக்குழி, தோள்கள், புஜங்கள், முழங்கை, உள்ளங்கை, விரல்கள், முகவாய், பற்கள், நாக்கு, அண்ணம், உள்நாக்கு, உள் மூக்கு, கண்கள், காதுகள், கபாலம் என்று உள்ளே புகுந்து பார்த்தான். அவைகளை பிரியமாய் வருடிக் கொடுத்தான். அவ்விதமாகவே கபாலத்திலிருந்து ஒவ் வொரு இடமாய் கீழிறங்கி கால் கட்டைவிரலை வருடினான்.

தூக்கத்திலேயே விழிப்பாக இருந்தது. விழிப்பிலே பெரிய விழிப்பை கொடுத்தது. விழிப்பிலேயே எந்நேரமும் இருக்க முடிந்தது. எத்தனை வேலை செய்தாலும்



அயர்ச்சி இல்லாமல் இருந்தது. எந்த கற்பனையிலும் மனசு பரவாமல் மனசு ஒன்றி செய்ய முடிந்தது எந்த தவறும் ஏற்படவே இல்லை.

ஆனால், நெடுநேரம் தனிமையாக இருக்க மனசு ஏங்கியது, உள்ளுக்குள் மூழ்கி உறைந்து கிடக்க ஆசை வந்தது.

பிரமிடு மாதிரி குடிசைக் கட்டிக் கொண்டால் சுற்றி யுள்ள சக்தி சிதறாமல் இருக்கும். இன்னும் நெருக்கமாகும் என்று தோன்றியது.

ஆனால் அவன் வீடு அதை ஏற்கவில்லை.

அப்பா அவனை அதிசயபிறவி என்று ஒரு நாள் நம்பி னார். பிறகு அவர் சுய இடத்திற்கே போனார்.

''எனக்குக் கூடத்தான் தோணும். சாயந்திரம் பெரிய மாப்பிள்ளை வருவாரென்று தோணும் நெனைச்சாப் போலவே கரெக்டா வந்துடுவாரு. உடனே நான் சாமி யாரா ஆயிட்டதா எண்ணமா.''

நெசமாலுமே நீ சாமியாருன்னா பெரிய சித்துவேலை காரன்னா இந்த இரும்புஆணி தங்கமா மாற்று பார்க்கலாம்

எட்டு அங்குல ஆணியை அவனிடம் தூக்கிப் போட் டார். பாபு ஆணியை எடுத்து உற்றுப் பார்த்தான். 'இதை தங்கமா மாத்த எனக்கு தெரியாது' என்றான்.

''அப்போ நீ ஒண்ணும் பெரிய ஆளு இல்லை'' அப்பா தீர்ப்பு கூறினார். துண்டை உதறி வெளியே போனார்.

ஆனா, இந்த ஆணி வேற என்னவாவோ மாறும். இது விதி. ஆணியை குப்பையில் தூக்கி போட்டான்.

வினோத் அதை எடுத்து வந்து. வாசல் சுவற்றில் தன் பெயரை எழுதினான்.

ஆணி வராண்டாவில் சுவரோரம் கிடந்தது.

திடீரென்று திறந்தது போலவே திடீரென்று சாராயக் கடையை மூடினார்கள். மூடப்பட்டபோது கணக்கு பார்க்க பாஸ்கரின் பங்குத் தொகை கம்மியாகவும் பார்ட்னரின் தொகை அதிகமாகவும் இருந்தது.

அவன் கணக்கில் ஒரு நாளைக்கு பல ஒன்னரை லிட்டர் கழிக்கப்பட்டிருந்தன. காசு கொடுக்கச் சொன்ன கடிதங்களும் இருந்தன. அரை லிட்டர் ஒன்னரை லிட்டராகவும், ஆயிரம் ரூபாய் நாலாயிரம் ரூபாயாகவும் மாற்றப்பட்டிருந்தது. சண்டை மூண்டது. அடி தடி ரகளை ஏற்பட்டது.

மத்யஸ்தம் பேச லைசென்ஸ் வாங்கி கொடுத்த சப் இன்ஸ்பெக்டர் அத்தான் வந்தார்.

பாஸ்கரிடமும், பார்ட்னரிடமும் தனித்தனியாக பேசினார்.

நீங்க ஏங்க கூறுகெட்ட மச்சானுக்கு வக்காலத்து வாங்கறீங்க. ஊரான் பெண்டாட்டிய கூத்தியாள வச்சு அங்க கொண்டு போய் துட்டு கொட்றான். நீங்க எங் கூட பார்ட்னரா சேர்ந்துக்குங்க. எனக்கு ரெண்டு பிராந்தி கடைக்கு லைசென்ஸ் வாங்கிக் கொடுத்தாங்க. ரெண்டு தெருவிலேயும் பக்கத்து பக்கத்து வாசல் இருக்கற ஒரே இடத்தை பிடிச்சிருக்கேன் ஒரே கடைல லைசென்ஸ் வச்சி ரெண்டு கடை நடத்தலாம். மொத்தம் மூணு கடை ஆவும் மூணுலேயும் ஷேர் போடுங்க. லைசென்ஸ் வாங்கிக் கொடுக்க, ஓஹோன்னு ஓட்டலால். இதுலே சம்பாதிக்கிறா மாதிரி எதுலேயும் சம்பாதிக்க முடியாது.

பாஸ்கரின் பார்ட்னர் ஆசை காட்டினான்.



நீங்க சம்பாதிக்கிற வழிய பாருங்க. உங்க மச்சானை அறுத்துவுட்டுடுங்க. அவனுக்கு இதுல சேரனும்னா நான் கடைய வைக்கலே. நான் ஹோட்டல் வச்சு பிழைச்சுக்கு வேன்,

தீர்மானமாக பாஸ்கர் மறுத்தான். சப் இன்ஸ்பெக்டர் மனைவி சீதாவிடம் யோசனை கேட்க, அவள் தம்பியை அறுத்துக்கச் சொன்னான்.

சாராய வியாபாரமும் அறுபட்டது. காசு இல்லாமல் போயிற்று. இது வரைக்கும் உரசி உரசி காசு வாங்கியவர்கள் உதறித் தள்ளினார்கள் கதவு சாத்தினார்கள்.

அங்கேயும் அடிதடி ஏற்பட்டது.

பாஸ்கர் மோசமாய் தாக்கப்பட்டான். சப் இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு போய் ரகளை செய்தான். கண்ணாடிகளை உடைத்தான். அவனை ஒருவாரம் ஜெயிலில் சப் இன்ஸ்பெக்டர் அடைத்தார். அவமானப்படுத்தினார். ஊர் சிரித்தது.

டாக்டர் ஒரு பிராந்திக்கடையில் ஷேர் போட அவரும் சகலையோடு சேர்ந்து கொண்டார்.

''எனக்கு காசு கொடு. நான் தனியா கடை நடத்தறேன். நான் துட்டு சம்பாதித்தபோது தின்னிங்கில்லே. வீடியோவும், டி.வி. பெட்டியும் வாங்கினீங்கலே. இப்ப துட்டு கொடு.'' பாஸ்கர் கத்தினான். தினமும் ரகளை செய்தான்.

தான் வாங்கிய கலர் டிவியை தானே போட்டு உடைத்தான்,

வீட்டுக் கூச்சலால் பாபு பாதிக்கப்பட்டான். உள்ளுக்குள் அமிழ முடியாமல் தவித்தான்.

அமிழும்போது கூச்சல்வர மனசு இரண்டுங்கெட்டான் நிலைக்கு போயிற்று. டிப்பார்ட்மென்டல் ஸ்டோரில்

இரண்டு மணிநேரம் தியானம் பண்ணுவதால் ஒரு அளவுக்கு தாக்கு பிடிக்க முடிந்தது.

அப்பா இரண்டு மாப்பிள்ளையையும் வரவழைத்து பாஸ்கரை சேர்த்துக் கொள்ளும்படி மன்றாடினார். அவர்கள் அவனை பற்றிய அத்தனை அசிங்கங்களையும் வீட்டில் இறைத்தார்கள்.

'கெட்ட பொம்பளை சகவாசம் போகணும்னா முதல்ல இவனுக்கு கல்யாணம் பண்ணிவைங்க. மொட்டைப் பையனோடு பார்ட்னரா இருக்க முடியாது'' என்று சீறினார்கள்.

''இவனுக்கு அண்ணன் பாபு இருக்கானே அவனுக்கு கல்யாணம் நடக்கலையே. பாபுவுக்கு செய்தா பாஸ்க ருக்கு எப்படி செய்யறது'' அம்மா கவலைப்பட்டாள்.

பாபுவை கீழே கூப்பிட்டார்கள்.

''தனக்குத் திருமணம் என்பதே இல்லை. எத்தனை வயதானாலும செய்து கொள்ளும் எண்ணம் இல்லை. இப்போது தம்பிக்கு திருமணம் செய்வதில் எந்த ஆட்சே பனையும் இல்லை'', என்று பாபு சொன்னான்.

சப்-இன்ஸ்பெக்டருக்கு அவன் பேச்சு ஆச்சரியமாக இருந்தது.

''ஏம்பா. நீயும் எதனா பொண்ணோடு தொடர்பு வச்சுகிட்டிருக்கியா''' கண் சிமிட்டிக் கேட்டான்.

''ஆமாம்'' என்று பாபு பதிலில் வீடு சில வினாடிகள் திகைத்து நின்றது'

''யார் பொண்ணு?'' டாக்டர் மாப்பிள்ளை கேட்டார்.

பாபு தயங்கினான்.



''வாலை என்று பெயர். மனசு ஒரு நிலையில் அடங்கும் போது உடம்பு சக்தி ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்ற போது உள்ளுக்குள் ஒன்பது வயது பெண்ணின் உருவம் தோன்றும். காமம் இல்லாது அதனோடு பழக்கம் கொண்டு மகளாய், நட்பாய் நடத்த முடியும். என்னுள் அந்த வாலை தோன்றியிருக்கிறது. நான் அவளோடு இருக்கின்றேன்.''

பாபுவின் பதில் அவர்கள் யாருக்கும் புரியவில்லை. டாக்டர் மாப்பிள்ளை மட்டும் தலையாட்டினார் இம் மாதிரி எங்கோ படித்தது போல் இருக்கிறது என்று சொன்னார்.

''ஒரு வேளை படிச்சத வச்சுன்னு சொல்றானா இந்த மடையன்.'' அப்பா கெக்கலித்தார்.

''அவன் எக்கேடாவது கெட்டு போகட்டும். ஆகற காரியத்த பாருங்க.'' அம்மா துரிதபடுத்தினாள் பாபு அம்மாவை உற்றுப் பார்த்தான்.

உள்ளே ஒரு பாசநூல் பட்டென்று அறுந்தது. எக்கேடாவது கெட்டு ஒழியட்டும் என்ற வார்த்தை அறுத்தது.

எது இந்த உலகத்தில் பெரிய கஷ்டமோ, எது உலகத் தோடு பிணைத்திருக்கும் முக்கியமான நூலோ, அது தானாக அறுந்தது. அம்மா அவனுக்கு அம்மாவாக இல் லாமல் சாதாரண பெண் பிள்ளையாகத் தோன்றினாள்.

''அப்ப கல்யாணத்த முடிங்க, பார்ட்டனராவத பத்தி யோசிக்கலாம்'' சப்-இன்ஸ்பெக்டர் தள்ளிபோட்டார்.

பாபு வராண்டாவிற்கு போய் உட்கார்ந்து கொண் டான். சுவரோரம் அந்த ஆணி கிடந்தது. அந்த ஆணி முழுவதும் இரத்தக்கறையாக பாபுவுக்கு தென்பட்டது. யாருடைய வயிற்றிலோ மூன்று முறை இறங்கியது.

''கட வுளே...கடவுளே'' கனவுபோல் அவன் மனசுக் குள்ளேயே பேசினான். உள்ளே இருப்பதிடம் இறைஞ்சி னான். தன் உள்ளே கைகுவித்து தன்னைச் சுற்றி அமைதி வரட்டும் என்று வேண்டினான். ஆனால் ஆணியின் இரத்தக்கறை மறையவேயில்லை. மாடிக்கு போய் கண் மூடி அமர்ந்து இடைவிடாது தன்னுள் இருப்பதோடு கெஞ்சத் துவங்கினான். கீழே குரல்கள் வலுவாயின.

''இது சும்மா பேச்சு. என்ன யோக்கியதையில் எனக்கு கல்யாணம் ஆவும். என்ன பார்ட்னரா சேருங்க அப்புறம் நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்.''

''அது நடக்காத கதை'' சப்-இன்ஸ்பெக்டர் சீறினார்.

''ஏன் நடக்காத கதை?'' பாஸ்கர் எழுந்து நின்று கத்தினான்.

''உங்க அப்பாவை பார்ட்னரா எடுத்துக்கு வேனே தவிர உன்னை பார்ட்னரா எடுத்துக்க மாட் டேன்''

''என்னை ஒழிச்சுடலாம்னு பார்க்கறியா.''

''எப்போ ஊரான் பொண்டாட்டியோட சம்பந்தம் வச்சியோ அப்பவே நீ ஒழிஞ்சு போயிட்டே.''

''இவரு பெரிய ஒழுங்கு மயிரு.''

''மரியாதையா பேசு. என் ஒழுக்கத்துக்கு என்னடா குறைச்சல்?''

''நீயும் என் அப்பனும் சேர்ந்து கோயில் நகை திருடல்ல? சாமிக்கு டூப்ளிகெட் நகை போடல?''

''டேய்...'' அப்பா கத்தினார்.

''இந்தப் பன்னாடைய வீட்டுல வச்சிருக்காதீங்க. அடிச்சு துரத்துங்க.'' சப்-இன்ஸ்பெக்டர் ஆவேசமுற்றார்.



''என் வீட்டுல இருந்து என்னை துரத்தறதுக்கு நீ யாருடா? உன்னைப்பத்தி ஆயிரம் மொட்டை கடுதாசி போலீஸ்க்கு போகும். அந்த திருட்டு நகை பத்தி விவரமா எல்லா பத்திரிகையிலயும் வரும்.''

''அதெல்லாம் தப்பு'' அம்மா பாஸ்கரனை தடுத் தாள்.

''நீங்க தப்பு பண்ணிட்டு என்னை தப்புங்கறீங்களா? என்னை பார்ட்னரா சேர்த்துக்கச் சொல்லு.''

''சேர்த்துக்குவாங்க கூவாத'' அம்மா அவனை அடக்கினாள்.

''இவன் டேஞ்ஜரான ஆள். இவனை சேர்த்துக்க முடியாது; இவனுக்கு கல்யாணம் ஆனாலும் சேர்த்துக்க முடியாது'' சப்-இன்ஸ்பெக்டர் திட்டவட்டமாகப் பேசினார்.

''நீ எங்க பெரிய அக்கா வீட்டுக்குப் போய் ரெண்டு கூடை ஆப்பிள் வாங்கி கொடுத்தியே, மல்லிப் பூ வாங்கி கொடுத்தியே அதைச் சொல்லட்டுமா''

''டேய்...நான் டாக்டரைப் பார்க்கப் போனேன்.''

''அப்ப ஏன் டாக்டர் இல்லாத நேரமா போனே. உனக்கு அக்காளும் வேணும் தங்கச்சியும் வேணுமா?''

''அறிவு கெட்ட நாயே'' சப்-இன்ஸ்பெக்டர் எழுந்து அவன் கன்னத்தில் அடித்தான். பாஸ்கர் அவனை பிடித்து தள்ள வெளியே வந்து விழுந்தான். விழுந்தவனை பாஸ்கர் எட்டி உதைக்க சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கரின் காலைப்பிடித்து இழுத்தான்.

பாஸ்கரின் பின்தலை 'நங்'கென்று வராண்டா சுவரில் மோதியது. அவன் தலை கிறுகிறுத்தது. வலி ஆவேசத்தை அதிகப்படுத்தியது.

அவனது இடதுகையில் அந்த எட்டங்குல ஆணி சிக்கியது. அதை வலது கைக்கு மாற்றினான்.

மேலே உட்கார்ந்திருந்த பாபுவால் இந்த சண்டையை தாங்கமுடியவில்லை. உக்கிரமாய் உள்ளே கதறினான்.

''தாண்டிப்போ' உள்ளே இருந்து குரல் கேட்டது. ஐயாயிர ரூபாய் நோட்டுக்கட்டை உன்னது இல்லையென்று தாண்டிப் போனாய் அல்லவா? அம்மாதிரி இதையும் தாண்டிப்போ. இதோடு உனக்கு சம்பந்தம் இல்லை. உன்னிடங் பேய்களுக்கு எவரும் உபதேசிப்பது இல்லை. கையேந்தியவருக்கு பிச்சை போடு அள்ளிக்கொடு. உதாசினப்படுத்துபவனோடு விலகிநில். எங்கும் போகாதே. இங்கேயே இரு உள்ளுக்குள் இருந்த அவனை இன்னும் உள்ளுக்குள் யாரோ அவனை இழுத்தார்கள். பாபு தன்னை மறந்த நிலைக்கு போனான், அவன் எல்லா புலன்களும் அடங்கின. மிகப்பெரிய சமாதானம், சமாதான அமைதி அவனுள் படர்ந்தது.

வலக்கைக்கு மாறிய எட்டு அங்குல ஆணியை கத்தி போல் பாஸ்கர் பிடித்துக் கொண்டான். எழுந்து தள்ளாடிய சப்-இன்ஸ்பெக்டர் வயிற்றில் 'சதக் 'சதக்' என்று மூன்று முறை குத்தினான். இரத்தம் பீறிட்டது. ஆணி முழுவதும இரத்தக்கறை ஆனது.

வீடு அலறியது. வெளியாட்கள் உள்ளே ஓடி வந்தார்கள். அப்பா பாஸ்கரின் பின்மண்டையில் ஓங்கி அடிக்க அடிபட்ட இடத்திலேயே மறுபடியும் அடி விழுந்து பாஸ்கர் மயக்கமானான்.

அதுவரை நடுங்கிக் கொண்டிருந்த டாக்டர் மாப்பிள்ளை விலகு விலகு என்று கத்தினார். கர்ச்சிப்பை பாட்டில் தண்ணீரில் நனைத்து சப்-இன்ஸ்பெக்டர் வயிற்றில் அழுத்தினார். ஒரு துண்டு கிழித்து இடுப்பை



சுற்றி கட்டுப்போட்டார். ஆட்டோவில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போனார்.

சப்-இன்ஸ்பெக்டர் உத்தரவுபடி போலீஸிற்கு போன் செய்தார்.

மயங்கிகிடந்த பாஸ்கரை முகத்தில் தண்ணீரை அடித்து சப்-இன்ஸ்பெக்டர் இருந்த அதே மருத்துவமனைக்கு போலீஸ் கூட்டி வந்தது.

''அவனை உள்ளே தள்ளி பெண்ட் நிமிர்த்து, சொல்றேன்'' சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கரை பார்த்து ஆவேசமாய் கத்தினான். கத்தியபோது இரத்தவாந்தி எடுத்தான். உயர் போலீஸ் அதிகாரிகளுக்கு வொயர் லெஸ்ஸில் செய்தி போயிற்று.

''அந்த சப்-இன்ஸ்பெக்டர் மேலே நிறைய கம்ப்ளெயிண்ட்ஸ் இருக்கு. மொத்தத்தையும் நோண்டுங்க.'' உத்தரவிடப்பட்டது.

சப்-இன்ஸ்பக்டரின் உயர் அதிகாரிகளே விஷயத்தை கிளரத் துவங்கினார்கள். பாஸ்கரிடம் ஆறுதலாகப் பேசி விஷயம் கக்க வைத்தார்கள்.

ரெய்டிலிருந்து ஆரம்பித்து திருமணம் ஆனதைச் சொல்லி சாராயப் பங்கு பற்றிப் பேசி பிராந்திக் கடை பார்ட்டனர் வரை பாஸ்கர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தான்.

சப்-இன்ஸ்பெக்டர் தன் தாயை தரக்குறைவாக பேசியதாகவும், சீர் அதிகம் கேட்டு கொடுமைப்படுத்தியதாகவும் தன் கண் எதிரேயே தன் தாயை அடிக்க முயன்றதாகவும் தடுத்த தன்னை கொலை செய்ய முயன்றதாகவும் விலாவாரியாய் எழுதினான். தற்காப்பு எண்ணத்தோடு மட்டுமே தான் தாக்கியதாகவும் சொன்னான்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நகல் சப்-இன்ஸ்பெக்டருக்கு அளிக்கப்பட்டது. அவர்மீது குற்றப் பத்திரிக்கை எழுதப்பட்டது.

நூற்று பத்து சவரன் நகை தான் சோதனைக்கு போன போது சரியாக இருந்ததாகவும், டூப்ளிகேட் நகைபற்றி எதுவும் தெரியாது என்றும் தனக்கு பெற்றோர் பேசி நடத்தி வைத்த திருமணத்திற்கே பாஸ்கரின் அப்பா சீர் செய்ததாகவும் வரதட்சணையாய் பத்து பைசாக் கூட வாங்கவில்லை என்றும் இதற்கு தன் மனைவியே சாட்சி யென்றும் எந்த சாராயக் கடையிலும் தனக்கு பங்கில்லை என்றும் சாராயக்கடை நடத்திய மைத்துனன் மீது மூன்று போலீஸ் ஸ்டேஷனில் மூன்று அடிதடி கேஸ் பதிவாயிற்று என்றும், இரண்டு வழக்கில்தான் அதை சமாதானப்படுத்தி விட்டு மூன்றாவது வழக்கில் மைத்துனனுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்ததாகவும் தீந்தமிழில் எழுதிக் கொடுத்தான்.

இவையெல்லாம் முடிந்துபோன பிறகு விடிந்தது. பாபு கீழே இறங்கி வந்தான்.

குளித்து வீட்டு டிப்பார்ட்மென்டல் ஸ்டோருக்கு போக தயாரானான்.

''வீட்டுல இவளோ பெரிய விஷயம் நடந்திருக்கு. நீ என்னடா வேலைக்கு போற'' அம்மா கத்தினாள்.

''எனக்கு இங்கு நடக்கறதோட எந்த சம்பந்தமு மில்லை'' பாபு பேசினான்.

''அப்ப ஏன் இங்க இருக்க வெளியே போடா: இந்த வீட்டுக்கு வராத வெளியே போ.''

''சரி நான் வரலை.''

''இந்த நாய் எங்க போவும். இங்கதான் வந்து சோறு திங்கும்'' அப்பா இழிவாய் பேசினார்.

''இனி இந்த நாய் இங்கு சோறு திங்காது.'' பாபு திட்டவட்டமாய் அறுத்தான்.



''அப்போ பொட்டிய எடுத்துட்டு வெளியே போ.''

''வெளியே போறதுக்கு பெட்டி எதுக்கு? பொட்டி என்னதுன்னு மறுபடியும் என்கிட்ட நீங்க வரவா. நான் கட்டின துணியோட போறேன்.'' பாபு வெளியேறினான்.

வீடுபற்றி இன்னொரு நூல் அறுத்தது.

அவன் வெளியேறிய பத்தாவது நிமிடம் கோவில் பாதுகாப்பு போலீஸ் படை அந்த வீட்டிற்குள் நுழைந்தது. அப்போது அந்தப் படையில் வேறு சப்-இன்ஸ்பெக்டர், வேறு கான்ஸ்டபிள்கள் இருந்தார்கள்.

இந்த முறை தப்பிக்க முடியவில்லை: அசலும் நகலும் கைப்பற்றப்பட்டன. அசலிலேயே ஐந்து பவுன் குறைந்தது. வீட்டிற்கு வர்ணம் அடித்த செலவு, கோவில் வீட்டிருந்த வரை வெளியேற்றி மாப்பிள்ளையை குடி வைத்த தகவல் கோவிலை கல்யாண மண்டபமாக பயன்படுத்திக் கொண்ட அத்துமீறல்கள் இன்னும் சில கையாடல்கள் எல்லாம் வெளியே வந்தன. ஒப்புக்கொண்டால் தண்டனை குறையு மென்று வற்புறுத்தப்பட்டது.

அப்பா ஒப்புக்கொண்டார். மாட்டிக் கொண்டார்.

வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எல்லா தினசரி யிலும் சந்தி சிரித்தது. ஊர் காறி உமிழ்ந்தது.

''அப்பா கொடுத்த ஆப்பிள், அப்பா கொடுத்த மல்லிப்பூன்னு சொன்னியே சப்-இன்ஸ்பெக்டர் கொடுத் தான்னு ஏன் சொல்லலே.''

டாக்டர் மனைவியின் தலைமுடியை உலுக்கிக் கேட்டார்.

''ஆமாம். அவன்தான் கொடுத்தான். இப்போ என்னடா'' அவள் தன் இயல்பை வெளிக்காட்டினாள்.

''உனக்காக எங்க அம்மாவை வெளியே துரத்தினேன்டி. உடம்பு விளங்காத தங்கச்சியையும் பைத்தியக்கார தம்பியையும் அடிச்சு துரத்தினேன்டி. அவங்கள துரத்திட்டு இந்த அசிங்கம் பண்ணலாம்னு திட்டம் போட்டியா?'' கன்னத்தில் அறைந்தான்.

''யார அடிக்கற. உன்னை வெட்டி எறியறேன் பார்.'' அவள் அரிவாள்மனையோடு அரக்கிபோல் ஓடி வந்தாள்.

''வெளியே போடி.''

''நீ வெளியே போ. இது கோயில் வீடு. என் பேர்ல இருக்கு. நான்தான் வாடகை தர்றேன்.''

''நான் இல்லாட்டி எப்படி நீ வாடகை தருவே.''

''ஊர்ல உன்னை விட்டா ஆம்பளையா இல்லை. கல்யாணம் ஆகி ஒரு பவுன் நகை போட்டிருப்பியாடா நீ. என்னை சந்தோஷப்படுத்தியிருக்கியா நீ. உன்னால முடியுமா. அதனாலதான் போனேன். போ போய் ஊர்ல எல்லார்கிட்டேயும் சொல்லு. எனக்கு கவலை இல்லை''

பேய்க்கு வாழ்க்கைப்பட்டவன் பேதலித்து நின்றான்.

அவன் மூட்டை முடிச்சுகளோடு வெளியேறினான். அவள் நிம்மதியாகத் தூங்கினாள்.

மறுநாள், எப்போதும் வாயில் கட்டை விரல் வைத்துக் கொண்டிருக்கும் தம்பி வினோத்தை வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

''துட்டு சம்பாதிக்கலாமடா?'' அவனிடம் கண் சிமிட்டிக் கேட்டாள்.

அவன் தலையசைத்தான்.

பேய்கள் பேய்களாகவே இருக்கும். மாற்ற முடியாது. மாறும் எண்ணம் உடையவர்களுக்கே மாற்றம் வரும். ஒருவர் மாற தன்னுள் பேசவேண்டும். தன்னை பற்றியே வெளியில் பேசுபவர்க்கு தன் வெளிதோற்றத்தையே அழகு என்பவர்களுக்கு தன்னுள் பேச முடியாது. தான் எதுவென்று புரியாது.



குத்தியப் பொருள் துரு. ஆணி குத்தப்பட்ட இடம் வயிறு.

நாலு அங்குலமே மூன்று காயங்களும் இருந்தாலும் இரத்த சேதாரம் அதிகம். ஆணியின் துருவை பார்த்துவிட்டு டாக்டர்கள் வியந்தார்கள். பயமுறுத்தினார்கள்.

''மொக்கை ஆணியே இவ்வளவு ஆழமா இறங்கிச்சினா கத்தியா இருந்தா என்ன கதி'' கவலைப்பட்டார்கள்.

''கத்தி பரவாயில்லை டாக்டர். இது துரு பிடிச்ச ஆணி.'' இன்னொரு டாக்டர் அபிப்ராயம் சொன்னார்.

கடுமையான ஆன்டிபயாடிக் மருந்துகள் ஊசி மூலம் ஏற்பட்டன.

அந்த மருந்துகள் சப்-இன்ஸ்பெக்டர் உடம்பை உருக்குலைத்தன. புரண்டு படுத்தாலும் வலி எடுத்தது.

வலித்து துடிக்கும்போது பெண் மோகம் காணாமல் போயிற்று.

ஜுரவேகத்தில் மருத்துவ தாதிகளை சிஸ்டர் என்று அழைப்பது போலவே மனைவியையும் சிஸ்டர் என்று அழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானான்.

''கடவுளே இனிமே எல்லாப் பெண்களையும் என் சிஸ்டரா நினைப்பேன்'' என்று கத்தினான்.

''கடவுளே என்னைக்காப்பாற்று'' என்று கத்தினான்.

பல்வலிக்கு மருந்து வாங்கப்போன குருக்கள் சீதாவை வழியிலே பார்த்துவிட்டு விவரம்கேட்டு தன் வலியை மறந்து அவன் இருக்கும் இடத்திற்கு ஓடினார்.

தூங்கிக் கொண்டிருந்தவன் வயிற்றில் மெல்ல கை வைத்து கடவுளை வேண்டினார். தன்னுள் ஆழ இறங்கி தன்னோடு பேசினார்.

இறையே: இவன் வலியை எனக்கு கொடு, இவன் எனக்கு எதிரி இல்லை. எனக்கு நண்பன். இவன் அறியாமல் செய்த பிழையை நானாகிய குருக்கள் மன்னித்து விட்டேன். என்னுள்ளுக்குள்ளே இருக்கும் நீயும் மன்னித்து விடு. இவன் உள்ளேயும் இருக்கும் நீ இவனை மலர விடு. இவன் மயக்கத்தை அறுத்து இவனை நல்லவனாக்கு. இந்த சீதா நான் பார்த்து வளர்த்த குழந்தை. இவளுக்காக இதை நீ செய்.

குருக்கள் புலம்பி புலம்பி வேண்டினார்.

சீதா வாய் பொத்தி அழுதாள்.

மனம் மாறினாள்.

குருக்கள் போன பிறகு புருஷனை உலுக்கி எழுப்பி நடந்ததை சொன்னாள்.

அவன் அழுதான். குருக்கள் அமர்ந்த நாற்காலியை தொட்டு கும்பிட்டான்.

"எனக்கு ரெண்டாயிரத்து நாநூறு ரூபாய்தான் சம்பளம். அதுல உன்னால குடித்தனம் பண்ணமுடியுமா சீதா. நாம வேற எங்கியாவது கிராமத்துக்கு மாத்திக்கினு போயிடுவோம். வேற மாதிரி வாழ்க்கை வாழ்வோம் தினம் கடவுளை கும்பிட்டு யாருக்கும் கெடுதல் பண்ணாத வாழ்வோம். எனக்கு என் சம்பளம் போதும். உனக்கு போதுமா சீதா?"

"நீங்க உசிரோட இருந்தாலே போதுமே. பிச்சையெடுத்தாவது சாப்பிடலாம். போலீஸ் உத்தியோகம் கூட வேணாம். தெரு தெருவா கடவுள் பேர சொல்லிட்டு பிச்சை எடுக்கலாம்-ஒவ்வொரு வருஷமும் நீங்க குத்துப்பட்ட தேதியில் பிச்சை எடுக்கறதா வேண்டிக்கிட்டேன். சாகறவரைக்கும் அதை நான் செய்வேன். நான் சுமங்கலியா சாவணும். பூவும் பொட்டுமா போவணும். இருக்கற மட்டும் என் ஆம்பளை துணையோட இருக்கணும்' ஆம்பளை இல்லாத பொம்பளைக்கு எத்தினி கஷ்டமுன்னு இங்கதான் புரிஞ்சுக்கிட்டேன். நீங்க நல்லபடியா நடந்துக்கறதா கத்தியம் பண்ணுங்க. எல்லாம் நல்லபடியா ஆயிடும்" கதறி கதறி வேண்டினாள்.



புருஷன் மனைவியிடம் அப்படியே சத்தியம் செய்தான்.

புருஷன் சிவம், மனைவி சக்தி. வெறும் உடம்பால் கலந்த சிவனும் சக்தியும் அந்த நிமிடம் மனதாலும் கலந்தார்கள்.

உடம்பைவிட மனசு பெரியது.

செயலைவிட எண்ணம் பெரியது.

உடம்பு, செயல், எண்ணம் மனது.

எண்ணம் தெளிவாகிப் போனால் எண்ணம் எழுகிற போதே அதை சுத்தப்படுத்தி விட்டால் செயலில் களங்கம் இருக்காது.

வலியும் அவமானமும் ஒரு நேரத்தில் மருந்தைப் போல் பயன்படும்.

கர்வம் பொய்மை என்கிற விஷத்தை—வலி, அவமானம் என்கிற விஷம் முறியடிக்கும். விஷத்தை விஷமே முறித்து போடும் மருந்தாகும்.

சப்-இன்ஸ்பெக்டர் உடம்பு மெல்லத்தேறியது. நான்கு நாட்களில் மிதமான வலியோடு நடமாட முடிந்தது.

'மிரகிள் எஸ்கேப்' என்று டாக்டர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

''உங்களுக்கு நல்லபாடி. அதனால தான் சீக்கிரம் தேறிட்டிங்க.'' என்று பாராட்டினார்கள்.

''இல்லிங்க. உங்க மாதிரி பெரியவங்க கைபட்ட ராசி, உங்க நல்ல மனசு நான் நல்லாயிட்டேன்.''

சப்-இன்ஸ்பெக்டர் அடக்கமாக பதில் சொன்னான். அவன் யாரைச் சொல்கிறான் என்று சீதாவிற்கு புரிந்தது.

அவன் லீவில் இருக்கும் போதே அவனை மதுரை ஏர்போர்ட்டிற்கு மாத்தினார்கள்.

உடனே போவதாக அவன் எழுதிக் கொடுத்தான்.

'உனக்கு வாட்டமான இடம்யா. நாலு பிளைட்டு தான்' வரும் செக்யூரிட்டி ஒண்ணும் கஷ்டம் கிடையாது. குவார்ட்டஸ் தருவாங்க. என்னா கொஞ்சம் ஊருக்கு ஒதுக்குப்புறமா குவார்ட்டர்ஸ் இருக்கு அதான் கஷ்டம்'' என்றார்கள்.

''அதான் நல்லது'' அவன் பதில் சொன்னான்

''மேல் வருமானம் ஒன்றும் கிடையாது என்று தொடர்ந்து சொன்னார்கள்.''

''ரொம்ப நிம்மதி'' அவன் கை கூப்பினான்.

''கொஞ்சம் தண்ணீர் கஷ்டம் குவார்ட்டர்ஸ்லே இருந்து கொஞ்சம் தொலவு போவணும்.''

''நான் எதுக்கு இருக்கேன் நாலு நடை தண்ணீர் கொண்டாந்தா உடம்பு இளைக்கும், கொழுப்பு குறையும்'' என்று சீதா பதில் சொன்னாள்.

அவள் எதை சொல்கிறாள் என்று அவன் புரிந்துக் கொண்டான்.

''உன்னை மட்டும் தனியா தண்ணி எடுக்க விட்டுடுவேனா நானும் பேர்பாதி சுமக்க மாட்டேன்.'' அவள் கைகளை ஆதரவாக பற்றிக் கொண்டான்.



சில பேருக்கு சில சமயம் வாழ்க்கை பிடிபட்டு போகிறது. சில செடிகள் பூச்சிகள் பட்டாலும் தப்பித்து விடுகின்றன. தாண்டி வந்து தழைக்கின்றன.

அவர்கள் விஷப் பூச்சிகளிடம் இருந்து விலகிப் போனார்கள்.

பாஸ்கருக்கு கொலை முயற்சிக்காக ஆறு மாதம் தண்டனை கிடைத்தது.

பாஸ்கர் அப்பாவுக்கு திருட்டு குற்றத்திற்காக மூன்று வருட தண்டனை கிடைத்தது.

அம்மா மூத்த மகளோடு இருந்தாள். வேறு வழியில்லாமல் சோற்றிற்காக தங்கினாள் மகளைக் கண்டு தாயே வெட்கப்பட்டாள். நாய் போல் வாழ்க்கை நடத்தினாள்.

டாக்டர் மனசாந்திக்காக கோவில் கோவிலாய் அலைந்தார் திருமலை அடிவாரத்தில் இட்லிக் கடை நடத்திக் கொண்டிருந்த அம்மாவை எதேச்சையாக பார்த்து காலில் விழுந்து அழுதார்.

என் ஊர் இனிமே திருப்பதி என்று முடிவு செய்தார் திருமலை தேவஸ்தானத்தில் பட்டங்களை காட்டி வேலை பெற்றார் மக்கள் சேவையே கடவுள் சேவை என்று அமர்ந்தார்.

குளிரான அந்த மலையின் நடுவே அவர்கள் குடி பெயர்ந்தார்கள் அந்த வீடு சந்தோஷமாக மாறிற்று. அவன் ஊரு இனி திருமலை திருப்பதி அவன் வீடு அவனுக்கு கோயில் அவன் தெய்வம் அம்மா என்று அமர்ந்தான். மனைவி என்று தான் மணந்த பேயை முற்றிலும் மறந்தான்.

குருக்கள் மெல்ல பாபுவை உலுக்கினார்.

''சாப்பிடலாமா'' என்று கேட்டார்.

துண்டு மட்டும் கட்டிக் கொண்டிருந்த பாபு மூன்று கவளம் சோறு அவர் உருட்டிப் போட அவன் சாப்பிட்டான். போதும் என்று நீர் குடித்தான்.

''எப்படி போதும் பசிக்காதா?'' குருக்கள் அன்போடு கேட்டார்.

''பாதி பசியோடு இருப்பதே நல்லது. முழு வயிறு உண்பது கர்வம் கொடுக்கும்'' என்றான்.

''பசித்திரு'ன்னு இதைத்தான் விவேகானந்தர் சொல்றாரோ'' குருக்கள் கேட்டார்.

''சுவாமி விவேகானந்தர் வயிறு பசி மட்டும் சொல்லவில்லை.''

''புரியறது விழித்திரு என்கிறாரே அது என்ன?

''உறங்காமல் இருப்பது.''

''அது எப்படி முடியும்?''

''உறக்கத்தை கவனித்துக் கொண்டு இருந்தால் முடியும்.''

''உறக்கத்தை கவனிப்பதுன்னா என்ன?'' குருக்கள் வியப்போடு கேட்டார்.

''உறங்கும்போதே உறக்கத்தை உற்றுப் பார்ப்பது கை நழுவும் மனசை பார்ப்பது, யார் உறங்குவது என்று பார்ப்பது.''

''அப்படி பார்க்க என்ன தெரியும்?''

''உறக்கத்தில் விழிப்புத் தெரியும். இதற்கு அறிதுயில் என்று பெயர். அறிந்தே தூங்குவது என்று அர்த்தம். அறியாமல் தூங்குவது தவறு. அறியாமையிலும் தூங்குவது தவறு. எந்நேரமும் தன்னை அறிந்தே இருப்பது அறிய ஆசைப்படுகிறவன் யார் என்று ஆழ்ந்து பார்ப்பது''



''இதுதான் தியானமா?''

''இதன் பெயர் விசாரம். தியானமென்றும் சொல்லலாம்.''

''விசாரம் என்றால்?''

''விசாரித்துக்கொண்டே இருப்பது''

''இப்படி விசாரித்தால் என்ன வரும்?''

''எட்ட உள்ளது கிட்ட வரும்.''

''எது எட்ட உள்ளது?''

''நிலா.''

''சாமி என்ன சொல்லுது, புரியலையே'' குருக்கள் கை கூப்பினார்.

''உள்ளே குளுமையான ஒளியோடு ஒரு ஒளி பந்து இருக்கிறது, நிலவு மாதிரி இருக்கிறது.''

''அதுகிட்டே வருமா?''

முதலில் எட்ட நின்று சிரிக்கும். பிறகு தொட்டு நிற்கும். பிறகு தன்னுள்ளே இழுத்துக்கொள்ளும். பிறகு நிலவு வேறோ, நீ வேறோ இல்லை. நீயே நிலவு. நிலவே நீ. வாழ்நாள் முழுவதும் பூர்ண சந்திரனாய் இருக்கலாம். பொலிவோடு இருக்கலாம்.''

''சாமி முகப்பொலிவைச் சொல்றீங்களா.'' குருக்கள் ஆர்வமாய் கேட்டார்.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும். அகத்தில் நிலவு நின்றால் முகத்திலும் நிலவு நிற்கும்.''

''சாமி வீட்டை உதறி வந்து ரொம்ப நாளாச்சே.''

''நான் இருக்கும் இடமே என் வீடு. நான் எங்கு போனாலும் என் வீடு என்னுடன் வரும்.''

''புரியுது சாமி உடம்ப சொல்லிருக்கீங்க. சாமி இங்கே இருக்கணும்ங்கிறது என் ஆசை.''

''எங்கே இருப்பினும் இங்கே இருப்பது போலத் தான்.''

''சாமி நிலாவ தொட்டுட்டீங்களா.''

பாபு பதில் பேசாது கண்களை மூடிக்கொண்டான். உள்ளே சின்னப் பொறி பெரிய ஒளிபந்தாயிற்று. ஒளிப் பந்து நிலவாயிற்று, நிலவு தன் கிரணங்களால் அவனை தொட்டது. பற்றி இழுத்தது. அவன் நிலவுக்குள் மூழ்கிப் போனான். வெளியே இருந்தவனை உள்ளே தள்ளி உள்ளுக்குள் யாரோ இழுத்துக் கொண்டார்கள். அவன் மிகுந்த மலர்ச்சியோடு புன்னகை செய்தான். நாட் கணக்கில் அசையாது இருந்தான்.

குருக்கள் அவன் வாயைத்திறந்து கஞ்சியை ஊற்றினார். உடம்பெல்லாம் துடைத்து, விசிறிக் கொண்டிருந்தார்.

அப்பன் திருடன் அம்மா பேராசை. ஒரு அக்காள் அசிங்கம். இன்னொரு அக்காள் காணோம். தம்பி போக்கிரி. இன்னொரு தம்பி அரைவேக்காடு. இது மட்டும் எப்படி நிலவாயிற்று?

குருக்கள் அதிசயப்பட்டார்.

''இதுக்குத்தான் சேற்றுல மலர்ந்த செந்தாமரைன்னு பேரோ'' வாய்விட்டு முனகினார்.

''இப்பேர்பட்ட நிலவை நான் எப்படி காப்பாத்த போரேன்: நானும் அரைவேக்காடுதானே.'' உள்ளே துக்கப்பட்டார். மெல்ல கண்ணயர்ந்தார்.



நிலவு எழுந்தது. தூங்குகிற குருக்களை உற்று நோக்கியது. மனதால் அவரை வருடிக் கொடுத்தது. எட்ட நின்று அவரைத் தொட்டுத் தழுவியது. குருக்களின் தலை உச்சியில் தன் கிரணங்களை பதித்தது. இறங்கி தெருவில் நடந்தது. உலகம் முழுவதும் தன் வீடு என்று உலா துவங்கிற்று.

குருக்களைத் தவிர பாபுவை வேறு யாரும் தேடவில்லை.

நிலவை பின் தொடர்ந்து யாரும் போக முடியாது என்று குருக்களுக்கும் தெரிந்து போயிற்று.

நிலவு எல்லோருக்கும் பிடித்தமான விஷயம். எங்கு போனாலும் வரவேற்பு இருக்கும். எல்லோரும் அதன் குளுமையில் நனைந்து மகிழ்வார்கள். நேசிப்பார்கள்.

## முற்றும்

## மாக்கோலம்

# மாக்கோலம்

''அந்த அம்மாவை சந்திக்கறதுக்கு ஒரு [அப்பா யின்ட்மெண்ட் கேளுங்க. உங்க பேர் சொன்னா சட்டுன்னு கிடைச்சுடும். எழுத்தாளர்னா அந்த அம்மாவுக்கு ரொம்ப மதிப்பு, மரியாதை. உங்களைப் பத்தி பேச்சு வந்தது. 'சீனிவாசன் ரைட்டிங்ஸ் பத்தி என்ன நினைக்கறீங்க?'ன்னு என்னைக் கேட்டாங்க; ரைட்டருக்கு ரைட்டர் விட்டுக் கொடுக்கலாமா? நமக்குள்ளே ஆயிரம் இருக்கும். அதை வெளியே காட்டிடலாமா! 'ரொம்ப நல்லா எழுதறாரு'ன்னேன் அந்தம்மா முகம் மாறினாப் போல பட்டது. 'ஆமா, ஆமா'ன்னு சிரிச்சுட்டே சொன்னாங்க.

''மொத்தம் பதினாறு ரைட்டர்ஸ் போயிருந்தோம். எல்லாருக்கும் காபி, பிஸ்கட் தந்து முக்கா மணிநேரம் தனித்தனியா பேசிக்கிட்டு இருந்தாங்க; போனவங்க எல்லாப் புஸ்தகமும் லைப்ரரிக்கு வாங்கிக்கறேன்னாங்க. ஒரு ரைட்டருக்கு நாலு புஸ்தகம் ஓ. கே. யாயிடுச்சு. ஒவ்வொண்ணும் அறநூறு காப்பி நாலு அறநூறு; இரண்டாயிரத்து நானூறு காப்பி. அவரு வெளியே நடந்து வந்த அப்பீரம் இருக்கே...என்னவோ கோட்டையே தனக்கு சொந்தம் மாதிரி நடந்தாரு.

''இந்த மாதிரி பத்து எழுத்தாளர்கள் ஒண்ணா போகும்போது நீங்க வரணும் சார். எந்தக் கூட்டத்துக்

கும் வந்ததில்லை. எவர் கூடவும் பேசறதில்லை. தனியா உட்கார்ந்து மாங்குமாங்குன்னு எழுதித் தள்ளறீங்க.''

நாலு தெருக்கள் சந்திக்கும் இடத்தில், ஈசான மூலை பக்கம் இருக்கும் டீக்கடை வாசலில் மூன்று எழுத்தாளர்கள். சீனிவாசனுக்கு புத்தி சொல்லிக் கொண்டிருந்தார்கள். சீனிவாசனும் கேட்டுக் கொண்டிருந்தான்.

காப்பி குடித்த பத்து நிமிடத்தில் டீ குடிப்பது கொடுமையான விஷயம். அடிநாக்கில் உட்லண்ட்ஸ் ஹோட்டல் காப்பியின் சுவை ஒட்டிக் கொண்டிருக்க, மத்தியான நேரத்தில் தெரு வெய்யமை முதுகைத்தாக்கும் போது டீயும் குடிக்க வேண்டியிருந்தது.

''அவரது விக்கற சமாச்சாரம், நம்மளுது விக்காத குப்பை நாம நாலு பேரைப் பார்த்து பல்லு காட்டி வித்தாவணும் அவரை ஏம்பா போய் நம்மோட இழுக்கற?''

பேர் மறந்துபோய், முகம் மட்டும் நினைவிலுள்ள ஒரு எழுத்தாளர் சிரித்தபடி சீனிவாசனைப் பார்த்துப் பேசினார்.

வெளியே சிரிப்பு காட்டினாலும் உள்ளே கோபம்? இருந்ததை உணர முடிந்தது.

'இவன் தன்னை கொம்பன்னு நினைச்சுட்டிருக்கான். இவன்கிட்ட போய் ஏன் இதையெல்லாம் சொல்றே சும்மா இரு இது நம்ம விஷயம். இவனை நம்ம கூட்டத்துல சேர்க்காதே' என்கிற எச்சரிக்கை தெரிந்தது.

''என்னுதுகூட இரண்டு புஸ்தகம் லைப்ரரி ஆர்டர் வரலீங்க; பப்ளிஷர் சொன்னாரு.''

''அப்படியா...அப்படியா...என்ன புஸ்தகம்?''



''எதுன்னு தெரியலை. பப்ளிஷரைக் கேட்கணும். ஏகப்பட்ட புஸ்தகம் போட்டிருக்கறதா எதுன்னு தெரியாத போச்சு...''

''அப்படியில்லைங்க. புஸ்தகம் பேர் சொல்லலை. பப்ளிஷர் நேரா வீட்டுக்கு வரேன்னாரு.''

''பப்ளிஷர், வீட்டுக்கு வராம நாங்க நடையா நடக்கணும், அவங்க கடைக்கு அப்பமும் மூஞ்சி கொடுத்துப் பேச மாட்டாங்க. உள்ள நுழைஞ்சவுடனே என்னான்னு கேட்பாங்க.''

''அவருது விக்கிற புஸ்தகம் நம்மளுது விக்காத குப்பை. நாமே போட்டாத்தான் நம்ம சரக்கு விக்கும். என்னா நான் சொல்றது?''

சீனிவாசன் எந்த பதிலும் சொல்லாது அந்த மூவரையும் பார்த்து சிரித்தான். இவர்கள் கோபத்தில் அக்கறையில்லாது இருந்தான். ஆனாலும் அந்த அம்மாள் யார்... எதற்கு தன்னைப்பற்றி பேசினார்கள்...என்ன இவர்கள் பதில் சொன்னார்கள் என்று தெரிந்து கொள்ளும் ஆவல், அடிமனதில் முளையிடத் துவங்கியது.

''கோட்டையில இருக்காங்களா?''

''ஆமா, சமூகநலத்துறை.''

''சமூகநலத்துறைக்கும் எழுத்தாளர்களுக்கும் சம்பந்தம் உண்டா?''

''தெரியலை''-சட்டென்று ஒரு எழுத்தாளர் பதில் சொன்னார்.

சீனிவாசன் சிரித்தான்.

''அவரு கால் வாரி விடறாருப்பா. நீ புரியாத தெரியல்லை'ன்னு பேசறியே...''

''சமூகநலத்துறைன்னு சொன்னாரேன்னு நினைச்சேன்...''

''என்ன சமூக நலம். எல்லோரும் சாப்பாட்டுக்குத்தான் எழுதறோம். அதுக்குத்தான் போய் பேசிட்டு வந்தது. இன்னிக்கு நாளைக்கு அம்மா சொல்லி ஆர்டர் போட்டாங்கன்னா ஆறு மாசம் ஆவும் செக்கு வர. வர தீபாவளிக்கு சட்டை துணி எடுக்கலாம்.''

''லாபம்தானே...என்னாங்க சீனிவாசன் நான் சொல்றது?''

''லாபம்தான். ஆனால் சீனிவாசனுக்கு இதெல்லாம் தூசு விஷயம்.''

''நிறைய படிக்கறாங்களா?''-சீனிவாசன் கேட்டான்.

''ஐ ஏ எஸ்.''

''அதில்லை. இன்னிய புஸ்தகம் நிறைய படிக்கறாங்களா?''

''படிக்கறாப்போல தெரியுது. ஒரு கவிஞர் புஸ்தகத்துல பிழை திருத்தம் செஞ்சாங்க.''

''என்னா பிழை?,'-சீனிவாசன் ஆவலானான்.

''வளைஞ்ச முதுகுன்னு எழுதறானய்யா. இவனெல்லாம் கவிஞனாம்.''

''சரி...அது கொச்சை.''-யாரோ சமாதானம் சொன்னார்கள்.

''பேசறாப்பலயே கவிதை எழுதுனா அது கவிதையா?''

''நாவல்ல கொச்சை வரலாம்; கவிதையில கூடாது.''



''நாவல்லயும் கூடாதுங்க. கேக்கறதுக்கு ஆள் இல்லை. நீங்கள்லாம் எழுதறீங்க. மு.வ. காலத்துல தமிழ் தப்பா எழுதினா படிக்க மாட்டாங்க. தூக்கி போட்டுருவாங்க.''

''அதான் இலக்கியம் வளரலை.'' சீனிவாசன் சீண்டிப் பார்க்க முடிவு செய்தான்.

''மயிரு வளரலை. இவரு எழுதி புடுங்கின பிறகுதான் இலக்கியம் வளர்ந்துடுச்சா''

இலக்கியம் வெகு ஜனத்தினின்றும் தொலைவில் போனதுக்கு இதுவும் ஒரு காரணம்.

''கொச்சையாக்கிட்டா நெருங்கி வந்துருமா? மொழிக்கு ஒரு மரியாதை வேணாம்?''

''உங்க புஸ்தகம் அறுநூறு காப்பி லைப்ரரி ஆர்டர் வரக் காரணம்; புஸ்தகம் படிக்கிறவர்களாலும்தான். பல புத்தகம் படிக்கிற காரணம் தமிழ் பேச்சு மொழிக்கு அருகே வந்ததுதான்.''

''ஏன், உங்களாலதான்னு சொல்லிக்கங்களேன்...''

''நான் காரணமில்லை. 'தினத்தந்தி' ஒரு காரணம். மேடைப்பேச்சில், பேச்சுத் தமிழில் பேசிய பெருந்தலைவர் காமராஜர் காரணம்.''

''தினத்தந்தியில கொச்சை வரலீங்க...''

''தமிழில் எளிதாக்கப்பட்டது.''

''ஆனா காமராஜ் கொச்சையாதான் பேசுவாரு. கேட்டிருக்கேன்.'' வேறு எழுத்தாளர் தலை நுழைத்தார்.

''நாம பேசறாப்பல மேடையில பேசுவாரு.''

''நாவல்ல அப்படித்தான் பேசமுடியும். அப்பத்தான் பாத்திரப்படைப்பு மனசுல நிக்கும்.''

''ஆசிரியர் கூற்று வரும்போது கொச்சை எழுதறாங்களே?''

''நான் எழுதறதில்லை.''

''நான் உங்களைச் சொல்லலை.''

''ஏம்பா உடனே சண்டை ஆரம்பிச்சுடறீங்க? நாலு எழுத்தாளர் சேர்ந்தா சண்டைதானா?''

''ஆனா. அன்னிக்கு சண்டையே இல்லீங்க. நா முந்தி நீ முந்தின்னு பேசவேயில்லை யாரும்.''

''இருந்துச்சு. அடக்கிட்டோம்.''

''என்னைப் பத்தி என்ன சொன்னாங்க அந்த சமூக நலத்துறை அம்மா.''

''ஒண்ணும் சொல்லலை.''

சீனிவாசன் ஏமாற்றமடைந்தான். மாறாக மெல்ல சிரித்தான்.

''உங்க பேரு சொல்லி அபிப்பிராயம் 'என்னைக் கேட்டாங்க. நல்ல எழுத்துன்னேன். இவங்க யாரும் அவங்க கேட்டதை கவனிக்கலை.'' —முதலில் வரவேற்று உபசரித்த எழுத்தாளர், சீனிவாசனிடம் இதை ரகசியம் மாதிரி சொன்னார்.

''என் புஸ்தகம் இரண்டு வேண்டாம்னுட்டாங்களாம் லைப்ரரியில. நான் போய் கேட்கலாமா?''

''கேளுங்க.''

''இவங்க சொன்னா லைப்ரரியில நடக்குமா?''

''சமூகநலத் துறைன்னு பார்க்கறீங்களா? டெம்பரரியா மாவட்ட நூலக நிர்வாகமும் இவங்கதான் பார்க்கறாங்களாம். அதனால இப்பமே போய் காரியம் முடிச்



கடறது பெட்டர். வேணும்னா நாளைக்கு நான் உங்க கூட வரட்டுமா?''

''இவர் தேவைதானா'.—சீனிவாசன் யோசித்தான்.

''நம்முடைய கவிதைகள் நீங்க படிச்சிருப்பீங்க இல்லையா? அது பத்தி நீங்க மேடத்து கிட்ட பேசணும். அடுத்த புஸ்தகம் நீங்க பண்றபோது அவங்களை தலைமையா வெச்சு ஒரு விழா ஏற்பாடு பண்ணனும்...''

இது ஒரு தந்திரம். 'இன்னார் தலைமையில், இன்னார் முன்னிலையில் வெளியிடப்பட்ட புத்தகம் என்பதால், இதற்கு லைப்ரரி ஆர்டர் தருமாறு வேண்டிக் கொள்கிறேன்' என்று கடிதம் எழுத வாய்ப்பாக இருக்கலாம்.

''உங்களுது பனிரெண்டு புத்தகம் கொடுத்தேங்க. இரண்டு ரிஜெக்ட் ஆயிடுச்சு அதில எதுவும் செக்ஸா எழுதியிருந்தேளா?''—சீனிவாசனை அவன் பதிப்பாளர் கேட்கும் போது ஆச்சரியமும் லேசான கோபமும் ஏற்பட்டன.

''நீங்க போய் ஏதாவது பேசி அந்த இரண்டுக்கும் ஆர்டர் வாங்கினா சௌகர்யமா இருக்கும். உடனே அடுத்த எடிஷன் கொண்டாந்துடலாம். உங்க புஸ்தகம் விக்குது சௌகர்யம்தானே. ஏன் விடணும்? முடிஞ்சா போய் பாருங்க. உங்களுக்கு அப்படி போறது மதிப்பு கம்மின்னு நினைச்சீங்கன்னா வேணாம்.''

சீனிவாசனின் பதிப்பாளர் அவனிடம் அடித் தொண்டையில் தயங்கித் தயங்கி கூறியது ஞாபகம் வந்தது.

ஒரு முறை போய்ப் பார்த்தால் ஐநூறு அறுநூறு பிரதிகள் லைப்ரரிக்கும் போகும். போய்ப் பார்க்கலாமா

இதுவரை எவரையும் புத்தக விற்பனைக்கு என்று போய் பார்த்ததில்லையே...இப்போது அவசியம் தானா?

'போய்ப் பார்க்கலாம்' என்று உள்ளூர ஆசை வருகிறதே அந்த அதிகாரி பெண் என்பதாலா? என் எழுத்து பற்றி பெண் அதிகாரி விசாரித்தார் என்பதாலா?

என்ன ஈர்ப்பு இது எத்தனை வயதானாலும் இந்த எதிர்பக்க ஈர்ப்பு ஏன் போவதில்லை?

பெண் அதிகாரி என்றவுடன் தானாய் என் மனசுள் மிக அழகான ஒரு பெண்ணை கற்பனை செய்து கொள்கிறேனோ? அழகான பெண்மணியால் பாராட்டப்படுவது சுகம் என்று கருதுகிறேனோ? என் கர்வத்துக்கு தீனி என்று நினைக்கிறேனோ?

'கடவுளே...என்ன இது ஏன் இப்படி பெண்ணென்னும் மாயப்பிசாசு...'

'நிறுத்து: பிசாசு நீ. பெண்ணைச் சொல்லாதே. இது ஏன் மாயமாக காட்சிதருகிறது என்று கேள் உன்னிடமே விசாரி'

மனசு சட்டென்று யோசிப்பை நிறுத்தியது.

''அந்தம்மா பேர் என்னங்க?''—சீனிவாசன், எழுத்தாளரிடம் விசாரித்தான். மனசு அழகு என்கிற இடத்திலிருந்து மெல்ல விலகியது. தோற்றம் பற்றி சிந்தனை ஏன் என்கிற அடக்கம் வந்தது.

''பாண்டிமாதேவி.''

''என்னாங்க?''

''பாண்டிமாதேவி.''

சட்டென்று மனசுள் கிரீடமும் செங்கோலுமாய் ஒரு பெண் நின்றாள். சிரிப்பு வந்தது.



பின்பக்கம் மஸ்லின் துணி புரள கச்சு அணிந்து... ''டேய் சீனிவாசா...''

''அம்மா—இது. தனக்குள் தானே கூவினான்.

''சார்...போய்ப் பார்க்கப் போறீங்களா? நானும் வரேன் இரண்டு பேரும் போய் பார்க்கலாம்''— எதிரே உள்ள எழுத்தாளர் அவசரப்பட்டார்.

சீனிவாசன் தயங்கினான்.

''இப்படி நமக்கு அனுகூலமா அதிகாரிங்க வரது ரொம்ப ரேர் சார். வரபோது நாம் பயன்படுத்திக்கணும்'' காதோடு சொன்னார்.

''இல்லீங்க நிச்சயம் அப்படியில்லை.''

''எப்படி சொல்றீங்க?'' ரொம்ப மகிழ்ச்சியா இருந்தது அவங்க முகம்.''

''எப்போ?''

''உங்களைப்பத்தி பேசறப்போ.''

''கேலியாகவும் இருக்கலாம்.''

''இல்லீங்க. உங்க புஸ்தகம் மேசைல இருந்தது. என்னவோ யுத்தம்னு...''

''முதல் யுத்தம்.''

''சரித்திரக் கதையா?''

''ஆமாம்.''

''அது புரட்டிப் பார்த்துக்கிட்டேதான் கேட்டாங்க. உங்க எழுத்தப்பத்தி என் அபிப்பிராயம் என்னன்னு நான் நல்ல எழுத்துன்னதும் சிரிச்சாங்க. ஆமான்றமாதிரி சிரிச்சாங்க.''

மறுபடி உள்ளே ஆவல் தோன்றியது.

''யார் நீ? ஏன் என்னைக் கேட்கிறாய்? என்ன புரிந்தது உனக்கு? விரும்பி விசாரித்தாயா? அல்லது வேறு எதுவும் வேதனையா?''

ஆனால் ஆவலை வெளியே காட்டிக்கொள்ளாது இருப்பது நல்லது சில இடங்களுக்கு எவர். துணையுமின்றி தனியே போவது நல்லது. எவரையும் நம்பாமல் இருப்பது உத்தமம்.

நாளை அங்கே அந்தப் பெண்மணியிடம் போய் நிற்க, ''எஸ்...வாட் டு யூ வாண்ட்?'' என்று அதட்டலாம்.

''அவரு லைப்ரரி ஆர்டர் கேட்க வந்திருக்காங்க...'' இந்த எழுத்தாளர் தன்னை பின்னிருத்தி. சீனிவாசனை முன்னால் தள்ளக்கூடும்.

''காரணம் இல்லாத ஆர்டர் நிறுத்திருப்பாங்களா? பத்து புத்தகங்கள் ஆர்டர் தரப்பட்டிருக்கிறது. மத்த எழுத்தாளர்களுக்கும் வாய்ப்பு தர வேண்டாமா?''

''இவை இரண்டும் நல்ல புத்தகங்கள் அம்மணி.''

''மோசமான புஸ்தகம் எழுதியிருக்கிறேன் என்று எந்த எழுத்தாளர் ஒப்புக் கொண்டிருக்கிறார்? நல்லது. கெட்டது தேவை, தேவையில்லை என்பதை அரசு தீர்மானிக்கும். நீங்கள் போகலாம்.''

வெளியேற வேண்டியிருக்கும்.

''நான்தான் கூட்டிக்கிட்டு போனேன். நீ எழுதறது எல்லாம் நல்ல புஸ்தகமா? நீ சொல்லிட்டா வாங்கிடுவமா எங்களுக்கு தெரியும். வந்த வழியப் பாத்துகிட்டு போங்கன்னு கத்திச்சு அந்த அம்மா துண்டைக் காணம், துணியைக் காணம்னு ஓடி வந்துட்டோம். அவரு எழுத்து அவ்ளோ சுத்தம் இல்லைண்ணே. தமிழர் மரபுன்னு



ஒண்ணு இருக்குதுல்ல...அது மீறி எழுதினா தூக்கி வெளிய போட்டுட்டாங்க.''

கூட்டிப் போனவனே முதுகில் குத்தக் கூடும். குத்துப் பட்டு சரிந்ததை முச்சந்தியில் சொல்லக்கூடும், பூனையை மடியில் கட்டி சகுனம் பார்ப்பானேன்...''

''இல்லீங்க எனக்கு நிறைய வேலை இருக்கு என் பப்ளிஷரை போய் பார்க்கச் சொல்றேன்.''

''உள்ளேயே விட மாட்டாங்க''

''அதெல்லாம் அவரு பார்த்துக்குவாரு. விவரமான மனுஷன்.''

''நீங்க போய் கேட்டா டக்குன்னு ஆர்டர் கிடைச்சுடுமில்லை...''

''வேணாங்க. இதுவரைக்கும் போனதில்லை. இனி எதுக்கு போகணும்?''

''அப்ப வரலீங்களா?''

''இல்லீங்க.''

''அப்ப சரி.''

சீனிவாசன், எழுத்தாளர்களிடம் கை குலுக்கிவிட்டு வெளியே நடந்தான்.

போக வேண்டும் என்று திடமாய் உள்ளே தீர்மானித்தான்.

எப்போது போவது? இப்போதே. உடனே போய்ப் பார்த்தால் என்ன?

ஸ்கூட்டரை, கோட்டையை நோக்கித் திருப்பினான் மனசு அந்த அதிகாரியைப் படம் வரைய ஆரம்பித்தது.

தடுத்து நிறுத்தினான். விடாமல் போட்டு முடிந்தது. மனம் போட்ட படம் அழிந்து உண்மை உருவம் மனசு. பதியுமே அந்த விநாடியை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டான்.

''சமூகநலத்துறை எதுங்க?''

''ஆறாவது மாடி''

ஆவல் அதிகரித்தது தன் ஆவலைத் தன் முகம் காட்டிக் கொடுத்து விடுமோ என்கிற பயம் வந்தது.

''நேத்து விசாரிச்சத உங்க கிட்ட சொல்லிட்டாங்களா? உடனே ஈன்னு வந்து நின்னாச்சா? இந்த ஆம்பளைங்களே...''

அந்தப் பெண்மணி அபிப்பிராயமாய் ஒரு அபிப்பிராயம் அவனுள் ஓடியது.

மனசு விசித்திரமானது.

எப்போதும் எதிர்காலத்லையே நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பது அந்த ஏக்கத்தால் எதிர்கொள்ள வேண்டியதைத் தாங்க முடியாது தவிப்பது.

மனசு விசித்திரமானது.

இறந்த எதிர்காலத்தில் இல்லாத நேரம் எதிர்காலத்தில் வாழ்வது இறந்த காலத்தில் வாழ்வதற்கு பெயர் தான் கதை எழுதுதல் நடந்ததை மீண்டும் எண்ணி அசை போடுதல் இந்த நிலையில் நிகழ்காலம் தெரியாது மறந்து போகும். நிகழ்காலத்தில் வாழாத மனசு தடுமாறும். நடப்பதை ஏற்க மறுக்கும். நடப்பை மறுக்கும் போது பிரச்சினைகள் ஆரம்பிக்கும்.

ஹியர் அண்ட் நௌ பாய்ஸ்... ஹியர் அண்ட் நௌ எங்கோ மனசுள் மைனாவின் குரல் கேட்டது.



ஆல்டக்ஸ் ஹக்ஸ்லி என்கிற எழுத்தாளன் கதையில் மைனா பேசும். அடிக்கடி இதையே சொல்லும். ஹியர் அண்ட் நௌ இங்கே இப்போது இரு என்று கூவும்.

இறந்தகாலத்தில் இராதே. எதிர்காலத்தில் வாழாதே. இங்கே இப்போது இரு. வெள்ளையாய் இரு, வெளிச்சமாய் இரு.

எதுவும் எதிர்பார்க்காமல் இரு, எதனோடு ஒப்பிடாமல் இரு, எதிர் பார்த்தல் எதிர்காலம். ஒப்பிடல் இறந்த காலம்.

வெள்ளையாய் சலனமற்று, நடப்பது கவனிப்பதே நிகழ்காலம்.

ஆனால் மனசு ஞாபக சக்தியில் மாட்டிக்கொண்டு அலைக்கழிந்து மெமரி வதைக்கிறது.

ஞாபகம் வைத்துக் கொள்வதை மூளையில் தகவல்கள் சேமித்துக் கொள்வதைத் தவிர்க்க முடியாது. ஆனால் தகவல்கள் தகவல்களாக மட்டுமே இருப்பதில்லை. தகவலுக்கு நம் மனசு தனக்கு உவப்பானதாய் ஒரு அர்த்தம் கற்பித்துக் கொள்கிறது அதுதான் தவறு.

நேற்று ஒரு பெண்ணைப் பார்த்தேன். இது தகவல் அவள் அழகாய் இருந்தாள். இது அபிப்பிராயம். அவள் தேவதை போல் நடந்தாள் மனசு கற்பிக்கும் அர்த்தம் அந்த தேவதை எனக்கே. எனக்கு என்று கிடைத்தால்... இது மனசு கற்பித்த அர்த்தத்தால் விளைந்த அனர்த்தம்.

அவள் அழகு எள்று சொல்வது தவறா? அழகை அழகு என்று பாராட்டுவது குற்றமா? அழகு தொடர்புச் சொல். நமக்கு அழகு பிறருக்கு வேறு, இன்றைக்கு அழகு நாளைய கோரம் நிரந்தரமில்லாத விஷயம். மேல் பூச்சு உள்ளே எல்லோரையும் போல ரத்தம், சளி மலம், மூத்திரம், இவைகளை அழகு என்று எவர் சொல்ல முடியும்? அழ

கில்லை என்பதற்கு இவை எப்போதும் உதாரணங்களாகும் அழகு என்ற பெண்ணுக்குள் அழகின்மை உண்டு. எனவே அழகு என்பது அர்த்தமற்றது. மேல் தோற்றம் கற்பிதம் அன்றைய அபிப்பிராயம்.

அழகான அந்தப் பெண் 'பாஸ்டர்ட்' என்று சொல்லி விட்டால், அழகு சட்டென மாறாது. அயோக்கியத்தனமானவள் என்பது முடிவாகும். அழகு விஷயமில்லாது போகும்.

நேற்று ஒரு பெண்ணைப் பார்த்தேன். இது தகவல் ஞாபக சக்தி மற்றவை நமது கற்பிதங்கள் அழகு என்பது ஒப்பிடல், ஒப்பிடல் கடந்த காலம். இவளை விரும்புகிறேன் என்பதற்கு ஆதாரம், 'இவள் எனக்கே எனக்கு கிடைப்பாள்' என்ற நம்பிக்கை. நம்பிக்கை என்பது எதிர்காலம்.

இறந்த காலத்தில் இல்லாது, எதிர்காலத்தில் வாழாது நிகழ்காலத்தில் எப்போதும் எந்நாளும் இருக்கவேண்டும்.

ஹியர் அண்ட் நெள பாய்ஸ்—உள்ளே ஆல்டக்ஸ் ஹக்ஸ்லியின் மைனா கூவிற்று.

சீனிவாசன் கோட்டைக்குள் வெள்ளையாய் மனசு வைத்து நுழைந்தான்.

''ஏங்க... பாண்டிமாதேவி, ஐ.ஏ.எஸ்...''

''வரலீங்களே...'' வெள்ளை உடை ப்யூன் பதில் சொன்னான்.

'ஐயோ' சீனிவாசன் வெள்ளை மனசுள் கறுப்பு துக்கம் சூழ்ந்தது.

''வந்துருக்காங்க சார் லைப்ரரியில இருக்காங்க...'' வேறு ஒரு ப்யூன் தவறு திருத்தினான்.

சின்ன வெளிச்சம் வந்தது.



''கோட்டைல லைப்ரரி இருக்கா?''

''ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட் லைப்ரரி அன்னான்டை இருக்கு. அங்கன போயிருக்காங்க.''

''ஏன்?''

''ஏன்னா...எனக்கு என்னா தெரியும்! அடிக்கடி அங்க போயிடுவாங்க.''

''எப்ப வருவாங்க?''

''தெரியாது''

''வருவாங்களா''

''தெரியாது.''

''அங்க போய் பார்க்கலாமா?''

''உங்களை விட மாட்டாங்க.''

''ஏன்?''

''விவரம் தெரிஞ்சவங்கதான் போலாம். சும்மா போறவங்க வரவங்களை விட மாட்டாங்க.''

சீனுவாசன் வெளியே வந்தான். லைப்ரரி தேடி வண்டி வாசலில் நிறுத்தினான்.மரப்படிகள் மீது ஏறினான்.

மனசுள் படபடப்பு அதிகமாயிற்று.

பெரிய ஹாலைச் சுற்றி கண்ணாடி பீரோக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. தடித் தடியாய் புத்தகங்கள் இருந்தன. நாலைந்து ஆண்கள் பீரோக்களின் எதிரே நின்று, புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள்.

'லைப்ரரியன்' என்று பலகை வைத்த ஒரு பெரிய மேஜையில் ஒரு பெண்மணி இருந்தாள்.

சீனிவாசனை உறுத்துப் பார்த்தாள்.

''யெஸ்...'' என்று கூவினாள்.

சீனிவாசன் நகர்ந்து அருகே போனான்.

''என் பெயர் சீனிவாசன் எழுத்தாளர்.''

''சரி''

''இங்கே சமூகநலத்துறை அதிகாரி வந்தார்களா?''

''யார்...என்ன அதிகாரி?''

'பதவி என்னவென்று தெரியவில்லை. அவர்கள் பெயர் பாண்டிமாதேவி.'

''அவர்களிடம் என்ன பேச வேண்டும்?''

''தனிப்பட்ட முறையில் ஒரு விண்ணப்பம் தர வேண்டும்.''

''எதற்கு?''

''என் புத்தகங்கள் இரண்டுக்கு லைப்ரரி ஆர்டர் வரவில்லை.''

''உட்காருங்கள். பார்க்கலாம்.''

உட்கார்ந்தான். சுற்று முற்றும் பார்த்து பாண்டிமாதேவியைத் தேடினான் வேறு பெண்களே அங்கு இல்லை.

அந்த லைப்ரரியன் பெண்மணி குறிப்பு எடுக்கத் துவங்கினாள். பாடல் போல் ஒன்றை தடினமான புத்தகத்திலிருந்து பிரதி எடுத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன புத்தகம் இது?''—ஆவலாய் கேட்டான்.

''கல்வெட்டுத் தொகுப்பு''

''என்ன கல்வெட்டு?''

''சோழர் காலம்.''



''இவ்வளவு பெரிய புத்தகமா.''

''இது போல் எழுபத்தி ஆறு தொகுப்பு உண்டு''

''ஒவ்...''

''இந்தியா முழுவதும் உள்ள சோழர் காலக் கல்வெட்டுக்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.''

''அப்படியா?''

''இதுவும் அதில் ஒன்று''—மூடி வைக்கப்பட்ட இரண்டு தடித்த புத்தகங்களை லைப்ரரியன் நகர்த்தினாள்.

''நன்றி, நான் பிரித்துப் படிக்கலாமா''

''தொட்டுப் பார்க்கவா தந்தேன்?''

சீனிவாசன் சிரித்தான். பயபக்தியோடு புத்தகம் பிரித்தான். பிரித்த இடத்தில் உள்ள கல்வெட்டைப் படித்தான்.

சோமனான பிருதிகங்கனேன் எங்களைய்யர் கூத்தாடும் தேவரான பிருதிகங்கர் உடன் உடன் பள்ளி கொண்ட பாடும் பெண்டிருக்கும் மனக்கேதம் தீர்க்கும் சந்தர்ப்பமாக பதினாறு சாண்கோல் விட்ட நிலம் ஒரு வேலியும் இவர்கள் வங்கிசமும் உள்ளதனைத்தும் செய்வதாக, விட்ட நிலதுசக்கு நம் வங்கிசத்து இதுக்கு இலங்கணம் சொல்லுவார் மதுராந்தக வேளான் கால் கழுவின நீரும் குடிச்சு கலச்சோறும் தின்பான். செங்கையிடை குமரி இடை செய்த பாவங்கள் கொள்வான்.

''உடன் பள்ளி கொள்ளுதலா?'' சீனிவாசன் தன்னை மறந்து கத்தினான். சிலர் திரும்பிப் பார்த்து வேலையில் ஈடுபட்டார்கள்.

''என்ன சொன்னீர்கள்?'' அவள் தலைநிமிர்ந்தாள்.

''உடன் பள்ளி கொள்ளுதல்...''

''ஆமாம்.''

''சதி...''

''ஆமாம்.''

''புருஷன் இறக்க, தீபாய்வதுபோல் உடன் பள்ளி கொள்ளுதல்...''

''ஆமாம்.''

''அதாவது உயிரோடு புதைக்கப்படுதல். இறந்த ஆணுக்கு அருகே பெண்கள் உயிரோடு புதைக்கப்பட்டிருக்கிறார்கள்...''

''ஆமாம்.''

''தமிழ் நாட்டிலா?''

''உண்டு?''

''இது எந்தக் காலம்?''

''மேலே போட்டிருக்கிறதே...திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவருக்கு என்று இது மூன்றாவது குலோத்துங்க சோழன், சற்று ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு...''

''உடன் பள்ளி கொண்ட பாடும் பெண்டிருக்கும் என்று கல்வெட்டு சொல்கிறதே...பல பெண்களா?''

''இருக்கும்.''

''இது தமிழர் மரபா?''

''ஆமாம்.''

''கடவுளே...''



லைப்ரரியன், அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

எப்போதோ இறந்த பெண்களுக்காக சீனிவாசன் துக்கப்பட்டுக் கொண்டிருந்தான்.

கொள்ளையர் கூட்டத்தோடும் தேவரான பிருதிகங்கர்.

பிருதிகங்கன் கூத்தாடுபவன். டான்ஸர். எங்களைய் யர் என்றால் ஐயர் ஜாதியா? இல்லை. தலைவரை ஐயன் என்று அழைப்பது தமிழர் மரபு.

மனக்கேதம் தீர்க்கும் சந்தர்மமாக...சந்தர்மம் நல்ல தருமம், நல்லனாம்மனக்கேதம் என்றால்? உயிரோடு புதைக்கப்படுவதால் ஏற்படுவது துன்பம், உயிரோடு புதைக்கப்பட்டவன் மனசு எத்தனை பாடுபட்டிருக்கும். 'ஐயோ...சாக வேண்டியிருக்கிறதே என்று தவித்திருக்கும். அதனால் அப்படி இறந்த பெண்டிருக்குண்டான சுற்றத்தாருக்கு ஒரு வேலி நிலம். அவர் வம்சம் வதை பெற்று பயன் அடையலாம்.

இதை மறுத்தவர்கள், இதற்கு மாறு சொல்லி இந்த நிலத்தை, தர்மமாக கொடுக்கப்பட்டதை அபகரித்தால் மதுராந்த வேளான் கால் கழுவின நீரும் குடித்து, கலச் சோறும் தின்பான்.

மதுராந்தக வேளான் என்பவன் இவனுக்கு, இந்த கல்வெட்டு எழுதி நிலம் தானமாகத் தந்தவனுக்கு பரம எதிரிபோலும். எதிரியின் கால் கழுவின நீர் குடித்து, அவன் எச்சல் சோறும் தின்னுவதற்கு ஒப்பாவான் என்று எச்சரித்திருக்கிறான்.

கங்கையிலிருந்து குமரி வரை செய்யப்பட்ட பாவங்கள் எல்லாம் இந்த தர்மத்துக்கு இடையூறு செய்தவன் தலையில் விழும் என்று சபித்துள்ளான். அவன் சாபம் இருக்கட்டும். அந்தப்பெண்...பெண் அல்ல, பெண்டிர்.

பன்மை, ஒருவரா, இருவரா, மூன்றா, நான்கா...எப்படி உடன் பள்ளி கொள்ள முடியும்? எப்படி சவக்குழியில் பிணத்துக்கு அருகே உயிரோடு இருக்கும்போதே பிணமாய் படுத்துக் கொள்ள முடியும்.

படுத்துக்கொள்ளக் காரணம் காதலா, கட்டளையா? சீனிவாசனுக்கு வயிறு கலங்கியது.

குழியில் இறங்குகிறபோது உலகத்தை ஆசை தீர கடைசியாய் பார்த்திருப்பாளோ? வானத்தை மரங்களை, மனிதர்களை, மிருகங்களை காலடிப் புல்லை. தன் உடம்பை ஆவலோடு இதுவே இனி கடைசி இனி இது இல்லை என்ற ஏக்கத்தோடு நோக்கியிருப்பாளோ?

தாரை தப்பட்டை உச்ச வேகத்தில் முழங்க, அமைதியாய் குழியில் இறங்கி தலைக்கு மண்டைக்கட்டை அல்லது தலையணை வசதியாய் வைத்துக் கொண்டு வேர்கள் நீட்டிக் கொண்டிருக்கும் மண் பார்த்து, மண் வாசனை நுகர்ந்து மேலே பூக்கள் செரியப்பட்ட ஒன்று எடுத்து உற்றுப் பார்த்து...அழுகை வந்திருக்குமே...விம்மி விம்மி அழுதிருப்பாளோ?

சட்டென்று தாரை தப்பட்டை நிற்க, சரேல் என்று ஒரு பயம் வந்திருக்கும்.

என்ன என்று திகைப்பு தாக்கியிருக்கும். எழுந்திருக்க முற்பட்டிருக்கக்கூடும் 'ஹூம்' என்று எவராவது அதட்ட, எழுந்தும் எழாததுமான நிலையில் இருக்க, முதல் மண் சரியும். தலையில் விழும்.

சரசரவென்று பத்து பதினைந்து பேர் மண் தள்ள, அயர்ந்து, பயந்து படுக்க...முகமெல்லாம் மண். உடம்பெல்லாம் மண். சணமாகி, அழுத்தி ,கை உதற உதற மேலே மண் விழுந்து விழுந்து பயத்தில் மயக்கமாகி, எழுந்திருக்க முடியாதபடி திணறி, கை கால் உதைத்து



திமிறி மேலும் மண் சரிய அழுத்தி மூச்சு அடைத்து சுவாசிப்புக்கு உடம்பு தவித்து, 'இனி முடியாது' என்று அழுத்திட விடாது நெஞ்சு வலித்து, வயிறு சுருக்கி இழுத்து தலை கனத்து 'ப்வொவ்' என்று கடைசிக் காற்று வெளியேறி உள்ளே அடங்கி தன்னைத் தான் உணர்ந்து, தன் உயிர் எது என்று உணர்ந்து, அது நகர, வேதனையுற்று விம்மி பிரிந்து;வெளியேறி மூடியதையும் மூடியவர்களையும் ஒருகணம் பார்த்து வெட்ட வெளியில் கலந்து, உடம்பில்லா நான் என்பதை உணர்ந்து சிரிப்பாகி...

பிருதுவிகங்கன், கூத்தாடும் தேவர் எங்களைய்யர் பிருதிவிகங்களை இங்கே அவள் உடன் படுத்தவள் நினைத்திருப்பாளா?

மாட்டாள்.

கணவன் மனைவி என்பது உலக வாதம்... உடலின் உறவு உயிருக்கு உறவில்லை உயிர் தனி, எவருமற்ற தனி, எதுவுமற்ற தனி.

அவனின் மனச்சேதம் தீர்க்கும் சந்தர்மமாக...

இந்த மனச்சேதம் தீருமா? இப்படி சாகடித்தார்களே என்கிற வன்மம் போகுமா? என்ன மரபு இது? என்ன கலாச்சாரம் இது?

புருஷன் மனைவியுமாய் இருப்பினும் வாயும் வயிறும் வேறு: உடலும் உயிரும் வேறு. கலத்தல் இல்லை. அவரவர் மரண பயம் அவரவருக்கும். யாரும் வாங்கிக் கொள்ள முடியாது. உனக்கு பதிலாய் நான் செத்துப் போகிறேன் என்று பரிமாறிக் கொள்ள முடியாது. இங்கே உன்னோடு, உனக்காக நானும் சாகிறேன் என்பது மடத்தனம். செத்த பிறகும் மனைவி வேண்டும் என்பது சுயநலத்தின் உச்சம். உயிரை உடல்போல் கருதிய

நிர்மூடம் வெளிச்சத்தோடு வெளிச்சமாய் கலந்த பிறகு எது நான்... எது நீ? எங்கு இரண்டு வகைகள். இரண்டாய் இருப்பின் தானே உறவும் பிரிவும். எல்லாம் ஒன்றாய் ஆன பிறகு ஏன் இந்த பேதங்கள்.

மனிதர்களுக்கு மரணம் பற்றி தெரியவில்லை. சொர்க்கத்தில் மனைவி இல்லாது போய்விடக்கூடாது என்று, பாடும் பெண்டிரை கூத்தாடுபவன் கூட்டிக் கொண்டு போயிருக்கிறான். கையும் காலும் உணர்ச்சியில் தான் கூத்து, கூத்தாடுபவன் என்கிற பெயர். உடல் இல்லையெனில் கூத்து இல்லை. கூத்து இல்லையெனில் பாட்டும் இல்லை. பாடும் பெண்டிர், ஆடும் ஆண்கள் எவரும் இல்லை மனிதர்கள் இது தெரியவில்லை. சாகடித்திருக்கிறார்கள். சாகடித்துவிட்டு மனச்சேதம் தீர்க்க ஒரு வேலி நிலம் தானம் கொடுத்திருக்கிறார்கள்' முட்டாள்கள்.

நிலத்துள் உயிரோடு பெண்ணைப் புதைத்துவிட்டு, நிலத்தை அவள் வம்சம் அனுபவிக்க தானம் கொடுத்திருக் கிறார்கள். என்ன மடத்தனம்? வாழ்க்கை ஏன் அலட்சிய மாய் போயிருக்கிறது. ஏன் அவள் சாக வேண்டும். அவள் இறந்தது இறந்தவனுக்கா, இருப்பவர்களுக்கா? தெரிய வில்லை.

ஆனால் எங்கோ யாரோ எவ்விதமாகவோ இறந்தது இப்போது வேதனை அழுத்துகிறது அப்போதும் அழுத்தியிருக்குமோ? யாராவது 'என்ன ஆபாசம் இது என்று சீறி சினந்து தடுத்திருப்பார்களோ? தடுக்க முடியாது துவண்டிருப்பார்களோ?

எங்களையர் கூத்தாடும் பிருதிவிகங்கர்...

யாரது? எப்படியிருப்பான் பார்ப்பதற்கு?

சீனிவாசனுக்கு நிகழ்காலம் நழுவிப் போயிற்று. எதற்கு வந்தோம் என்பது மறந்து போயிற்று. யாரைத்



தேடுகிறோம் என்பது தெரியாது போயிற்று. முழுக்க முழுக்க இறந்த காலத்தில் இருந்தான்.

பிருதிவிகங்கனோடு உடன் பள்ளி கொண்ட பெண் டிருக்காக தவித்துக் கொண்டிருந்தான்.

எதிரே டப்பென்று பெரிய புத்தகம் மூடும் ஒலி கேட் டது. திடுக்கிட்டு நிமிர்ந்தான். லைப்ரரியன் பெண்மணி எழுந்து நின்றாள்.

''போகலாமா?''

''எங்கே?''

''பாண்டிமாதேவி பார்க்கத்தானே வந்தீங்க?''

''ஆமாம்...ஆமாம்...'' அவசரமாய் பேசினான்.

''பின்னால வாங்க.''

''போய்ட்டாங்களா?''

''யாரு?''

''பாண்டிமாதேவி...''

''யாரு பாண்டிமாதேவி?''

''என்னங்க இது... அவங்கதானே சமூகநலத்துறை.''

''சமூகநலத்துறையில என்ன?''

''தெரியலை.''

''எதுக்கு வந்தீங்க?''

''நிறைய ரைட்டர் இரண்டுநாள் முன்னே அவங்களை மீட் பண்ணி லைப்ரரி ஆர்டர் கேட்டாங்களாம்.''

''சரி.''

''நானும் கேட்கணும். அப்போ நான் வரலை.''

''ஏன்?''

''அவங்க போனதே தெரியாது.''

''எல்லோரும் உங்களுக்குத் தெரிஞ்ச ரைட்டர்ஸ் தானே?''

''தெரிஞ்சவங்கதான்.''

''உங்களுக்குத் தெரிவிக்கலையா?''

''மாட்டாங்க.''

''ஏன்?''

''கொஞ்சம் என்னை தள்ளி வெச்சிருக்காங்க?''

''எதனால?''

''என் புத்தகம் நல்லா விக்குது; அதுல கொஞ்சம் பொறாமை. உங்க லைப்ரரியில என் புஸ்தகம் இருக்கா?''

''முதல் யுத்தம் இருக்கு.''

''நீங்க படிச்சிருக்கீங்களா?''

''ம்ம்...''

''பிடிச்சுதா?''

''நல்லாருந்துச்சு.''

''ஏதாவது தப்பு இருக்கா அந்த சரித்திரக் கதைல?''

''பெரிசா பொய்யில்லை. கல்வெட்டு ஒட்டி எழுதியிருக்கீங்க. இரண்டு மூணு வசனம் தப்பா இருந்தது.''

''வசனம் தப்பா?''

''பதில் சொல்லுங்கள் தவறு.''

''ஏன்?''



''விடையிறுங்கள் தான் சரித்திரக் கதைல வரும். பதில் என்பது உருது வார்த்தை பதிலா என்பதன் மரு.''

''அடடே...தப்புதான்.''

சிறிது தூரம் பேசாது நடந்தார்கள்.

''அவங்களைப் பார்க்கத்தான் போறமா?''

''ஆமாம்.''

''நான் போய் கேட்டேன் லைப்ரரின்னு சொன்னாங்க அதான் அங்க வந்தேன். மெம்பரா சேரணும்னா எவ்வளவு கட்டணும்?''

''அரசு அனுமதி வேணும். ஏன்லைப்ரரிக்கு வரீங்கன்னு விளக்கம் வேணும். வெத்து ஆளை உள்ள விடறதில்லை. ஸ்காலர்ஸ்தான் வர முடியும்.''

''நான் கதை எழுத ரெஃபரன்ஸ் பார்க்க வரலாமா?''

''தனி அனுமதி கேட்கலாம். கதை எழுதப் போறீங்களா?''

''எழுதலாம்.''

''எது பத்தி?''

''இந்த பிருதிவிகங்கன் பத்திகூட எழுதலாம் யப்பா. ஆடிப் போச்சு அந்தக் கல்வெட்டு படிச்சதும்.''

''நேரா போவாணாமா?''

''எங்கங்க?''

''கல்வெட்டு இடத்துக்கு''

''அந்த கல்வெட்டு எங்க இருக்கு?''

''தாமரைப்பாக்கம். வட ஆற்காடு மாவட்டம்.''

''அது, இங்க கிட்டதான்.''

''ஆமா முப்பது கிலோமீட்டர் இருக்கும்.''

''அங்க எங்க இருக்கு கல்வெட்டு.''

''அம்மன் கோவில்ல ''

''நீங்க பார்த்தீங்களா?''

''போனவாரம் போனேன்.''

''எதுக்கு?''

''சும்மா ஒரு ஆராய்ச்சிதான்.''

''எதுல ஆராய்ச்சி? டாக்டரேட்டா?''

''ஒரு ரேட்டும் இல்லை. சும்மா எப்படி, என்னன்னு நான் தெரிஞ்சுக்கத்தான்.''

''தெரிஞ்சிட்டு என்ன செய்வீங்க?''

''ஹான்னு உங்களை மாதிரி உட்கார்ந்திருப்பேன்.''

''கலங்கிப் போச்சுங்க...''

''எனக்கும் அப்படித்தான் இருந்தது, அதனாலதான் தாமரைப்பாக்கம் ஓடினேன்.''

''தாமரைப்பாக்கம்னா... கிட்டத்தட்ட மெட்ராஸ் பொண்ணு...''

''சொல்லலாம்.''

''பெண்டிர்னு போட்டிருக்கு பன்மைதானே? நாலைஞ்சு பேர் இருக்கும் இல்லையா?''

''உயர்வு காட்ட பெண்டிர்னு சொல்லியிருக்கலாமோன்னு தோணுது.''

''ஒரு வேலி ஒரு நிவந்தம்தானே விட்டிருக்கான்... ஒருத்தியா கூட இருக்கலாம்.''



கோட்டைக்குள் நுழைந்து பெரிய வராண்டாக்களில் நுழைந்தார்கள்.

''எங்களையர் கூத்தாடும் தேவர்னா ... ஐயா, தேவரா?''

அந்தப் பெண்மணி சிரித்தாள்.

''தெரியலைங்க. யாரா இருந்தா என்ன? எனக்கு மனசு ஆறலை.''

''உண்மை.''

''இத வெச்சு எழுதப் போறீங்களா?''

''போய்ட்டு வரணும்.''

''போய், கோயில்ல காலைல பத்து மணிக்குள்ள நின்னு என் பேர் சொல்லுங்க. அந்தக் கல்வெட்டு காமிப் பாங்க. கொஞ்சம் இருட்டா இருக்கும். அகல் விளக்கு டார்ச் இருந்தாத்தான் படிக்க முடியும்.''

''அவங்க புதைச்ச இடம் கோயிலா?''

''புதைச்ச பிறகு கோயில் வந்திருக்கலாம். அம்மன் கோயில். அதனால எல்லை தேவதையா தெய்வமா பண்ணியிருக்கலாம்.''

''உங்க பேர் என்னங்க?''

''பாண்டிமாதேவி''

ங்ங்ங்க்

சீனிவாசன் தொண்டை திடுக்கிட்டு அசைந்தது.

''லைப்ரரியன்னு நினைச்சீங்களா? நான் சும்மா அங்க உட்கார்ந்தேன்...''

''நான் நினைக்கலீங்க. இல்லை நினைச்சேங்க...'' சீனிவாசன் தடுமாறினான்.

அந்தப் பெண்மணி சிரித்தாள்.

அவளுக்கு நாற்பது வயதிருக்கும். முன்பக்கம் ஒரு விரல் அளவு நரை ஓடியிருந்தது. ரிம் இலலா பெரிய மூக்குக் கண்ணாடி. காட்டன் புடவை, உடம்பு முழுவதும் பரவியிருந்த சிகப்புப் பூக்கள். காதில் சின்னவட்டத் தொங்கட்டான். மூக்குத்தி. நெளிந்த உதடு. மாநிறத்திலும் சற்று கூடுதலான சிகப்பு சாந்துப் பொட்டு. நிதானமான நடை.

ஒரு அறைக்குள் சட்டென்று திரும்பினாள். சீனிவாசன் தயங்கி நின்றான்.

வாசல் கதவில் 'பாண்டிமாதேவி, இயக்குநர், சமூக நலத்துறை, என்று எழுதியிருந்தது.

சீனிவாசன் அதிகம் பேசிவிட்டோமோ என்று பயந்தான்.

அந்த அறை வாசல் தாண்டி வராண்டா போல் ஒரு இடம் தாண்டி மறுபடி கதவு. அந்தப் பெண்மணி கதவுக்கு அப்பால் போய், 'ப்ளீஸ் கம்மின்' என்று குரல் கொடுத்தார்.

சீனிவாசன் உள்ளே போக கால் வைக்க, டைப்பிஸ்ட் அவனைத் தாண்டி உள்ளே போனாள். அழைப்பு தனக்கில்லை போலிருக்கிறது என்று சீனிவாசன் தயங்கினான். திரும்பினான்.

''உள்ள வாங்க...'' இந்த முறை அந்த டைப்பிஸ்ட் கதவு வழியே எட்டிப் பார்த்து குரல் கொடுத்தாள். ''உங்களைக் கூப்பிடறாங்க...'' என்றாள்.



சீனிவாசன் உள்ளே போனான். ஹால் போல் அகலமான அறை தரையில் காயர் விரிப்பு பச்சைத்துணியில் ஜன்னல் திரைச்சீலைகள். கண்ணாடி பரப்பிய மேஜை. முதல்வர் படம் சுவரில் சிரித்தது. இடப்புறம் வரவேற்பு இருக்கைகள். காஃபி பிளாஸ்க். மேஜைக்கு இடது பககம் உள்ள டிபாய் முழுவதும் ஃபைல்கள்.

''என்ன போன் வந்தது?''

''முக்கியமா எதுவுமில்லை மேடம். ஒரு ரைட்டர் போன் பண்ணி நீங்க இருக்கீங்களான்னு கேட்டாரு. இல்லைன்னேன். இவரு பேர் சொல்லி இவரு வந்தாரான்னு கேட்டார். தெரியாதுன்னேன்.''

''இவரைத் தெரியுமா உங்களுக்கு...''

''தெரியும் மேடம். சீனிவாசன்...'' டைப்பிஸ்ட் பெண் சொல்லிவிட்டு கைகூப்பினாள்.

''படிச்சிருக்கீங்களா?''

''இல்லை. உங்க டேபிள்ல இவரு படம் போட்ட புஸ்தகம் பார்த்திருக்கேன்.''

''வெரி குட். உங்களுக்கு நல்ல ஞாபக சக்தி உக்காருங்க...''

''படிக்கணும்னு ஆசைதான். நேரம் இல்லைங்க மேடம்''

''சிலருக்கு படிப்புல நாட்டம். சிலருக்கு உலக அனுபவம் முக்கியம். நீங்க இரண்டாவது வகை.''

''வேணா இங்கேர்ந்து இரண்டு புக்ஸ் எடுத்துக்கிட்டு போய் படிச்சுட்டு வரேன் மேடம்...''

''எதுக்கு...உங்களுக்கு இருக்கற வேலைக்கு இதெல்லாம் கஷ்டம். நங்கநல்லூர்லேர்ந்து கோட்டைக்கு வரதுன்னா சும்மாவா?''

''அதுதான் மேடம் பெரிய பிராப்ளம்...''

''பரவாயில்லை இரண்டு காஃபி வாங்கிட்டு வரச் சொல்லுங்க.''

''ஷுகர் போட்டா,போடாதயா?''

இருவரும் சீனிவாசனைப் பார்த்தார்கள்.

''இருக்கலாம்...'' சீனிவாசன் அவசரமாய் பதில் சொன்னான்.

டைப்பிஸ்ட் வெளியேறினாள்.

அந்தப் பெண்மணி நிதானமாய் உட்கார்ந்தாள்.

''எல்லாராலயும் படிக்க முடியாது சீனுவாசன்.''

''ஆமாங்க படிக்கறது எப்பவுமே குறைச்சலான ஆட்களுக்குத்தான். ஆனா சிலருக்கு படிக்காத ஒரு நாள் கூட இருக்க முடியாது.''

''அந்த லைப்ரரிக்கு இன்னி தேதி வரைக்கும் இந்த வருஷம் வந்தவங்க நூத்தி நாப்பத்தியாறு பேர். கோட்டைக்குள்ள இப்படி ஒரு லைப்ரரி இருக்கறது யாருக்கும் தெரியாது.''

''தெரியாத இருக்கறது பெட்டர்.''

''ஏன்?''

''எல்லாருக்கும் தெரிஞ்சா, புஸ்தகம் திருடு போகும்''

''படிக்கறவங்களாவது வரலாம்.''

''நீங்க தினம் போவீங்களா?''

''இப்ப போறேன் இனி எத்தனை நாள் போக முடியுமோ தெரியலை...''

''ஏன்?''



''இது டெம்பரவரி போஸ்டிங் மூணு மாசத்துல தூக்கிடுவாங்க.''

''சமூகநலத்துறைலேர்ந்தா? இல்லை லைப்ரரி...''

''அது இந்தத் துறையே இல்லை அதையும் தற்காலிகமாக கவனிக்கச் சொல்லியிருக்காங்க.''

''எங்க போடுவாங்க?''

''யாருக்குத் தெரியும்?''

''என்னுது இரண்டு புஸ்தகம் லைப்ரரி ஆர்டர்வரலை ரிஜெக்ட் பண்ணிட்டாங்க.''

''இதுல இருக்கு. பார்த்தேன் ஆங்கில வார்த்தைகள் அதிகம் இருக்குன்னு தள்ளிட்டாங்க.''

''கதை பாத்திரங்கள் அப்படிப்பட்டது...''

''புரியுது தேர்ந்தெடுத்தவங்களுக்கு புரிஞ்சிருக்காது இப்ப கூப்பிட்டு சொல்லிடறேன்.''

''ரொம்ப நன்றி. முந்தாநாள்கூட என்னைப்பத்தி மத்த எழுத்தாளர்கிட்டே கேட்டீங்களாம்...''

''எப்படி பேசறாங்கன்னு தெரிஞ்சுக்க கேட்டேன் 'ஹாங்...நல்லா எழுதறாருன்னு கேள்விப்பட்டேன் படிச்சதில்லை'ன்னாரு.''

''அப்படியா?''

''ஏன்?''

''நல்லா எழுதறேன்னு அவரு சொன்னதா சொன்னாரு''

''இல்லை. சொல்ல முடியலை மனசு வரலை.''

''உங்களுக்கு பிடிச்சிருக்குங்களா?''

''பிடிச்சிருக்கு.''

''நடையா?''

''எல்லாம்.''

''நன்றிங்க.''

''ஏன் பெரிய ஹிஸ்டாரிக்கல் நாவல் செய்யக் கூடாது?''

''செய்யணும். பயம்மா இருக்கு.''

''எதுல?''

தப்பு வரக்கூடாதுன்னு ஒரு எண்ணம். உண்மையான சரித்திரம் எழுதினா இவங்க ஏத்துக்கு வாங்களான்னு தெரியலை.''

''ஏத்துக்கட்டும்...ஏத்துக்காத போகட்டும்...''

''கவலை கிடையாதுங்க. லேடீஸ் உடுத்தக் கூடாது. கச்சு எல்லாம் சும்மா மேல ஒரு துண்டு போர்த்திக் கலாம். இடுப்புல பாவாடை மாதிரி. மேல போர்த்தின அந்தத்துண்டையும் வாசல் எதிர்க்க உடுத்த முடியாது. எடுத்துடணும் மந்திரி எதிர்க்க உடுத்த முடியாது. எடுத் துடணும்.''

''இடுப்பு மட்டும் மறைந்து நடனமாடுவது சாதா ரண விஷயம். எதுவும் மறைக்காது ஆடுவதும் உண்டு என்பது என் அபிப்பிராயம்.''

''எதை வச்சு சொல்றீங்க?''

''பெயிண்டிங்ஸ், டான்ஸ் ஆடற எந்தப் பொண்ணுக் கும் பொட்டு துணி இல்லை, நகைங்கதான் இருக்கு. ராணிகள் மட்டும் கீழ ஒரு துணி, மேல ஒரு துணி. அதுல



படைத் தளபதிகளுக்கு கோமணம். மேல ஓவர்கோட். தலைப்பாகை.''

''தஞ்சாவூர் பெயிண்டிங் சொல்றீங்களா?''

''இரண்டு மூணு முறை சுத்திச் சுத்திப் பார்த்திருக் கேங்க.''

''வேற என்ன தெரியும்?''

''கும்பகோணம் முழுக்கசுத்தியிருக்கேங்க. அம்மங்குடி போயிருக்கேன்.''

''என்ன அங்கே முக்கியம்?''

''அங்க ஒரு ராஜராஜேஸ்வரம்.''

''கோயிலா?''

''ஆமாம். இடிச்சு புதுசா கட்டி எல்லா கல்வெட்டும் சுந்தரகோளமா இருக்கு.''

''ராஜராஜன் கட்டின கோயிலா?''

''இல்லைங்க. அவன் மந்திரி கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர். அவர் ஊருங்க.''

''பெரியதா கோயில்?''

''இல்லீங்க. சிறுசு. ஆனாலும்...''

''என்ன ஆனாலும்...''

''என்னைய என்னவோ பண்ணும்.''

''என்ன பண்ணும்?''

''வெளிய எல்லாம் சொல்லக் கூடாதுங்க.''

''ஏன்?''

''கேலியாயிடும்.''

அந்தப் பெண்மணி அமைதியாய் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீங்க பிராமினா?''

''ஆமாம். ஏன் திடீர்னு இப்படி கேள்வி?''

''அங்க போய் என்ன செய்வீங்க?''

''உட்கார்ந்திருப்பேன்.''

''எங்க?''

''கோயில் வாசல்ல. குளத்தங்கரைல. ஊரை ஒட்டி ஒரு மேட்டுல.''

''என்ன இருக்கு அங்கே?''

''என் வீடு இருந்தது.''

''அம்மங்குடி உங்க ஊரா?''

''இப்ப இல்லை. ஒரு காலத்துல.''

''முன்னோர்களா?''

''ரொம்ப முந்தி உள்ளவங்க.''

''புரியலை. நீங்க பேசறது.''

''நான் கொஞ்சம் பைத்தியம்.''

''நானும் பைத்தியம். சரித்திரப் பைத்தியம். சொல்லுங்க...எனக்குப் புரியும்.''

''என் இடங்க அது.''

''எப்போ?''

''சோழர் காலத்துல...''

''கடவுளே...''

''ஏங்க?''

''நிஜமாவே நீங்க பைத்தியம் தான்.''



சீனிவாசன் மெல்லிய நாணத்தோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்னைய மாதிரி...'' ஒரு இடைவெளி விட்டு அந்தப் பெண்மணி பேசி முடித்தாள்,

''இது தெரிஞ்சது உங்க புஸ்தகத்துல முதல் யுத்தம் படிச்சபோது தெரிஞ்சது. சரித்திரம் தாண்டி ஏதோ ஒரு இன்வால்வ்மெண்ட் இருக்குன்னு புரிஞ்சுது.''

''உங்களுக்கு அப்படித் தோணுமா?''

''நான் இன்னும் மோசம்.''

''எப்படி?''

''அழுவேன்.''

''புரியலை.''

''வெளியே சொல்லக் கூடாது. எனக்கு கெட்டபேரு வரும்.''

''இதைப் போயி யார் கிட்ட சொல்ல முடியும்? சொன்னா யாருக்கு புரியும்?''

''யூ ஆர் கரெக்ட் இருந்தாலும் நாம ரொம்ப உசத்தின்னு நினைக்கறதை மத்தவங்க புரிஞ்சுக்காத கேலி செய்யறது எனக்குப் பிடிக்காது.''

''எனக்குப் புரியும்னு உங்களுக்கு தோணுச்சா''

''கதை படிச்சபிறகு சோழர்காலம் உங்களை பாதிச்சிருக்கறது புரிஞ்சுது. சரித்திரமா பாதிச்சிருக்குமோன்னு ஒரு சந்தேகம், இப்ப நீங்க பேசறபோது, என்னைமாதிரி மாட்டிக்கிட்டு இருக்கிங்கன்னு புரிஞ்சுது.''

''இது அவஸ்தையா?''

''ஆமாம்.''

''எப்படிங்க?''

''நிகழ்காலத்தை முற்றிலும் புறக்கணிச்சு, இறந்த காலத்திலேயே வாழற அவஸ்தை நமக்குள்ளேயே நாம வாழற கற்பனை.''

சீனிவாசன் திடுக்கிட்டதுபோல் அவளைப் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க?''

''கோட்டைக்கு வரும்போது இதைப் பத்தித்தான் யோசனை செய்துகிட்டு வந்தேன். அதையே பேசறீங்க...''

''சில சமயம் அப்படி நடக்கும். உங்க இரண்டு புஸ்தகத்துக்கும் லைப்ரரி ஆர்டர் கிடைச்சுடும். நீங்க கவலைப் படவேண்டாம்.''

''நன்றிங்க. நான் கிளம்பட்டுமா?''

''நல்லது.''

சீனிவாசன் நாற்காலியை நகர்த்திவிட்டு கைகூப்பினான் வாசல் நோக்கி நடந்தான். அந்தப் பெண்மணியும் வாசல்வரை வந்து வழியனுப்பினாள்.

அடுத்த இரண்டு நாட்களும் வேலைகள் அதிகமிருந்தன உடன் பள்ளி கொண்ட பெண்ணும், சமூக நலத்துறை இயக்குனர் பாண்டிமாதேவியும் மறந்து போனார்கள். எப்போதாவது தாமரைப்பாக்கம் போய் கல்வெட்டு தேடி படிக்க வேண்டும் என்கற ஆவல் வரும். ஆனால் அதற்கு நேரமில்லாது போயிற்று.

மறுவாரத் தபாலில் கலை பண்பாட்டு இயக்கம், தஞ்சையிலிருந்து அழைப்பிதழ் அனுப்பியிருந்தது. இருபத்தி மூன்று பெண்கள் நாள் முழுவதும் நடனமாடுகி



றார்கள். ஒவ்வொருவராய், அரை மணிக்கொருவர் வீதம் பரதம் பற்றிப் பேசி நடனமாடுகிறார்கள். அழைப்பிதழின் கடைசியில், 'பாண்டிமா தேவி. இ.ஆ.ப' என்று போட்டிருந்தது. 'இ.ஆ.ப' ஐ.ஏ.எஸ் 'ஸின் தமிழாக்கம் என்று தெரிந்தது.

போய் விட்டு வந்தால் என்ன என்று தோன்றியது.

கும்பகோணம் போய் ஒரு நாள் தங்கி, அம்மங்குடி போய்விட்டு பிறகு பஸ் ஏறி தஞ்சை போய் விடலாம். ஒரு தோள்பை மட்டும் போதும். ஏனோ இது ஒரு மயக்கமாய், போதை மாறி விட்டது. அங்கே போய் உட்கார்ந்து என்ன விளங்கப் போகிறது. ஏன் இந்த ஆர்வம்? சரித்திரத் தகவல்கள் தெரிந்து கொள்ளும் ஆர்வமில்லை. ஆராய்ச்சி மனப்பான்மை இல்லை. ஆனாலும் ஒரு உள்ளுணர்வு தொடர்ந்து அங்கே போகத் துரத்திக் கொண்டிருந்தது.

உள்ளுணர்வு என்று பொய் சொல்கிறேனோ? ஏதோ ஒரு கனவில் மிதக்கத் திட்டம் போடுகிறேனோ? நினைவு காலம், அதாவது நிகழ்காலம் எனக்குப் பிடிக்கவில்லையா இங்கே ஏதும் தொந்தரவா?

இல்லை. வீடு இதம் மனைவி இதம். குழந்தைகள் சுகம் வருமானம் நல்லபடியானது. ஊரில் மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. இந்த இன்றைய வாழ்க்கை பிடித்திருக்கிறது. இந்த வாழ்க்கை, வெற்றிகரமான வாழ்க்கை பிறகு ஏன் எனக்கு சம்பந்தமில்லாத இடத்திற்கு ஓடுகிறேன்?

''என்ன... அம்மங்குடியா?''

கும்பகோணம் அசோகா லாட்ஜில் இறங்கியதும் கேட்பார்கள்.

''சாருக்கு அம்மங்குடி கோயில் ரொம்ப பிடிச்சுப் போச்சு. அங்க இருக்கற மகிஷாசுரமர்த்தினி வரப்பிர சாதி, இல்லையா சார்?''

ஆம் என்றும் சொல்லாது. இல்லையென்றும் மறுக் காது சீனிவாசன் நின்றிருக்கிறான்.

ஒரு முறை நாலைந்து இளைஞர்கள் சேர்ந்து விட் டார்கள். வேண்டாம் என்று விலக்க மிகுந்த பிரயத் தனப்பட வேண்டியதாயிற்று.

''கோவிலுக்கு அவ்வளவா வருமானமில்லை. உங் களை மாதிரி பெரியவா மனசு வெச்சு பத்திரிகையில எழு தினா பிரபல்யம் ஆயிடும். குத்தகை எடுத்தவன் காசே தர மாட்டேங்கறான். வருமானமே இல்லை இரண்டு பெண் குழந்தைகள்...''

''யாருக்கு''

''எனக்குத்தான்.''

''கோயிலுக்கு வருமானமில்லைன்னு ஆரம்பிச்சீங்க?''

''எனக்கும் இல்லை. கோயிலுக்கும் இல்லை.''

சீனிவாசன் அம்மங்குடியில் குழம்பிப் போய் நின்ற துண்டு.

''அம்மன் இருக்கறதால அம்மங்குடின்னு பேரா?''

''இல்லை.''

''என்ன இல்லை?''

''இது அம்மன்குடி. அமண் என்றால் சமணர்கள். சமணர்கள் வாழ்ந்த இடம். அவர்களுக்கு நிரந்தரமாக தரப்பட்ட இடம்.''



''சமணர்கள்னா ஜெயின்ஸ்தானே? எனக்குத்தெரிஞ்சு இங்கே எல்லாம் இந்துக்கள்தான்.''

''ஆயிரம் வருஷத்துக்கு முன்னால...''

''அமண்குடி பேரே நல்லாயில்லையே...''

சீனிவாசன் இதற்குப் பிறகு பேச மாட்டான்.

''எங்க ஊர்லயும் கோயில்லாம் இருக்கு சார்''

''அப்படியா?''

''ஜடாவுக்கு மோட்சம் கொடுத்த இடம்னு சொல் றாங்க''

''சந்தோஷம்''

''ஜடாய்னா பறவைதானே சார்?''

''ஆமாம்.''

''இப்பக்கூட எங்க ஊர் மேல நிறைய பருந்து சுத்தும் சார்''

''ரொம்ப ஆச்சரியமா இருக்கு''

''இல்லை சார் இவங்க ஊரை சுத்தமா வெச்சுக் கறதே இல்லை.''

''கும்பகோணத்துக்கு எங்க ஊர்ல இருந்துதான் ஆடு வெட்டி வரும் ஆடு வெட்டிபுட்டு ஏரிக் கரையிலே எதை யும் சுத்தம் பண்ணாம எடுத்துட்டு போயிடுவாங்க. தினம் நாலு ஆடு வெட்டினா ஏன் பருந்து சுத்தாது?''

சீனிவாசன் அந்த சண்டையை வேறு வழியில்லாது கவனித்துக் கொண்டிருந்தான்.

''எங்க ஊர் கோவிலைப் பத்தி எழுதணும் சார்...''

''நான் அந்த மாதிரி ரைட்டர் இல்லேப்பா.''

''பரவாயில்லை சார் ீடிரை பண்ணுங்க. எப்படியாவது எங்க ஊர் பேரு பத்திரிகையில் வரணும். உங்களை கையோட கூட்டிட்டு வரேன்னு எங்க ஊர் ஆளுங்களுக்கு சத்தியம் பண்ணியிருக்கேன். மாலையெல்லாம் வாங்கி வெச்சிருக்காங்க சார்...''

அந்தப் பையனை சமாதானப்படுத்த வெகு நேரமாயிற்று.

''அம்மங்குடி ஒண்ணும் நல்ல ஊர் இல்லை சார்.''

''அப்படியா? நான் அதைப் பத்தி ஒண்ணும் எழுதப் போறதில்லை. கவலைப்படாதே.''

அந்தப் பையன் சமாதானமாய் ஆவதற்கு இந்த வார்த்தைதான் காரணம்.

இந்த முறை யார் கண்ணிலும் படாது அம்மங்குடிக்கு நடந்து போய் விட வேண்டும். முன்னைக் காட்டிலும் அதிகமாய் தீவிரமாய் அம்மங்குடியை உணர வேண்டும் இதை யாரிடமும் சொல்ல முடியாது சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை சொன்னால் பலர் சந்தேகப்படுவார்கள்.

முதன் முறையாய் அம்மங்குடிக்குப் போன போது பதினேழு வயது எந்த சரித்திர அறிவும் கிடையாது. சைக்கிளில் நெடுந்தூரம் போக வேண்டும் என்பது ஆசையாக இருந்தது இரண்டு பக்கமும் வயல்வெளி உள்ள பாதையைப் பார்த்ததும் போக வேண்டும் என்று தோன்றியது அதன் ஊடே சைக்கிள் விட்டுப் போகும் போது திடீரென்று ஊர் தெரிந்தது. கோயில் தெரிந்தது கோயிலில் பந்தல் போட்டிருந்தார்கள். ஏதோ ஹோமம் நடந்து கொண்டிருந்தது. அங்குள்ள பையன்கள் அவனை 'எந்த ஊர்' என்று விசாரித்தார்கள். அவன் தன் ஊரைச் சொன்னதும் 'இருந்து



சாப்பிட்டு விட்டுப் போ' என்று வற்புறுத்தினார்கள். வற்புறுத்திய பையன், சைக்கிளை அடுத்த கிராமத்திற்கு எடுத்துப் போய் வருவதாய் சொன்னான் அந்தப் பையன் சைக்கிளில் போன பிறகு அவனோடு இருந்த பையன்கள் தனித் தனியே கழன்று கொண்டார்கள். சீனிவாசன் தான் ஏமாற்றப்பட்டது போல் உணர்ந்தான் சைக்கிளை எடுத்துப் போன பையனின் வீட்டு வாசலிலேயே நின்றிருந்தான்.

''உள்ளே வந்து உட்காரேன்...'' அந்தப் பையனின் அம்மா வற்புறுத்தினாள்.

''சைக்கிள் வரட்டும்...'' சீனிவாசன் வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னான்.

''வந்துடும் கவலைப்படாதே எங்க மாமனாருக்கு சண்டிஹோம முன்னு தகவல் சொல்ல முடியலை யாருக்கும் போறதுக்கு உடம்பு வணங்கலை. நல்ல வேளையா நீ சைக்கிள் கொண்டு வந்தியா? அதை ஓட்டிப் பார்க்கற சாக்குல இவன் போய்ட்டு வர்றேன்னான். உள்ளே வா...''

''வயசுப் பையனை எதுக்கு உள்ளே கூப்பிடறே அவன் ஏதாவது கோவில்புறம் சுத்திட்டு வரட்டும். அப்படியே குளத்தங்கரையில் உட்காருடா ஜிலுஜிலுன்னு காத்து வரும் வீட்டுக்குள்ள ரொம்ப புழுங்கும்...''

மனசுக்குள்ளே ஏமாற்றப்பட்டதாய் ஒரு வேதனை வந்தது அவனை குளக்கரைக்கு துரத்திய பெண்மணி அவன் எப்போது குளக்கரைக்குப் போவான் என்பது போல் காத்திருந்தாள்.

சீனிவாசன் நடந்து கோவில் பக்கப் போனான் கோவில் வாசலில் மிகப்பெரிய அரச மரம் அரச மரத்துக்கு அப்பால் படிகள் சிதைந்த மிகப்பெரிய குளம்

வானம் மந்தாரமாக இருந்தது, குளத்தின் அருகே நீரில் கால் வைத்தபடி உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. குளத்து நீரில் கால் வைக்க குத்தியது போல் எதுவோ தாக்கியது கால்களை உதறி படியேறினான். நீரைக் கைகளால் துழாவினான் கூரிய கல்போல் ஏதோ தென்பட்டது கல் இல்லை...பொம்மை பொம்மையில்லை...கல் சிலையின் தலை கழுத்து வரையில் உடைந்து மூக்கில் லேசாக அடிபட்டிருந்தது புருவமும், கண்களும், காது வளையங்களும், இதழ் மடிப்பும் பார்க்கும் போது பெண் சிலை என்று தெரிந்தது. விழியோரங்களில் சேறு படிந்திருந்தது. அலம்பினான். படியோரம் இருந்த பூக்களைப் பறித்து. சிலையை தேய்த்துக் கழுவினான். குளக்கரைப் படியிலேயே உட்கார்ந்து அதை ஆராய்ந்தான் கல் சிலையை படியில் வைத்துவிட்டு மீதி சிலை கிடைக்கிறதா என்று பார்க்க மறுபடி குளத்தில் இறங்கினான். வேட்டியை அவிழ்த்து தலையில் கட்டிக் கொண்டான். இரண்டு படிகளில் இறங்க, தொடை வரை நனைந்தது. அடுத்த படிக்கு கால் துழாவசேறு மண் வளைந்து தாங்கியது. முன் வைத்த காலை அழுத்த, இன்னும் அமிழ்ந்தது அழுந்தின காலை எடுக்க முயற்சிக்க இன்னொரு கால் அமிழ்ந்தது. தடுமாறும் போது விழுந்து விடப் போகிறோமே' என்று சிரித்தான்.

சிரிக்கும்போதே பயந்தான் கைகளை பின்னுக்குத் தள்ளி உடம்பை கரைக்கு ஏற்ற முயற்சித்தான். யாரோ கால்களைப் பிடித்து இழுத்தார்கள்.

''அய்யு...அய்யு...'' என்று யாரோ அழைத்தார்கள்.

தலை தண்ணீரில் மூழ்க, வேறுவித சத்தமும் கேட்டது ஒற்றைக் கயிற்றில் கட்டப்பட்ட குதிரை சுற்றிச் சுற்றி வந்தது. பழுப்பு குதிரை அவன் கனவில் அடிக்கடி வந்த அந்தக் குதிரை.



கனவில் வரும் குதிரையை நினைவில் பார்க்க முடியுமா சீனிவாசன் பார்த்தான். தொட்டான். தடவினான். தழுவினான். சேனமில்லா குதிரையின் மீது தாவியேறினான். குதிரையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு வயிற்றைக் காலால் உதைத்தான்.

குதிரை வேகமாக ஓடியது. பிடரி மயிர் தோளில் பட்டு குறுகுறுத்தது. குதிரையின் எச்சில் முகத்தில் அடித்தது. 'சில்'லென்று தாக்கியது. எச்சில்படாதிருக்க பிடரியைக் கொத்தாய் பிடித்து உடம்பை நிமிர்த்தினான். இப்போது நெஞ்சில் மீது எச்சில் பட்டது. அங்கேயும் சிலீரென்றது.

அவன் உடை மாறி இருந்தது அகல கோணமும் வயிறு இறுக்கி இறுக்கி ஒரு துணியை முடுக்கி இடுப்புப் பட்டையாகவும் கட்டியிருந்தான். குடுமி அவிழ்த்து நடு முதுகு வரை தொட்டது. புஜத்தில் கங்கணம் இருந்தது. பவழமணி இருந்தது. வலது கையில் யானைச் சுழல் இருந்தது. வலது காலில் குதிரையை உதைக்க வலிமனாஸ் வெள்ளிக் கழல் இருந்தது. வலது கை விரலில் புலிக்குக் பல்லி உருவம் பொறித்த மோதிரம் இருந்தது. காதுகளில் பச்சைக் கிழ் கழல்போல் ஒரு சின்னம் இருந்தது. அவனுக்கு அவன் யார் என்கிற கடுக்கன்கள் இருந்தன. நினைப்பு இருந்தது.

ஸ்ரீனிவாசன் குதிரையை விரட்ட மேலும் காலை உதைத்தான்.

நீரிலிருந்து மேலே வந்தான்.

மற்றவர்கள் அவனை 'அய்யு' என்று அழைத்தார்கள். அப்பாவை ஐயன் என்று அழைப்பார்கள். அப்பாவை ஐயன் என்று அழைப்பதால் அவன் அய்யு.

அப்பா அவனை 'நம்பி' என்று அழைப்பார்.

தஞ்சை அதிகாரிகள் அவனை அருண்மொழி என்று அழைப்பார்கள்.

அருண்மொழிதான் அவன் உண்மையான பெயர், ராசராசத்தேவருக்கு இயற்பெயர் அருண்மொழி மன்னர் ராசராசர் மீது அன்பு ஆதலால் மன்னரின் இயற் பெய ரையே மகனுக்கும் வைத்தார். மன்னரின் பெயரை மக னுக்கு வைத்து விட்டு அப்பெயரைச் சொல்லி அழைக்க வெட்கப்பட்டு 'அய்யு' என்று கூப்பிட்டார்.

அவன் அய்யு அருண்மொழி மாமன்னர் ராசராசத் தேவரின் சேனாதிபதியான கிருஷ்ணன் ராமன் என்கிற பிரம்மராயரின் மகன் அவனுக்கு அப்பா போர் செய்யும் பயிற்சி அளித்தார். வாளும் வேலும் ,அம்பும் பயில்வது அவசியம் என்று வலியுறுத்தினார். அவருக்குப் பிறகு அவர் மகனே சேனாதிபதியாக வர வேண்டும் என்றே வற்புறுத்தினார். அவனுக்கும் பிரம்மராயர் என்ற பட்டம் வர வேண்டும் என்று ஆசைபட்டார். அவன் சேனாதிபதியானான். பிரம்மராயன் என்ற பட்டம் பெற்றான். சாளுக்கிய தேசத்தில் தொண்டைக் குழியில் அம்பு தைக்க செத்துப் போனான். அம்பு தைத்த போது புருஷஸூத்தம் சொல்ல ஆசைப்பட்டான். நாக்கு புரண் டது. பதிகமும் பிரபந்தமும் பாட ஆசைப்பட்டான் குரல் எழும்ப மறுத்தது. மனசுள் பாடினான் எதற்கு போர் தொழிலில் ஈடுபட்டோம் என்று வேதனைப்பட் டான். காலத்துக்கும். பேசவும் கவிதை எழுதவும் செய்ய முடியாமல் போய் விட்டதே என்று வருத்தப்பட்டான்.

உயிர் பிழைத்தால் இதையே வாழ்க்கையாகக் கொள் வேன் என்று உறுதி பூண்டான். தொண்டையில் இருந்த அம்பை பொதி வண்டி ஓட்டி வந்த கம்மாளன் பிடுங்கிப் போட்டான். 'அய்யு... அய்யு...' என்று அழுதான்.



அம்பு பிடுங்கப்பட்டதும் பேச முடிந்தது. பேசும் போது மரண வலி எடுத்தது.

''செல்வமே...சிவபெருமானே...இம்மையே உம்மை சிக்கெனப் பிடித்தேன். எங்கு எழுந்து அருளுவது இனியே, வானத்தில் மேகம் ஸ்படிக லிங்கம்போல் இருந்தது.''

''அய்யு எதிரிகள் புறங்காட்டி ஓடுகிறார்கள்.''

''எனக்கு எதிரிகள் யாருமில்லை.''

''அய்யு......நீங்கள் சோழர் படைத்தளபதி பிரம்ம ராயர்.''

''இல்லை நான் சாதாரணன். எனக்கு போர் பிடிக்க வில்லை. நான் இராகதேவர் காவியம் எழுத வேண்டும். தமிழில் எழுத வேண்டும்.''

''செய்யலாம். அய்யு ரணம் குணமானதும் நிச்சயம் செய்யலாம்.''

இராகதேவர் அயோத்தியில் பதினாறாயிரம் ஆண்டு கள் ஆண்டார். மனைவி போன பின்பு மகன்களுக்கு வேறு தேசம் கொடுத்து கிரீடமின்றி ஜடாமுடியுடன் ஆண்டார்.

''என் குல தெய்வமான இராகதேவரை நான் பாட வேண்டும். என்னால் இனி போர் செய்ய முடியாது. எனக்கு போர் வேண்டாம். மரா|யன் என்கிற பட்டம் வேண்டாம். பெரும் செல்வம் வேண்டாம். இராகதேவர் நட்பு கிடைத்தால் போதும். இராகவா...இராகவா என்று சொல்லிக்கொண்டு இருந்தால் போதும். அவர் சன்னதியில் சாதாரண புலவனாய் உரையாடிக் கொண்டி ருந்தால் போதும். அதோ...இராகதேவர். வெள்ளைச் சடைமுடி. வெண் தாடி. தலைப்பாகை. நீண்ட சால்வை. அயோத்தியின் மன்னன். ராமா என்று

மக்களால் அழைக்கப்படும் ராகதேவன். அதோ ராமன், என் ராமன்...''

கண்கள் சொருகின. அவன் முகத்தில் யாரோ பளிச் சென்று அரைக் குடுவை தண்ணீர் அடித்தார்கள். தண்ணீர் வாய்க்குள்ளும் போயிற்று. தொண்டையிலும் இறங் கிற்று. தொண்டையில் அம்பு குத்தின இடத்தில் அது வெளியே வந்தது. தாங்க முடியாத எரிச்சலும் வலியும் வந்தது. ஒரு பிடி தண்ணீர் மூச்சுக் குழலை அடைத்துக் கொண்டது.

அய்யு என்கிற நம்பி என்கிற அருண்மொழி. சோழ வளநாட்டு வெண்நாட்டு அம்மங்குடியான கிருஷ்ணன் ராமனான மும்முடி சோழர் பிரம்மராயரின் மகனான உத்தமசோழன் பிரம்மராயர் என்கிற அருண்மொழி இறந்து போனான். வெண் தாடியும் சடைமுடியும் தலைப்பாகையும் கட்டிய ராமர் என்று அழைக்கப்பட்ட அயோத்தி ராகதேவர் அவனைத் தன்னோடு சேர்த்துக் கொண்டார். அவனை சாணாக்கிய தேசத்திலேயே எரித் தார்கள். காவிரிக் கரையிலேயே கரைத்தார்கள்.

காவிரி அவன் சாம்பலைச் சுமந்து சென்றது கரையில் ஒதுங்கியது. ஒதுங்கிய இடத்தில் மறுபடி அவன் பிறந் தான்.

சீனு சீனு என்று அழைக்கப்பட்டான். அப்படி அழைத்தது அவனுக்குப் பிடித்திருந்தது. அய்யு...அய்யு... என்கிற சத்தம் போலவே அது இருந்தது.

''அடேய்...ஒரு அடி எடுத்து வெச்சாக்க கரை. அங்கேயே குப்புறக் கிடக்கறான் பார்...'' அவனை இழுத்து யாரோ கரையில் போட்டார்கள். நீரைக் குடித் தது. அவனை மூச்சு விடாமல் செய்தது, தூக்கியவர், முதுகில் கையை வைத்து அழுத்தினார்.



'ப்லோக்' என்று நீர் வெளியே வந்தது. காற்று உள்ளே போயிற்று. எல்லா பிறவியிலும் நீர் அவனுக்கு எதிரி. ஜலமே ஒவ்வொரு முறையும் அவனைக் கொல்லும். இந்த முறை அவன் தப்பித்துவிட்டான். ஆனாலும் நீர்தான் அவனுக்கு எதிரி. வாயுவே அவனது நண்பன். அக்னி அவனுக்கு சமம். நிலம் அவனுக்கு நட்பு. வானம் அவ னுக்கு அரசன். எல்லாப் பிறவியிலும் இவ்விதமாகவே இருக்கும்.

அவன் சுவாசத்தை நீர் மரித்தே சாக வேண்டியிருக் கும்.

''பேந்தப் பேந்த முழிக்கறான் பாரு. இங்கே ஏன் வந்தீரு? சாகவா?'' மறுபடியும் அந்த ஆள் நெஞ்சமுத்தி னான்.

சுவாசம் சீராயிற்று. சீனிவாசன் எழுந்து தள்ளாடி நடந்து, குளத்தின் மேல் படியை அடைந்தான். வேட்டி யைக் கட்டிக்கொண்டு சட்டையைப் பிழிந்து கொண்டான்.

''இது என்ன பொட்டலம்?'' அவன் கர்ச்சீப்பை தூக்கி விட்ட ஆள்கொண்டு வந்து கொடுத்தான். உள்ளே அந்தச் சிலை பத்திரமாக இருந்தது.

''இது எடுக்கத்தான் குளத்துக்குள்ள இறங்கினீரா?''

சீனிவாசன் ஆமாமென்று தலையை ஆட்டினான்.

''கோடையில குளம் வத்திப்போகும். அப்போ மண்ணை தோண்டினா தலையும், காலும், இடுப்பும் கையுமா ஆயிரம் பொம்மை கிடைக்கும். எவனா தொடைச்சிப் போட்ட கல்லா இருக்கும். இதை ஏன் துணியில சுத்தி வச்சிருக்கீரு?''

''வீட்டுக்கு எடுத்துட்டுப் போக...''

''எடுத்துட்டுப் போ; குளம் சுத்தமாகும்.''

அந்த ஆள் ஓர் கையை உதறி மேல் பரப்பில் நடந்து போனான்.

நனைந்த சட்டைத்துணி உலர்ந்த நேரத்தில் சைக்கிள் வந்துவிட்டது.

''துக்காச்சிக்கு போயிட்டு வந்தேன், இருந்து சாப்பிட்டுப் போ...'' அந்தப் பையன் வழிமறித்தான்.

ஊரின் பெயரைக் கேட்டதும் மனது மறுபடியும் சிரித்தது. துக்காச்சி இல்லை. துர்கை ஆட்சி.

''உன் பக்கத்துல இடம் பிடிச்சு வை. பத்து நிமிஷத்துல வந்துடறேன்...'' சைக்கிளை மிதித்து கும்பகோணம் வந்தான்.

அடுத்தபடி அம்மங்குடிக்கு இருபத்தி ஏழு வயதில் வந்தான். குளத்தில் கால் சறுக்கியபோது ஏற்பட்ட விளைவுகளை மறக்க முடியவில்லை.

அவன் கனவுக்குள் பழுப்பு குதிரை வந்தபோதெல்லாம், அம்மங்குடி ஞாபகம் வரும். அம்மங்குடியை நினைத்துக்கொண்டால், அன்று இரவில் கனவில் பழுப்பு குதிரை வரும். அவனால் குதிரை ஓட்டாமல் இருக்க முடியவில்லை. முப்பத்தி ஏழு வயதில் குதிரை ஓட்ட கற்றுக்கொண்டான். குதிரை அவனுக்குள் எப்போதும் இருந்தது. அவன் உரைநடையில் கவிதையில் அடிக்கடி வந்தது. இந்த நாற்பத்தேழு வயதில் அறுபதுக்கு மேலான புத்தகங்கள் எழுதினான். முப்பதுக்கும் அதிகமான முறை அம்மங்குடிக்கும் போய்விட்டு வந்தான்.

அம்மங்குடி அவனுக்கு ஒரு மயக்கம். அவனுடைய இறந்த காலம், ஆயிரம் வருடங்களுக்கு முன்பு அவன் வாழ்ந்த இடம்.



இது போல இன்னொருவருக்கு தோன்றுமா என்று அவன் கேட்டுக் கொள்வதுண்டு. பாண்டிமாதேவிக்கும் தோன்றியிருக்கிறது என்பதைக் கேட்டதும் ஆவல் அதிகரித்தது.

'விளக்கிச் சொல்லுங்கள்' என்று கேட்கவும் எண்ணம் வந்தது சொல்வார்களா என்பது தெரியாது கேட்க முடியுமா என்பதும் தெரியவில்லை.

பத்து மணிக்கு அம்மங்குடிக்குப் போன போது ஊர் அமைதியாக இருந்தது. தோட்டத்தில் மட்டும், பரிச்சய மானவர்கள் 'வாங்க' என்று தலையசைத்தார்கள்.

''கோயில் கதவைத் திறக்கட்டுமா?'' என்று கேட்டார்கள்.

''வேண்டாம்'' என்று சொல்லி விட்டு அரச மரத்தடியில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான்.

குளக்கரை ஓரம் உள்ள நீரை சிறிது நேரம் கவனித்தான்.

ஊருக்குக் கிழக்கே உள்ள வயல்கள் ஊடே நடந்தான். அறுவடை செய்யப்பட்ட தாட்கள் காலை இடறின. வரப்பில் உட்கார்ந்து கொண்டான்.

உச்சி வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. அவன் கண் எதிரே தெள்ளத் தெளிவாய் தோல் கூடாரங்கள் தோன்றின. தடுப்புப் பட்டிகளில் குதிரைகள் அடைந்தன; கருக்கூடமும் வெள்ளைக் கோவணமும் கழுத்தில் மணிமாலையும் தலையில் சிகப்புத் தலைப்பாகையும் ஆட்கள் எங்கிருந்தோ மும்மூவராய் பெரிய வரிசைகளாய் ஓடி வந்தார்கள். படை வந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீனிவாசன் கண்களை மூடி அந்த நினைவுகளை அழிக்க முயன்றான்; ஆனால் தொடர்ந்து சப்தங்கள்

காதுகளில் கேட்டுக் கொண்டு இருந்தன. சீனிவாசன் காதுகளை பொத்திக் கொண்டான்.

அவனைச் சுற்றி ஆயிரக்கணக்கான பேர் அமர்ந்திருந்தார்கள். ராசராச சோழனுக்காகக் காத்திருந்தார்கள்.

மூளை இரண்டாகப் பிரிந்து வெவ்வேறான இரண்டு காட்சிகளைக் காட்டியது. அறுவடை செய்யப்பட்ட வயலும், காய்ந்து போன நிலத்தில் கிளைத்திருந்த தாளடியும் கண்ணுக்குத் தெரிந்தன. அதே நேரம் கண்ணுக்குத் தெரிந்தவைகளை மறைக்காத வண்ணம் சில காட்சிகள் தெரிந்தன. பாறை உருண்டைகளைப் புரட்டி வழவழப்பான பக்கம்தேடி வாட்டசாட்டமான கல் கிடைத்தவுடன் கத்தி தீட்ட பல பேர்களும் உட்கார்ந்து விடுகிறார்கள். சில இளைஞர்களுக்கு வயதானவர்கள் கத்தி தீட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

''நான் தீட்டினது சரியா'' ஒரு இளைஞன் கத்தி காட்ட, தந்தான் அதை.

அந்த ஆள், 'கையில் இருக்கறத முடிச்சிட்டு தாரேன்...''

ஒரு கிழவன் சீராய் நிதானமாய் கத்தி தீட்டிக் கொண்டிருக்கிறான். இன்று முழுவதும் அவனுக்கு கத்தி தீட்டுவதைத் தவிர வேறு வேலையில்லை.

அரண்மனையில் காலை சோறு போட்டார்கள். ஆட்டு மாமிசம் கலந்த உணவு போட்டார்கள். சாப்பிட்டு விட்டு கோட்டைத் திண்ணையில் மேல் மாடத்தில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். சிறிய முரசு அடித்து எல்லோரையும் வெளியே வரச் சொன்னார்கள்.

பழையாறையில் இருந்து ஆயிரம் பேரை நடத்தி இங்கே கூட்டி வந்துவிட்டார்கள். எங்கே என்று கேட்கக் கூடாது. எதற்காக என்றும் சொல்ல மாட்டார்கள்.



அந்த இடத்தில் உட்கார்ந்திருக்க, வாழ்க்கை இரண்டு விதமாகப் புரிந்தது.

இப்போதுள்ள இந்த பேண்ட் சட்டை நிலைமையும், அருண்மொழியாய் எங்கோ வாழ்ந்த நிலைமையும், கண்ணெதிரே கத்தி தீட்டுவதும், சோழர் தேசத்து மன்னன் என்றும் ஒரே நேரத்தில் புரிந்தன. தீட்டப்படும் கத்தியின் கூர்மை போதுமா, போதாதா என்பதும் தெரிந்தது. வேறு எவராலும் கத்தியின் கூர்மையை கவனிக்க முடியவில்லை. ஆனால் தான் இருந்த இடத்திலிருந்து அந்தக் கத்தியின் கூர்மை எவ்வளவு என்று தன்னால் அறிய முடிந்தது. இதை ஒருவித கனவு என்று சொல்லித் தள்ளி விட முடியாது. மூளையின் எங்கோ ஒரு இடத்தின் ஞாபக சக்தி அதிகமாகி விட்டது. வாசனையை வைத்துக் கொண்டு உணவு வகையைச் சொல்வது போல் முருங்கை, அவரை, கத்திரி என்று பார்க்காமலேயே சமையல் வாசனை அறிந்து சொல்வதைப் போல் வேறு ஏதோ ஒரு வாசனையை மூளை உணரத் துவங்கி, அந்த இடத்தில் நினைவுகளை — என்றோ நடந்தவைகளை படமாக்குகிறது. ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது.

அம்மங்குடிக்கு முந்தி இருப்பதைப்போல் தெற்கு வடக்காய் பாதை இல்லை. கிழக்கு மேற்காய்தான் பாதை இப்போது பாதை போட்ட இடமெல்லாம் வயலாக இருந்தது. வாய்க்கால் வழியே பாதை போடப்பட்டிருந்தது. மண் சுவர் வீடுகள் இளஞ்சிவப்பான தட்டோடு வீடுகள்.

இரண்டுவித வாழ்க்கையும் ஒரே நேரத்தில் முழுமையாய் புரிந்தன. பல கேள்விகளுக்கு அந்த மயக்க நிலையில் பதில் சொல்ல முடியும் என்று தோன்றியது சோழர் காலத்து நாகரீகம் பற்றி வாழ்க்கை முறை பற்றி எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லலாம்.

இனிப்பான பழங்களும், எப்போதும் சிறியதாக இருக்
கும் ஆட்டிறைச்சி உணவுகளும், உண்ட பிறகு சிறிய
உருளைக் கல்லை வைத்து விளையாடும் சூதாட்டமும்.
படை வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரம் மற்ற
படிக்கு வேறு யார் சூதாடினாலும் அதட்டி அடித்து துரத்
தப்படுவர். படைவீரர்கள் கண்களில் படாமல் விவசாயிகள்
சூதாடுவார்கள். இந்தச் சூதாட்டத்தில் பெண்டு பிள்ளை
களை நீக்குவது உண்டு.

'ஒரு பந்தயத்தில் இவன் தன் மனைவியை வேறொரு
வனிடம் தோற்று விட்டான். இப்போது தன் மனைவி
யைத் தர மறுக்கிறான்' என்று சபைக்கு நடுவே வழக்கு
வருவதுண்டு.

சூதாட்டம் என்பதை இருவருமே சொல்ல மாட்டார்
கள். என்ன பந்தயத்தில் என்ன தோற்றான் என்பது
விசாரிக்கப்படும். பந்தயத்தில் தோற்கடித்தது உண்மையா
இன்னார் ஜெயிக்கப்பட்டது உண்மையானதா என்று
விசாரிக்கப்படும். அந்த சபையில் எல்லா!ஜாதிக்காரர்களும்
இருப்பார்கள். அந்தணர் அமர தனித் திண்ணை இருக்கும்?
அப்படி தனித்திண்ணை இருக்கப் ஈபிடிக்காத வேளாளர்
இளைஞர்களும் உண்டு.

தங்களைச் சேர்ந்தவர்கள் மீது அந்தணர்கள் தீர்ப்பு
கூறுவதை அவர்கள் விரும்பவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர் வேளாளன்?என வைத்துக்
கொண்டால், அந்த சபையில் அந்தணர் இல்லாது இருந்
தால் கடும் தண்டனை கிடைக்கும். அந்தணர் இருந்து
விட்டாலோ, அந்தணர் என்ன தீர்ப்பு சொல்கிறார்களோ,
அதற்கு எதிர்மறையான தீர்ப்பு கிடைக்கும்?

அதே சமயம் நான்காவது வர்க்கத்தைச் சேர்ந்தவரை
தண்டிக்க இருவருமே கைகோர்த்துக் கொள்வார்கள்
ஒருவேளை குற்றம் செய்தவர் அந்தணராக இருந்தால்
வேளாளருக்கு விசாரிக்கவே வாய்ப்பு இருக்காது.



குற்றம் கண்டுபிடித்த உடனே அந்தணர்கள் ஒன்றுகூடி
குற்றத்தை குற்றமில்லாமல், அல்லது குறைந்தபட்ச தண்
டனையாக மாற்றி விடுவார்கள்.

உச்சி வெய்யிலில் வரப்பின் மீது உட்கார்ந்து கொண்
டிருக்கும் போது தான் கண்ட வாழ்க்கையின் ஒரு பகுதி...
தான் என்றோ வாழந்த வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சி
உள்ளே விட்டு விட்டு மழை மாதிரி பொழிந்ததை
உணர்ந்தான்.

ஆனால் மனசுக்குள்ளே பொழிந்திருந்த மழையை
வேறு எங்கேயும் சொல்ல இயலாது. மழை பெய்தால்
தலை ஈரமாக இருக்க வேண்டும். தலை ஈரமாக இருக்
கிறதுக்கு ஆதாரம் உண்டு. வெறுமே மழை பெய்தது
என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். தனக்குள்ளே
பெய்கின்ற மழை வேறு யாரிடமும் சொல்லாதிருப்பதே
உத்தமம்.

அம்மங்குடியில் வயலோரத்தில் உட்கார்ந்து கொண்
டிருந்தபோது ஏற்பட்ட இந்த மனமாற்றம் வெகுநாள்
வரை தொடரும். தமிழகத்தின் எந்தப் பகுதிக்குப்
போனாலும், அது சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக
இருக்கும். இராஜராஜரின் காலமாக இருக்கும்.

ஸ்ரீனிவாசன் நவீன வாகனத்தில் சவாரி செய்தாலும்
அவனைச் சுற்றியுள்ள ஜனங்கள் ஆயிரம் வருடங்களுக்கு
முன்பு இருந்த ஜனங்களாகவே இருப்பார்கள்.

இரண்டு மூன்று முறைகள் இதற்கு முன்னமே நடந்
திருக்கிறது. கோபுரமே இல்லாத மயிலை கபாலிகோயிலை
அவனால் உணர முடிந்திருக்கிறது. இரண்டு பக்கமும்
காடுகள் நிறைந்த திருவற்றூர் சாலையை மனசுக்குள்
தடம் போட்டுக் கண்டுபிடித்திருக்கிறான், இப்போது
அந்தத் தடமே இல்லை. தடம் போன இடங்களில் எல்
லாம் கட்டிடங்கள் எழும்பி விட்டன. மயிலையும், திரு

வல்லிக்கேணியும், மயிலாட்டிகள் என்கிற வணிகர்களின் சொந்த கிராமமாக இருந்தன. அவர்களாலேயே நிர்வா கமும் படைபலமும் பரிமாறிக்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

அது வேறு மயிலை, இது வேறு மயிலை. அது வேறு அம்மங்குடி. இது வேறு அம்மங்குடி. நிலம் ஒன்றே. கட்டிடங்கள் மட்டும் எழுப்பி இடிந்து மறுபடியும் எழும்பி இடிந்து மாற்றங்கள் நடந்து கொண்டே இருக் கின்றன. பாண்டிமாதேவிக்கும் இப்படியொரு வேதனை உண்டா என்று தெரியவில்லை. ஒரே நேரத்தில் இரண்டு வித வாழ்க்கையில் மனசு ஈடுபடும் இம்சை உண்டா என்று தெரியவில்லை.

அம்மங்குடி மட்டும்தான் தனக்கு அப்படித் தெரி கிறதா. மற்ற கிராமங்களும் தெரிகின்றனவா? அம்மங் குடியை விட்டு விலகி வயல்கள் ஊடே காலாற நடந்தான். அரண்மனையை ஒட்டி நெருக்கமாய் ஊர் இருந்தது. ஊருக்கு வெளியே உலைக்களன்கள் இருந்தன. ஆயிரம் பேர் இறங்கி குளித்த ஒரு குளம் பாழ்பட்டுக் கிடந்தது. தென்மேற்காய் நடந்தான். தஞ்சாவூர் போய் விடலாம். நடந்து முடியுமா? ஒரு நாள் ஆகும்.

ஆனாலும் உடனே போக வேண்டும் என்ற எண்ணம் உள்ளே கூறியது. வேறு யாரோ மடக்கி சீனிவாசனை 'நலம்தானே' என்று கேட்கிறார்கள். இறந்த காலத்தில் இருக்கும் மூளையை சற்று, விலக்கி வைத்து விட்டு நிகழ் கால மூளையை சற்று துரிதப்படுத்த வேண்டியிருக்கிறது. அவர் கேள்வி கேட்டு இவர் பதில் சொல்லி அடுத்தபடி யாக அவர் கேள்வி கேட்பதற்கு முன் சுற்றுமுற்றும் பார்த்து இறந்த காலத்தில் இந்த இடம் என்னவாக இருந்தது என்று கணிக்க முடிந்தது. குளம், மேடாக இருந்தது. மேடு, குளமாக இருந்தது. ஆறு எதிர்ப்பக்கம் போயிருந்தது. வாய்க்கால் திசை மாறியிருந்தது. கோயில்



கதவுகள் புதிதாக செய்யப்பட்டிருந்தன. வயல்வெளியில் கிராமங்கள் நின்றிருந்தன. சோழர்கள் வாழ்ந்த மாளிகை வெறும் மேடாக இருந்தது. புதர் மண்டி மேடு ஒட்டான் சல்லிகள் நிறைந்த மேடு அழுத்தமான ஒரு ஆலமரம். விழுது மரமாகி, விழுது மரமாகி...இது ஏழாவது ஆல மரம். கதவுகள் இருக்க வேண்டிய இடத்தில் வான பட்டறை இருக்கிறது. கோயில் இருந்த இடத்தில் கத்தரி யும், வெண்டையும் போட்டிருக்கிறார்கள். கோயில் கிணறு இருந்த இடத்தை இன்னமும் பத்திரமாய் வைத் திருக்கிறார்கள். ஏற்றம் கனம் கொண்டு ஆட ஒருபக்கம் சிவலிங்கத்தைக் கட்டி வைத்திருக்கிறார்கள்.

நடராஜர் சிலையைக் குப்புறக் கவிழ்த்துப் போட்டு, அதன் முதுகுமீது கால் வைத்து கிணறு ஏறுகிறார்கள். கிணற்றில் இருந்து ஏற்றத்திற்குத் தாவுகிறார்கள். மரத்தில் ஒரு காலும் சிவலிங்கத்தில் ஒரு காலுமாக வைத்து நீர் இறைக்கிறார்கள். தோளில் பையோடு குறுக் கும் நெடுக்கும் அலைந்து சீனிவாசன் அரசன் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டான்.

இராசராசன் உட்பட ஆறு தலைமுறை மன்னர்கள் உட்கார்ந்த இடத்தில் இரும்பு வேல்கள் நடப்பட்டிருந் தன. மரத்தின்மீது வெங்கலமணி ஒன்று கட்டப்பட்டு இருந்தது. தெற்கத்திக்காற்று அங்கே சுழன்று சுழன்று அடித்தது. பாண்டிமாதேவியை இங்கே வரச்சொல்லிக் காட்ட வேண்டும். பாண்டிமாதேவி ஒரு அரச அதிகாரி தொல்பொருள் ஆராய்ச்சித்துறைக்கு மாற்றிக்கொள்ள முடியுமா என கேட்க வேண்டும். அப்படி மாற்றிக் கொண்டு விட்டால், வேல் நட்ட இடத்திலிருந்து பதினாறு எட்டு நடந்து வந்தால், அங்கே பூமியின் கீழ் செப்புத்தவலையும், உடைவாளும் இருந்தன. முடிவிட்ட ஒருகிணற்றில், ஆறுவிதமான முத்திரை மோதிரங்கள் கிடக்கின்றன. ஐம்பொற்தாலி இருந்தன. பாண்டிமாதேவி

ஆள்விட்டு எடுத்துச் செல்லலாம். குளத்துக்கு ஒரு
ஓரமாய் ஒரு சிறிய பகுதியில் கோவில் வாசல் நடுகல்
மண்டி போட்ட வீரன் ஒரு பக்கம் செதுக்கப்பட்டிருக்
கிறது. இடுப்பில் ஒரு குழந்தையும்,கையில் ஒரு குழந்தையு
மாய் வலப்பக்கம் பொறிக்கப்பட்டுள்ளது. அதை
அசைத்து தோண்டினால் இரும்புக் கவசம் அணிந்த
எலும்புக்கூடு, வேல்கம்பும், மண்சட்டியும் செப்புக் காசு
களும் கிடைக்கும்.

எங்கே கால் வைத்தாலும் சோழன் மாளிகையில்
ஏதேதோ இருக்கின்றன. ஆனால் ஓரிடம் மட்டும்
தோண்டினால் போதும், ஊர் முழுவதும் தோண்டப்
படும். ஊர் முழுவதும் தோண்டப்பட்டவை, ஒழுங்காக
அரசுக்கு போய்ச் சேராது. திருடப்படும், திருடி வெளி
யூருக்கு விற்கப்படும்.

அது பூமிக்கு அடியிலேயே இருப்பது உத்தமம்.

சோழன் மாளிகையில் இருந்து நடந்து மேடு ஏறி
சுவாமிமலை போகும் பாதையில் நின்று கொண்டான்.

ஸ்டாப்பிங் இல்லாத இடத்தில் 'பஸ்'ஸை கைகாட்டி
நிறுத்தி ஏறினான்.

இரண்டு பக்கமும் வயல்கள் அறுவடை செய்யப்
பட்டதும் செய்யப்படாததுமான நிலையில் இருந்தன.
வைக்கோல் மணம் தூக்கலாக இருந்தது. ஐய்யனாரப்பன்
கோவிலில் இறங்கிவிடத் தோன்றியது. இறங்கியதும்
கோவில் முழுவதும் யானைகள் கட்டப்பட்டிருந்த காலம்
ஞாபகம் வந்தது.

அங்கேயும் அவனை அடையாளம் கண்டு கொண்டு
அவனிடம் பேச வந்தார்கள். சீனிவாசன் இரண்டொரு
வார்த்தைகளில் அவர்களை விளக்கினான். வடபுறம்
இருந்த கோயிலுக்குப் போனான். அதிகாரிச்சி முத்தான
பொன் நங்கையின் குரல் காதில் விழுந்தது.



நினக்கு பாண்டிமாதேவியின் பெயர் வைத்ததால்
தனக்கு தரித்திரம் பிடித்து விட்டதோ என்கிற எண்ணம்
அவளுக்கு முதலில் இருந்தது. வீட்டில் உள்ளவர்களுக்கு
இருந்த மொழிவெறி சிறிது இலக்கியப் பற்று அரசாட்சித்
தன்மையில் ஆவலை ஏற்படுத்தியிருக்கலாமோ என்று
தோன்றியது.

பாண்டிமாதேவி என்று பெயர் வைத்தால், பாண்டி
யர்களைப் பற்றித்தானே படிக்க வேண்டும்...படிப்பதற்
கான விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. பாண்டியர்களை
விட சோழர்களைப் பற்றிய விவரங்கள் அதிகம் இருந்தன.
பல்வேறு விதமாய் பாண்டியர்கள் நசுக்கப்பட்ட செய்தி
படிக்க முடிந்தது. அரசு பெண்டிர்களையும் அப்பெண்
டிர்க்கான அடிமைப் பெண்களையும் கைப்பற்றிக் கொண்டு
வந்து அந்த வேடத்தில் சோழர் இளைஞர்கள் தங்கி
இளைப்பாறினர் என்கிற செய்தியும் இருந்தது.

பெண்களைப் பற்றி விவரம் தெரிந்து கொள்ள ஆவ
லாக, சரித்திரம் படிக்கத் தொடங்கினாள். ஒரு இரவு
முழுவதும் சோழ வரலாறு படித்து விட்டு, விடிகாலை
நேரம் படுக்கப் போகையில் அதுவரை பார்த்தேயிராத
கோவில்கள் கண்ணுக்குத் தோன்றின. பெரிய நிலப்பரப்
புகள், பச்சை வயல்கள், நனவு போல் தோன்றின.
கனவா, நிஜமா என்று தன்னைக் கேட்டுக் கொண்டபோது
'இது நிஜம்' என்று அவளுக்கு சொல்லப்பட்டது. தூக்கம்
கலைந்து, கனவு கலைந்த பின்னர் நனவான நேரத்தில்
அந்தக் கனவைத் தொடர்ந்து போக முடிந்தது.

தூக்க நேரத்தில் அதற்கு கனவு என்றும் விழிப்பு
நேரத்தில் அதற்கு கற்பனை என்று பெயர் கொடுக்க
முடிந்தது.

கற்பனையைப் பெருக்கிக் கொள்வதற்காக கல்வெட்
டைப் படிக்கும் ஆசை வந்தது. கல்வெட்டைப் படிக்கும்
போது எதை கற்பனையாக நினைத்தானோ, அது உண்
மையாக இருப்பதை உணர முடிந்தது.

சோழர் சாம்ராஜ்யத்தின் வரிவிதிப்பு அதிகமல்லவா.
சரியானபடி வருமானம் இல்லையெனில் அந்த வரிவிதிப்பு
வேதனை தருமே. வரி கட்ட முடியாமல் போகுமே, வரி
கட்ட முடியாமல் போனால் சோழ தேசத்தில் கிட்டி
போட்டு வாங்குவார்களே, என்று வரிக் கணக்கு மறு
நாளே நூலகத்தில் வரிகட்ட முடியாமல் தூக்கு மாட்டி
செத்துப் போன பெண்ணைப் பற்றிய கல்வெட்டைப்
படிக்க முடிந்தது.

பகுதி பகுதியாய் கொஞ்சம் கொஞ்சமாய் சோழர்
தேசத்து சரித்திரம் படித்து மனதில் வாங்கிக் கொண்
டாள். மிக சுலபமாய் படிக்கக் கூடிய அந்த எழுத்துக்
களை மனப்பாடம் செய்து கொண்டாள்.

தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலை விட கங்கை
கொண்ட சோழர்புரம் அதிகம் கவர்ந்தது. முரடனாய்
இருப்பினும் ராஜேந்திரன் நல்ல அரசனாய் தோன்றி
னான். அந்தணர்களுக்கென்று தானம் கொடுக்கப்பட்ட
அந்த நிலத்தை வேளாண்வகை நிலமாக அவன் மாற்றி
யது அவளுக்கு சந்தோஷம் கொடுத்தது.

பறவை என்கிற நடனப் பெண்ணோடு மாறாத
காதல் கொண்டிருந்த ராஜேந்திரனை மதிக்கத்
தோன்றியது. தன் தகப்பனுடைய மூன்றாவது
மனைவிக்கு, அவள் இறந்து போன பிறகு அந்த ராஜேந்
திரன் பள்ளிப்படை கோவிலை எழுப்பினான் என்
பதைப் படித்து கும்பகோணம் ஓடினாள். அந்த
கோவிலைத் தேடிக் கண்டு பிடித்தாள். கோவில் முழுவ
தும் கரும்பும், காராமணியும் போடப்பட்டிருந்தன.



விளக்கேற்றக்கூட நாதி இல்லாமல் கோவில் இருந்தது.
ஏன் ஏற்றவில்லை என்று கேட்ட போது, அது பள்ளிப்
படைக் கோவில் என்றார்கள்.

இறந்தவர்களை எரித்து, அஸ்தியின்மீது கட்டப்படும்
கோவிலுக்கு 'பள்ளிப்படை கோவில்' என்று பெயர்.
கிட்டத்தட்ட சமாதி கோவில்களுக்கு ஜனங்கள் வருவ
தில்லை என்று சொன்னார்கள்.

சமூக நலத்துறையில் நுழைந்து ஒரே ஒருவாரம் ஆகி
யிருந்த நேரம் அது. கோவிலைப் பற்றி கறுப்பு வெளுப்பு
படங்கள் எடுத்து, கடிதம் ஒன்று எழுதி, அன்றைய
முதலமைச்சருக்கு அனுப்ப, சர்க்கரை பிடிக்காத கரும்பை
யும், பால் பிடிக்காத காராமணியையும் ஆட்கள் வெட்டி
எறிந்து விட்டுப் போனார்கள். கோவிலை சுத்தம் செய்
தார்கள். நீலப்பலகை நட்டார்கள்.

''நீ பாட்டுக்கு எழுதிட்டுப் போயிட்ட. ராத்திரி
யானா கோவில்ல இருந்து அழற சத்தம் வருது. மாடு
கன்னு உள்ளே போய்ட்டு வந்தாதான் மனுஷாள் காலடி
பகல்ல பட்டாதான், ராத்திரி கெட்ட சத்தம் வராதுன்னு
நாங்க பயிர்பச்சை பண்றோம். நீ அதையும் புடுங்கிப்
போட்டுட்டு ராத்திரியானா வூட்டுக்குப் போற. நின்னு
அழுகுரலை கேட்டுட்டுப் போ நீ...'' ஊர் மக்கள் கைகளை
ஆட்டிக் கடிந்து கொண்டார்கள்.

அவள் இரவு ஏழு மணிக்கே உணவு முடித்துவிட்டு,
எட்டு மணிக்கு காரில் வந்து கிராமம் இறங்கினாள்.
ஒன்பது மணி வரை குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக்
கொடுத்தாள். பத்து மணிக்கு சிறிய மூங்கில் குச்சியைக்
கட்டியபடி கோவிலைச் சுற்றி வந்தாள். கோவிலுக்கு
வடக்குப் பக்கம் கிராமம். தென்பக்கம் வயல்வெளி

கண்ணுக்கு எட்டின தூரம்வரை நெல்லும் கரும்புமாய் ஆடும் வயல்வெளி காற்று வேகமாய் வந்து மதில் சுவரைத் தாக்கி, கோபுரத்தின மீதேறி கிராமத்தை நோக்கி ஓடி வருகிறது.

சில சமயம் எங்கோ பொழியும் மழையைக் கூட வாரிக் கொண்டு 'சில்'லென்று வீசும் காற்றாய் வருகிறது.

''மணி இப்போ பத்து தானே ஆவுது...இன்னும் அரை மணி, ஒரு மணி போவட்டும். அழுவுற சப்தம் நிச்சயம் கேட்கும் பாரு...''

கிராமத்தில் உள்ளவர்கள் ஒரே குரலாய் சொல்ல அவள் தனியே கோவில் வாசலில் காத்திருந்தாள்.

இருநூறு கஜம் தள்ளி ஊர் மக்கள் கூடியிருப்பது தெரிந்தது. காற்று தெற்கேயிருந்து விடாமல் அடித்தது. திடீரென்று கிராம மக்கள் கைகளை ஆட்டினார்கள். அவர்கள் சத்தம் தன் காதில் கேட்கவில்லை. சத்தம் கேட்கிறது என்ற சைகையை உணர்ந்து கொண்டாள். உன்னிப்பாய் கேட்கத் துவங்கினாள். கோவில் கதவைத் தள்ளி, உள்ளே போய் மூடிக்கொண்டாள்.

முடைந்து வைத்த தென்னை ஓலைகள் காற்றில் புரண்டு எழுந்து நின்றன.

சிலசமயம் ஓலை காற்றில் போகும் போது ஆள் போவது போலவே இருக்கும். மனதில் சலனமின்றி கண் களைக் கூர்மையுடையவர், அதை ஓலை என்று கண்டு கொள்ள முடியும்.

அழுகை ஓசையென்று கூறினார்களே, ஓலைப் பாயில் காற்று மோதுவது அழுகை ஓசையைப் போல இல்லையே. மூங்கில் குச்சியினால் ஓலைப்பாயை அடித்து சாய்த்தாள்.



உற்று கவனித்தாள். கோவில் வெளிப்புறச் சுவற்றில் நீண்ட விரிசல் இருந்தது. அந்த விரிசலுக்கு இடையே பல்வேறு தாவரங்கள் வளர்ந்திருந்தன. காற்று பலமாய் வீசும் போது, அந்த இடைவெளி வழியே காற்று பாய்வது 'உம்'மென்று ஓசையால் கேட்டது. அந்தக் காற்றொலி மண்டபத்தில் வீச, சத்தம் பெரிதாயிற்று.

முடைந்த பாய்களில் நடமாடும் ஓசை, விரிந்த சுவர் வழியே வரும் ஓங்காரம்-இவை இரண்டும் சேர்ந்து, யாரோ புரண்டு புரண்டு அழுவதைப்போல் தோற்றம் கொடுத்தது.

இதை வெளியே வந்து விளக்கினாள். அவர்களை கோவிலுக்குள்ளே வரச் சொன்னாள். யாரும் வரத் தயாராக இல்லை.

அரிக்கன் விளக்கை பெரிதாக்கிக் கொண்டு அந்த பள்ளிப்படை கோவிலைச்சுற்றி நடக்கத் துவங்கினாள். உள்ளே மண்டபத்திற்கு மேல் ஏறி நந்தியை வலம் வந் தாள். சிறிய அழகான நந்தி.

தஞ்சாவூர் மோழை என்று சொல்வார்களே. அந்த விதமான மாடு. சிறிய கொம்புகள் உள்ள மாடு. கழுத்து முழுதும் சதங்கை மணியும், சதங்கையின் முடிவில் தாக்கு மணியும் கொண்ட மாடு. மாடு எழுந்திருந்தால் இடுப் புயரம் இருக்கும் இதோ எழுந்துவிடுவேன் என்கிற நிலையில் உட்கார்ந்திருந்தது.

அரிக்கன் விளக்கை எடுத்து நந்தியைத் தாண்டி துவார பாலகர்களைத்தாண்டி கருவறைக்குள் போனாள். இதுவும் இடுப்பு உயர சிவலிங்கம். கல்லில் ஒரு அசாத்திய மழமழப்பு இருந்தது.

ஆவுடையாரைப் பிடித்து அசைத்தாள். அசைக்க முடியாதபடி சிவலிங்கம் கெட்டிப்பட்டு இருந்தது.

இந்த சிவலிங்கத்திற்குக் கீழே ஒரு செப்பு பாத்திரம் இருக்கும். செப்பு பாத்திரத்தின் உள்ளே பெண்ணின் எலும்புகள் இருக்கலாம். அவள் ராசராச சோழரின் மூன்றாவது மனைவி, ராஜேந்திரனின் சிற்றன்னை.

இதைத் தவிர வேறு என்ன இருக்கும்? அவள் உபயோகித்த பொருட்கள், அவளுடைய நகைகள், அவள் சொர்க்கம் போகும்போது செலவுக்கு பணம் எடுத்துப் போயிருப்பாளோ அல்லது தனியாக இருக்குமா? ஒரு வேளை அவள் தன் பணிப்பெண்களை தன்னுடன் புதைக்கும்படியாகவோ எரிக்கும்படியாகவோ சொல்லியிருப்பாளோ?

ஒருவேளை உள்ளே ஆறேழு அஸ்திக் கலசங்கள் இருக்குமோ? தோண்டிப் பார்த்துவிட வேண்டும் நான் தோண்டினால் கெட்ட பெயர் வரும்.

பல செப்புத் தவலைகளின் நாணயம் எடுத்துப்போய் விட்டதாக வாரப்பத்திரிகைகளில் செய்தி வரும். இதை சரித்திரச் சின்னமென்று ஜனங்கள் அறிவுறுத்தினால் போதும். கரும்பும் காராமணியும் போட்டு ஒரு கற் கோவிலை நாசம் செய்யாமல் இருந்தால் போதும் இங்கு பேயோ, பூதமோ இல்லை என்நு விளக்கிச் சொல்வதோடு என் வேலை முடிந்தது.

கருவறையில் இருந்து வெளியே வந்து, மண்டபத்தின் விளிம்பில் உட்கார, கருவறையில் பேச்சுக் குரல் போல் ஏதோ கேட்டது. எட்டிப் பார்க்க, கருவறையின் சுவற்றைத் தாண்டிப் பேச்சுக்குரல் கோவிலுக்குப்பின்னே ஒலித்தது. மண்டபத்தில் இருந்து எட்டி, கோவிலுக்குப் பின்புறம் யாராவது பேசினார்களோ என்று எட்டிப் பார்க்க கோவிலுக்கு வலப்புறம் பேச்சுக்குரல் போயிற்று.

அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு பாண்டிமாதேவி கோவிலைச் சுற்றி ஓடினாள்.



வலப்புறத்தில் குனிந்து பார்க்க வேண்டிய சண்டிகேஸ்வரரின் சன்னதி தனியே இருந்தது. அதற்குள்ளிருந்து பெரிய ஆரவாரம் கேட்டது.

நாலடிக்கு நாலடி சண்டிகேஸ்வரரின் சன்னதி மிகப் பெரிய மாளிகையும் அதன் கதவுகள் திறந்து மூடப்படுவதையும், ஏகப்பட்ட வீரர்கள் வெளிச்சத்தில் நடமாடுவதையும் கண்டாள்.

சட்டென்று சண்டிகேஸ்வரர் சிலையை விட்டுத் தலையை வெளியே எடுத்தாள் இருட்டாக இருந்தது. அவளைச்சுற்றி யாரோ கவனிப்பதுபோல் தெரிந்தது. தான் கண்ட காட்சி நிஜமா, பிரமையானதா என்று குழம்பினாள். அந்தக் கோட்டையை முன்பே பார்த்திருக்கிறோம். அது எங்கு இருக்கிறது என்பது முன்பே தனக்குத்தெரியும் என்று தானே உணர்ந்தாள் இங்கிருந்து தெற்கே போக வேண்டும்.

வயல்களும் கால்வாய்களும் நிரம்பிய வழிகளூடே நடந்தாள். வழியிலெல்லாம் சிவன் கோவில் இருக்கும். இரவும் பகலும் பாட்டும் கூத்துமாக வாழ்க்கை நடக்கும். அவள் வீடு தெற்கே இருக்கிறது.

அவள் ஊரில் நான் கோட்டை கட்ட கருஞ்சாந்து அரைக்கிறார்கள். கல்லின் மேல்புறத்தில் துளையிட்டு கல்லின் கீழ்புறத்தில் முளை எழுப்பி அந்த கல் முளையைத் துளைக்குள் பொருத்தி விடுவார்கள். அப்படி பொருத்தும் முன் கொதிக்கக் கொதிக்க கருஞ்சாந்தை ஊற்றிவிடுவார்கள். கருஞ்சாந்து பிசின்போல் இரண்டு கற்களையும் இணைத்துவிடும். பிறகு யானை இடித்தாலும், உலக்கை கொண்டு பெயர்த்தாலும் அந்த கோட்டையை அசைக்க முடியாது.

அவள் வீடு இருக்கும் இடம் கருஞ்சாத்து கட்டுபவர்கள் குடி. கருந்தட்டான் குடி இதோ இந்த இடம் இது

அவள் பிறந்த வீடு அவள் தாய் அவளைப் பெற்றெடுத்த வீடு ஆனால் கருந்தட்டான்குடி அவள் வாழ்ந்த வீடு.

கோயிலில் யாரும் இல்லை. அரிக்கன் விளக்கு அமைதியாய் எரிந்து கொண்டிருந்தது. ஒரு சிறிய கருங்கல்லை எடுத்து கோவில் தளத்தின் சதுரக்கல்லில் வைத்தாள்.

ஏதோ சில காட்சிகள் வருகின்றனவே, இது உண்மையா. ஆமெனில் கல் புரண்டிருக்குமென்றால்...

தப்பட்டைக் கல் பனை ஓலையைப்போல எழுந்து புரண்டது புரண்ட கல்லை மீண்டும் படுக்க வைத்தாள்.

மறுபடி சொல். ஏதோ தோன்றுகிறதே... இது உண்மையா?

கல் எழுந்து புரண்டது.

சிறிது நேரம் கல்லையே பார்த்துக் கொண்டிருந்தாள். வாழ்க்கையில் வெகு சிலருக்கே இது நேரக்கூடும். பழசும் புதுசுமாய் அவர்கள் வாழக்கூடும்.

இன்றைய உலகத்தில் இருக்கும்போதே ஏதோ ஒரு உலகத்தின் வாசனை அவர்களுள் அனுபவிக்கக் கூடும்.

இதனால் என்ன லாபம்?

ஏதுமில்லை. எவரும் இதை நம்பத்தயாராக இல்லை. நம்புவதற்கு உண்டான அனுபவம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

இதை மனப்பிரமை என்று சொல்லி விடுவார்கள். மனப்பிரமை எல்லோருக்கும் உண்டு. ஆனால் பதினைந்து வயதை ஞாபகப்படுத்திக் கொள்வதைப் போல சப்தம் வாசனை உணர்ச்சியோடு ஞாபகப்படுத்திக் கொள்வதைப் போல, எப்போதோ வாழ்ந்ததையும் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும்



இப்படிப்பட்ட ஞாபகம் வெகு சிலருக்கே வரும். கரந்தை என்கிற கருந்தட்டான் குடியைப்பற்றிய ஞாபகம் அவளுக்கு பழையாறையில் வந்தது, கருந்தட்டான் குடி போக வேண்டும் என்று ஆசை வந்தது.

கருந்தட்டான்குடி கல்வெட்டு முழுவதும் அவன் மனப்பாடம் செய்தான் ஒரு கல்வெட்டை அவளுக்குப் படிக்கும் போதே உடம்பு நடுங்கியது, அப்படி அவளுக்கு உடம்பு நடுங்குகிற வேளையில்தான் சீனிவாசன் அவளை தேடிக் கொண்டு வந்தான்.

மர மாடிப்படியில் யாரோ நடந்த சத்தம் கேட்டு தலை தூக்கி ஒரு வெளிச்சப் பின்னணியில் அந்த சீனிவாசனைப் பார்க்கும் போது இரண்டு உருவங்கள் தெரிந்தன.

அகலமும் உயரமும் கறுப்புமான குடுமி உருவம் அந்த உருவத்திற்கு உள்ளே அடங்கினதைப் போல தாடியும், பிடரியை மறைக்கின்ற தலைமுடியை வளர விட்ட உருவம். இவனைத் தெரியுமே எனக்கு என்கிற எண்ணம் தான் முதலில் அவளுக்குத் தெரிந்தது. தேடிக்கொண்டே வரும்போது வாளை நீட்டி மிகக் கவனமாக முன்னேறுகிற போர் வீரனைப் போல் தெரிந்தது,

''ஒரு போர் எவ்வளவு தூரம் நீடிக்கும் அய்யு?''

''ஆட்களைப் பொறுத்தது தேவி. ஆயிரம் காலாட்படை புறப்படுகிறதென்றால், கால் நாழிகை கூட சண்டை இருக்காது.''

''போர் என்கிற போது கடும் கோபமாக இருப்பாயா அய்யு?''

''அது வரவழைத்துக் கொண்ட கோபம்தான். எனவே அது போர் முடிந்த உடனேயே பொசுக்கென்று அணைந்து விடும்.''

''பிறகு எப்படி ஒரு பொய்க் கோபத்தோடு மனிதர் களைக் கொல்ல முடியும்? யுத்தம் என்பது வெறியோடு கூடிய செயல் அல்லவா?''

''இல்லை, என்னளவில் அது தந்திரம். தற்காப் புக்குத் தவிர மற்ற நேரங்களில் நான் 'கொல்'வது இல்லை. அப்படி கொல்ல வேண்டி இருப்பினும் பிறரை வைத்துக் விடுவேன். தேவையின்றி நான் வாள் உருவுவது இல்லை. ஆனால், எங்கு போர் நடக்கிறதோ, அதன் முன்னிலையில் தவறாது நான் இருப்பேன்.''

அவளைத் தாண்டும் வரையில் அவன் எங்கோ பேசிய பேச்சுக்கள் அவள் காதுகளில் ஒலித்தன.

அவன் வந்து அவளைக் கேட்டதும் அவள் தன் பெயர் சொல்லாமல் அவனுக்கு அமர ஆசனம் கொடுத்ததும் நேற்று நடந்தது போல் இருந்தது. ஆனால் அது இப் போதும் நடந்தது. அப்போதும் நடந்தது.

''இங்கு யார் பரமி?''

குதிரையை குறுநடையில் ஓட்டியபடி அவள்பெயரைக் கேட்டு சேரிக்குள் நுழைந்தான். குடிசை வாசலில் உள்ள பெண்களை எல்லாம் உற்றுப் பார்த்துவிட்டு அவளெதிரே வந்து குதிரையை நிறுத்தினான்.

அவள் பேசாமல் இருந்தாள்.

அவள் மௌனத்தைக் கலைப்பதற்காக, 'இதில் யார் பரமி?' என்று அவளையே கேட்டான்.

ஒரு அரசு அதிகாரி விசாரிக்கும் போது மௌனமாய் இருப்பது குற்றம்.

அவன் அதட்டிய பிறகும் சேரியில் யாரும் வாய் திறக்கவில்லை. அவன் ஊர் குறிப்பைப் புரட்டத் துவங்



கிய போது, அவள் மெல்ல சேரியை விட்டு போகத் தொடங்கினாள்.

வலப்பக்கம் சின்னதாய் இரண்டாம் வீடு. அவன் சுவடிகளைப் புரட்டி கண்டுபிடித்தான்.

''இந்த வீடுதானே?'' அருகில் இருப்பவரை அதட்டிக் கேட்டான்.

''இங்கு நின்றிருந்த பெண் எங்கே?''

அவள் போன திசையை ஊரில் சில பேர் கை காட்ட பின்னால் குளம்படி சத்தம் கேட்டது. அவளைத் தாண்டிச் சென்று வளைத்துக் கொண்டது.

''நான் உன்னைத் தேடிக் கொண்டு இருப்பதுஉனக்குத் தெரியும் அல்லவா?''

''தெரியும்.'' அவள் பதில் சொன்னாள்.

''தெரிந்தும் என்னிடத்தில் தெரிவிக்காமல் நீ எப் படிப் போக முடியும்?''

''நீங்கள் என்னை எங்கே அழைத்துப் போகிறீர் களோ, அங்கே போய் விட்டால்...''

''அங்கே என்ன நடக்கிறது தெரியுமா உனக்கு?''

''போர். துவந்தை யுத்தம். ஒரு பெண்ணுக்கு. யார் கணவனாவது என்பதைப் பொறுத்து நடக்கும். சண்டை''

''உன் பொருட்டு நடக்கும் சண்டையை நீ பார்க்க வேண்டாமா?''

''என் பொருட்டு சண்டை என்பது தான் கேவலமான விஷயம் எனக்கே சற்றும் ஒப்புமை இல்லாத விஷயம்.''

''ஆனால் நீ வேண்டுமென்று இருவர் ஆசைப்படு கிறார்களே...''

''இவர்கள் இருவர் மீதும் நான் ஆசைப்படவில்
லையே...''

''மூன்றாவதாக ஒரு ஆள் உண்டா? நல்லது. அவ
னையும் போருக்கு அழைப்போம்.''

''உபதளபதி, போரின் முன்னணியில் நின்று போரில்
கலக்காமல் விலகி போரைத் தூண்டிவிடுவதே உங்கள்
வேலை என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை
இங்கும் செய்துதான் ஆகவேண்டுமா? என் வாழ்க்கையில்
நீங்கள் விளையாடித்தான் ஆக வேண்டுமா?''

''யார் வாழ்க்கையிலும் விளையாட எனக்கு இஷ்ட
மில்லை, அந்த தனிப் போரைக்காண ராசராசர் வருகிறார்.
எனவே நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துவது என் கடமை.
இந்த தனிப்போருக்குக் காரணம் என்ன என்று கேட்டேன்
போருக்குத் தயாரான இருவருமே உன் பெயரைச் சொன்
னார்கள். உன்னை அடைவதற்காகவே இந்தப் போட்டி
யில் தங்களை ஏற்பாடு செய்து கொண்டதாகச் சொல்
கிறார்கள்.''

''என்னை அடையும் தகுதி இருவருக்கும் இல்லை.
இருவரையுமே நான் விரும்பவில்லை. என் வாழ்க்கை
வேறு.''

''வேற யாரையாவது நேசிக்கிறாயா?''

''சோழர் காலத்தில் யாரை நேசிக்க முடியும்? வாளும்
வேலுமாய் அலைகிற கூட்டத்தில் யார் ஒருவனைத் தன்
கணவன் என்று கொள்ள முடியும்.''

''உன்னுடைய முடிவுதான் என்ன?''

''துறவு பௌத்த மதத்தில் சேர்ந்து துறவியாவேன்.''



''ஒரு பெண்ணை பௌத்த மதத்தில் சேரவிடுவார்
களா? சோற்றில் விஷம் கலந்து கொடுப்பார்களே தவிர,
வேறொரு மதத்திற்கு மாறவிட மாட்டார்கள். சைவத்தில்
என்ன குறை கண்டாய் என்று சீற மாட்டார்களா?''

''சைவத்தில் குறையேதும் இல்லை. ஆனால் சைவத்
தைப்பரப்ப நீங்கள் வாளோடு அலைவதுதான் குறை.''

''எனக்குப் புரிகிறது பரமி, கரந்தை திடலுக்கு
வெளியே உள்ள திடலில் உன்னை நேசிக்கிற இரண்டு
பேரும் வில் வைத்து சண்டை போடப் போகிறார்கள்.
ராஜராஜன் வருகின்றார் என்பதை எக்காளங்கள் சொல்
கின்றன. நீ விரைவில் அங்கு வந்து சேர். நீ வந்திருக்
கிறாய் என்பதை நான் ராசராசருக்கு தெரிவிக்கிறேன்.

அய்யு என்கிற அருண்மொழி குதிரையைக் கால்
கழலால் உதைக்க தூசு பறக்க ஓடிற்று.

அவன் குறுக்கு வழியில் மகாதேவர் கோவிலை
நோக்கிப் போனான்.

சீனிவாசன் கருந்தட்டான்குடியில் இறங்கி சாலை
யோரம் இருக்கிற ஒரு கடையில் டீ குடித்தான். முகத்தை
துணியால் துடைத்துக் கொண்டு, பையைத் தோளில்
மாட்டிக் கொண்டு கரந்தை மகாதேவர் கோவிலுக்குப்
போனான்.

மெல்ல வெளிச்சம் குறையத் துவங்கியது.

வேறொரு கடையில் பெட்ரோமாக்ஸ் விளக்கில்
காற்றடிக்க ஆரம்பித்தார்கள்.

மகாதேவர் கோவிலைச் சுற்றி மண் தரை இருந்தது.
நடக்க மெத்து மெத்து என்று கால் பட்டது.

தஞ்சாவூரில் இந்நேரம் எல்லா நாட்டியமும் முடிந்திருக்கும் கணக்கு வழக்குகளை பைசல் செய்து விட்டு வர இன்னும் அரை மணி நேரம் ஆகலாம்.

ஆனால் இந்த மாதிரியான நேரத்தில்தான் வில்போர் துவங்கியது. ராசராசருக்கு பகலில் இருந்து விண்ணப்பித்து விண்ணப்பித்து, அவரும் தலையாட்டியபடியே இருந்தார்.

திடீரென்று நினைவுக்கு வந்தவர்போல தஞ்சையை விட்டு கிளம்பி கரந்தை சாந்துமேட்டிற்கு வந்துவிட்டார். அவர் வரும் வரை ஒருவரை ஒருவர் ஏசிக் கொண்டிருந்த மறவர் கூட்டம் சட்டென்று அமைதியாகியது.

'எதற்காக போர்' என்று விசாரித்தார்.

முத்தரையன்னும் காரிக்குளிப்பாகையும் ஒரே பெண்ணை விரும்புகிறார்கள். யார் அப்பெண்ணை மணமுடிப்பது என்பதில் அவர்களுக்கு சண்டை இருக்கிறது. அந்தப் பெண் இன்னாரைத்தான் விரும்புகிறேன் என்று சொல்லவுமில்லை. எனவே போர் தவிர்க்க முடியாததாகி விட்டது என்று சொல்லப்பட்டது.

நாண் அவிழ்த்த விற்கள் தரையில் இருந்தன. முத்தரையன்னும் காரிக்குளிப்பாகை எதிரெதிரே நின்றிருந்தார்கள் ராசராசன் எழுந்தபோது மேற்கு திசையில் வெளிச்சம் பரவிக் கிடந்தது.

அருண்மொழி கூட்டத்தின் வெளி வட்டத்தில் விடுதலையோடு சற்று நேரம் தாமதித்தான்.

மூச்சிறைக்க பரமி வந்தபோது குதிரையை ஆட்களை இழுத்தவாறு உள்வட்டத்தில் செலுத்தினான். குதிரையின் பின்புறம் பரமி மேல் துணியால் உடம்பைப் போர்த்தியபடி வந்தாள்.



சீனிவாசன் உள்ளே நுழைந்த போது மகாதேவர் கருவறையில் மட்டுமே அகல் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. வெளிச்சம் இருக்கும் போதே கோயிலுக்கு விளக்கு போட்டு விட்டுப் போய் விடவேண்டும். சற்று இருட்டி விட்டால் கை கால்களை இழுத்துக் கொள்ளாமல் வெளியே வருவது சற்று கஷ்டம்.

சீனிவாசன் தெருவை அடுத்த உட்பிரகாரத்தின் வழியாய் கோயிலை வலம் வந்தான். கோயிலுக்குப் பின்புறமாய் இருக்கும் மேற்குப்புற சுவரில் அமர்ந்து கொண்டான்.

இங்கேதான் கல்வெட்டு வெட்டப்பட்டது. இங்கிருந்து இருநூறு தப்படிகள் நடந்தால்,அங்குதான் அந்தப் போர் நடந்தது. இந்தக் கோவிலுக்கு வந்து திருநீர் பூசி விட்டுதான் இராஜராஜர் வில் போர் பார்க்க உட்கார்ந்து விட்டார்.

இங்கிருந்து இருநூறு தப்படிகள் நடந்தால் பரமி நின்ற இடம் வந்துவிடும். மகாதேவர் கோவில் தாண்டி கோவிலுக்கு நேராக வெளியே போனான்.

சூரியனுடைய பாதி வட்டம் மேற்கில் மறைந்து விட்டது. மற்றொரு பாதி சிகப்பை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறது.

அந்த சிகப்பு, வானத்தின் உச்சி வரை பரவியிருக்கிறது. கிழக்கு சாம்பல் பூக்க ஆரம்பித்து விட்டது.

கதிர் மறைய இருட்டு கிழக்கில் இருந்து கடக்க ஆரம்பித்து விடும்.

முத்தரையன்னன் அம்பு கூர்மையைப் பார்த்துக் கொண்டு இருந்தான். காரிக்குளிப்பாகை கோபத்தோடு முன்னும் பின்னும் தனக்குத் தானே பேசியபடி கத்தி அலைந்து கொண்டிருந்தான்.

அவன் உள்வட்டத்துக்குள் நுழைந்த பின் அருண் மொழி குதிரையை பின்னுக்குத் தள்ளி விட, அந்த குதிரையை வாங்கி வெளியே கொண்டு போய் யாரோ கட்டினார்கள்.

இங்கே நடக்கப் போகும் மரணம் பற்றி அவனுக்கு வருத்தமாக இருந்தது. தேவையின்றி ஒரு உயிர்க் கொலை நடக்கப் போகிறது என்று வேதனை வந்தது. ஆனால் உயிர்க் கொலைக்கு பழக்கப்பட்ட சோழர் மக்கள், தங்களுள் தாங்களே அடித்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

ஏதேனும் ஒரு கட்டத்தில் ராஜராஜதேவர் இதற்கு சண்டை வேண்டாம் என்று சொல்லி விடலாம். அந்தப் பெண் பிள்ளையைக் கூப்பிட்டு விசாரிக்கலாம். ஆனால் ஊர், சண்டை வர ஆசைப்படுகிறது.

ஒரு பெண்ணுக்கு இரண்டு பேர் புருஷனாக முடியுமா? யாராவது ஒருத்தர்தான் உயிரோடு இருக்க வேண்டும் என்று கூக்குரலிடும்.

சீனிவாசன் அந்த வயல்காட்டில் நின்ற போது கரந்தைக்குள் அம்பாசிடர் கார் நுழைந்தது. மகாதேவர் கோவில் ஒட்டி நிறுத்தப்பட்டது. பாண்டிமாதேவி இறங்கி மேற்குப் புறத்தின் வழியாக கிழக்குப்புறம் வந்தாள்.

மகாதேவர் கோவிலில் காலடி வைத்தாள். யாரோ கூப்பிடுவதைப் போல் திரும்பிப் பார்த்தாள்.



தொலைவில் அவன் நின்று கொண்டிருந்தான். அவன் இருப்பதைப் பார்த்து விட்டு அவனை நோக்கி வேகமாய் போனாள்.

ஊரில் இருந்த சிலபேர் அவளை அடையாளம் கண்டு கொண்டார்கள். 'நாங்க வரட்டுமா?' என பின் தொடர்ந்து கேட்டார்கள்.

நின்று, வேண்டாம் என்று மறுத்தாள். சீனிவாசனை நோக்கிப் போனாள். அவளுக்கு மூச்சு வாங்கியது. வானம் முழுவதும் சிகப்பாகியது.

''இந்த இடம்தானா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்'' என்று அவன் பதில் சொன்னான்.

''இங்குதான் அந்த சண்டை நடந்ததா?''

'ஆம்' என்று அவன் தலையாட்டினான்.

''காலையில் இருந்து பல்வேறு விஷயத்தை மனது அனுபவித்து வருகிறது. உங்களுக்கும். அப்படியா?'' என்று கேட்டாள்.

அவன் ''ஆமாம்'' என பதில் சொன்னான்.

''இறந்த காலமும் நிகழ் காலமும் ஒரே நேரத்தில் உணர முடிகிறது'' என்றான்.

''நானும் அப்படியே உணர்ந்தேன். இன்று நடனமாடியவர்கள் எல்லோரும் நிவந்தம் வாங்கியவர்கள்.'.

வெளியே யாருக்கும் காட்டாமல் அங்கங்கே சில நூறு பேர்களுக்கு இந்த சோழ சாம்ராஜ்யக் கனவுகள் ஏற்படுகின்றன. புரிந்து கொண்டவர்கள் கவனமாக இருக்கிறார்

கள். புரியாதவர்கள் இது ஏதோ மயக்கம் என்று பயப்படு கிறார்கள்.

ராசராசத் தேவர் எழுந்து மேல் அங்கியை வீசி விட்டார்.

முத்தரையன்னும் காரிக்குளிப்பாகையும் நாண் தொடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

காரிக்குளிப்பாகையின் நாண் நெகிழ்ந்து விட்டது. முத்தரையன்னின் நாண் 'விண்'ணென்று அதிர்கிறது.

காரிக்குளிப்பாகையின் இடது தோளில் முத்தரையன்னின் அம்பு குத்தி நின்றது.

உள்ளே இருதயக் குழாய் அறுந்து, ரத்தம் பீறிட்டு, கண்கள் சொருக காரிக்குளிப்பாகை இறந்து போகிறான். கூட்டம் பேய்க் கூச்சலிடுகிறது.

அருண்மொழி குதிரையை வாங்கிக் கொண்டு கூட்டம் விட்டு வெளியே போகிறான்.

ஒரு மரத்தின் மறைவில் இருந்து பரமி வெளியே வருகிறாள்.

''இனி நீ முத்தரையன்னின் சொத்து...'' அருண்மொழி தாழ்மையுடன் மெல்ல சொன்னான்.

''இல்லை. நான் எவர் சொத்தும் இல்லை. எவருக்கும் நான் அடிமையாகப் போவதில்லை உங்கள் குதிரையில் என்னை தொண்டை மண்டலம் கொண்டு போய் விட்டு விடுவீர்களா? சோழர் தேசத்தை விட தொண்டை மண்டலத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு அதிகம். எனக்கு எழுதப் படிக்கத் தெரியும். தொண்டை மண்டலம் போய் சூள இலட்சினை இட்டுக் கொண்டு தேவர் அடியார்களாகவோ இல்லை வணிகர்களின் சொத்தை நிர்வகிக்கும் அதிகாரிச்சியாக இருப்பேன்.''



''ஒருவேளை அங்கு மோசமான ஆட்களால் உனக்கு கேடு ஏதும் விளைந்தால்...''

''உங்கள் பெயர் சொல்லி தப்பித்துக் கொள்வேன். உங்கள் வீட்டில் ஊழியம் செய்ததாக சொல்லிக் கொள்வேன். புலிச்சின்னமும் தீத்தழலும் கொண்ட காசை எனக்குக் கொடுங்கள். நான் அதை மோதிரமாக போட்டுக் கொள்கிறேன்.''

''திருமணமே வேண்டாம் என்கிற முடிவா''

''தொடர்ந்து பல பேரால் பாதிக்கப்பட்ட சோழர் தேசத்தில் வேறு பல வேலைகள் இருக்கின்றன. வழிநடை சத்திரங்களை சரி செய்ய வேண்டும் என்பது என் விருப்பம்.''

அருண்மொழி அவளுக்கு கை கொடுத்து தன் குதிரையில் ஏற்றிக் கொண்டான்.

இரவு முழுவதும் குதிரையில் நடந்து, விடிகின்ற நேரம் கங்கை கொண்ட சோழர் புரம் கொண்டுபோய் விட்டான்.

அறிமுக ஓலையும் பிரம்மராயன் அதிகாரிச்சி என்கிற முத்திரை மோதிரமும் கொடுத்தான். 'பின் சந்திப்போம்' என்று உரக்கக் குரல் கொடுத்தான்.

தஞ்சைப் பெருவழி நோக்கித் திரும்பினான்.

''அதற்குப் பிறகு இப்போதுதான் பார்க்கிறோம். இல்லையா?'' பாண்டிமாதேவி கேட்க, சீனிவாசன் 'ஆம்' என்று தலையசைக்கத் தொடங்கினான்.

சூரியன் மறைந்து இருட்டத் தொடங்கியது.

''நான் சென்னை போகிறேன். வருகிறீர்களா?'' பாண்டிமாதேவி கேட்க, சீனிவாசன் மறுபேச்சு ஏதும் பேசாமல் வண்டியின் பின்பக்கம் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

கார் கிளம்பும்போது வடக்கே இருந்து தெற்கே யாரோ யாரையோ துரத்திக்கொண்டு ஓடினார்கள்.

கார் நெடுஞ்சாலையை அடைந்தபோது, வாகனங்கள் மறிக்கப்பட்டு நின்றிருந்தன.

''என்ன விஷயம்?'' என்று கேட்கப்பட்டபோது...

''உறவுமுறை பொண்ணெடுக்கற சண்டைங்க. ரெண்டு மாமன்காரனும் சண்டை போட்டுக்கறானுங்க. இன்னேரம் ஏதோ ஒரு முடிவு ஏற்பட்டிருக்கும்'' அலட்சிய மாக தகவல் சொல்லப்பட்டது.

எதிர்ப்பக்க வண்டிகள் போனபிறகு இவர்கள் பக்க வண்டிகள் போக அனுமதிக்கப்பட்டது.

இவர்களுக்கு முன்னால் போன பேருந்தை நிறுத்தி, அதில் யாரையோ ஏற்ற ஒரு கூட்டம் முயற்சி செய்தது. கண்டக்டர், 'ஏற்ற முடியாது' என்று கத்திக் கொண்டி ருந்தார்.

ஜனங்கள் பாய்ந்து கண்டக்டரை அப்புறப்படுத்தி, வண்டியில் குத்துப்பட்டவரை ஏற்றினார்கள். வடக்கு நோக்கி எல்லா வண்டிகளும் போகத் துவங்கின.

''இப்போது குத்துப்பட்டது காரிக்குளிப்பாகையா? முத்தரையன்னா?'' சீனிவாசன் பாண்டிமாதேவியைக் கேட்டான்.



''முத்தரையன், போன முறை என்ன நடந்ததோ அதற்கு எதிர் மாறாக இப்போது நடக்கும் நான் உங்களை சென்னைக்கு கொண்டு போய் விடுவதுகூட இவ்விதம் தான்.

பஸ் ஓரமாய் நின்றது. கார், பஸ்ஸைத் தாண்டி யது.

அந்த முத்தரையன் செத்துப் போயிருக்க வேண்டும்... பஸ்ஸிலிருந்து மிகப் பெரிய அழுகை ஓலம் கிளம்பி, காதில் விழுந்தது.

ஒரு கடன் கணக்கு தீர்ந்து விட்டது.

**முற்றும்**